KALKI 22.5.88 ரூ. 2.

கல்கி



தனிக்
கட்சிக்கு
அவசியம்
என்ன?


நான் ஸின்த்தால் உபயோகிக்கிறேன். நீங்கள்?
Godrej
NEW CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
வினோதின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தன்னம்பிக்கை தருவது ஸின்த்தால்
MADISON-G-001-TAM



தெற்கத்திக் கள்ளன்

மலேசியா வாசுதேவன் விஜயம் என்றதும் சந்தையில் இருக்கும் அத்தனை கன்னிப் பெண்களும் சட்சட்டென்று ஒரு மஞ்சள் கயிற்றை எடுத்துக் கழுத்தில் கட்டிக் கொள்கிறார்கள்.

எதற்கென்று பார்த்தால் கல்யாணம் ஆகாத பெண்களிடம்தான் மலேசியா வாசுதேவன் 'விளையாடுவாராம்'.

சரி, கதை, வயல் அதில் இருக்கும் பச்சைப்பசேல், பம்ப்செட், மயிலைக் காளை, சாயங்கால சூரியன் என்று கிராமத்தையே சுற்றிச் சுற்றி வரப்போகிறது என்று பார்த்தால்...

குடுமி வைத்த தெற்கத்திக் கள்ளன் சூப்பர் சுப்பராயன் தயவில் ஒரு ஸ்டண்டில் ஈடுபட்டு விட்டு, எல்.ஐ.ஸி, சென்ட்ரல், லைட்ஹவுஸ், அண்ணாசிலை, டீஸல் புகை என்று மெட்ராஸுக்கு வந்து விடுகிறார்.

கட்.

ராதிகா சாலையில் ரூபாய் நோட்டுகளை விசிறி அடித்து விட்டு அதை அப்பாவி ஜனங்கள் ஆவலுடன் பொறுக்கியவுடன் அவர்களைப் போலீஸில் மாட்டி விட்டுக் கல கல எனக் கைகொட்டிச் சிரித்து...

இங்கே வந்து சேருகிறார் தெற்கத்திக் கள்ளன்.

ராதிகா எதிர்பார்த்தபடியே குடுமி மச்சான் ரூபாய் நோட்டுக்களைப் பொறுக்குகிறார். ராதிகா எதிர்பார்க்காதபடி அவற்றைப் பிள்ளையார் கோவில் உண்டியலில் போட்டு விடுகிறார்.

ரூபாய் நோட்டை விசிறியடிக்கும் அல்ட்ரா மாடர்ன் ராதிகாவை அறிமுகப் படுத்தும் விதமும் சரி, அதை ராதிகா பயன்படுத்திக் கொண்டிருக்கும் விதமும் சரி... திட்டப்பட்ட விஷயங்கள்.

ரவிச்சந்திரனும் கலக்ஷ்ணாவும் சேர்ந்து ராதிகாவிற்கு நிபந்தனை போட்டு விடுகிறார்கள். 'ஊதாரி ராதிகாவே, நீ கல்யாணம் செய்து கொண்டால்தான் சொத்து உனக்கு வந்து சேரும்' என்று.

ராதிகா, டூப் விஜய்காந்தைத் தன் கணவனாக நடிக்கும்படி கேட்டுக் கொள்ள, தெற்கத்திக்கள்ளன் அதற்குச் சம்மதிக்க... காதுல மாலை!

ராதிகாவின் சதித் திட்டம் அம்பலமானவுடன் கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தால் தான் உனக்கு விமோசனம் என்று சொல்லப்பட்டுவிட, ராதிகா கிராமத்திற்கு வருகிறார்.

மறுபடி வயல், தோப்பு, தென்னைமரம், ஊர்ப் பஞ்சாயத்து.

ராதிகா மலேசியா வாசுதேவனின் பார்வையில் படுகிறார்.

டிஷ்யூம்... டிஷ்யூம்.. டிஷ்... டிஷ்... டிஷ்யூம்...

'கண்ணே... கண்ணாளா...' விஜய்காந்த் – ராதிகா இணைய, ஒரு பக்கம் சுபம். ஒரு பக்கம் கழுதை மேல் மலேசியா வாசுதேவன் ஏற்றப்பட்டு ஊர்ப் பெண்களால் துரத்தப் படுதல்.

விட்டார்களய்யா ஆளை.

டைரக்டர் ஒவ்வொரு காரெக்டராக அந்தரத்தில் தொங்கவிட்டுக் கொண்டு வந்து விடுகிறார், 'நமக்கு ஏன் வம்பு' என்பது போல.

விஜய்காந்த் – ராதிகா வழக்கம் போல.

நடிப்பதற்கென்று ரவிச்சந்திரன், வி. கே. ராமசாமி, எஸ். எஸ். சந்திரன், ஜனகராஜ், மலேசியா வாசுதேவன், வெண்ணிற ஆடை மூர்த்தி, கலக்ஷ்ணா, காந்திமதி, நாட்டி பத்மினி என்று ஒரு பட்டாளமே இருக்கிறது. இருந்து என்ன செய்ய?

இரண்டு பாடல்களில் இளையராஜா தெரிகிறார்.

திரைக்கதை அங்கங்கே பொத்துக் கொண்ட ஓலைக் கூரை மாதிரி தெரிகிறதா.. அதனாலேயே 'சபாஷ், வெரி நட், பிச்சு உதறிட்டான்யா' போன்ற வார்த்தைகள் எல்லாம் ஞாபகத்திற்கே வர மாட்டேன் என்கிறது.

— ஜெயமன்மதன்.

தனிக்கட்சிக்கு அவசியம் என்ன?

ஸாரி, தவிர்க்க முடியாமல் ஒரு முன்னுரை. சிவாஜியைப் புகைப் படங்கள், வண்ணப்படங்கள் எடுக்கத் தேதி, நேரம் குறிப்பிட்டுச் சொன்னவர்கள், வழக்கமில்லாத புதுமையாகக் கேள்விகளை முன்கூட்டியே எழுதித் தருமாறு சிவாஜி சார்பில் கோரினார்கள். பதில்களுக்கு ஏற்பத் துணைக் கேள்விகள் தொடுக்க வேண்டியிருக்கும் என்றும் மேலும் பதில்களுக்கு ஏற்ப கேள்விகளின் அமைப்பு வரிசை மாறும் என்றும் விளக்கினோம்.

''நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான்; நாங்களும் ஒரு அவுட்லைன் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் முன்கூட்டியே கேட்கிறோம்; பேட்டி காணும்போது நீங்கள் மற்ற கேள்விகளையும் கேட்கலாம்'' என்றார்கள். கேள்விகளை எழுதித் தந்தோம்.

வாக்களித்தது வேறு; நடந்தது வேறு. கேள்விகளுக்கான பதில்களை எழுதித் தந்து விட்டார்கள். ''நேரில் பேட்டி காண்பது சாத்தியமில்லை; அண்ணன் ரொம்ப பிஸி'' என்று கூறிவிட்டார்கள். பலவிதமாக, எவ்வளவோ வாதாடியும் பயனில்லை. மேலும், அவர்கள் தந்துள்ள பதில்களைச் சுருக்காமலும் மாற்றாமலும் பிரசுரிக்க வேண்டும் என்றார்கள்.

அதன்படியே பிரசுரித்திருக்கிறோம்.

பதில்கள் சிலவற்றில் முழுமை இல்லாதது போல் தோன்றினால் அதற்குத் துணைக் கேள்விகள் தொடுக்க முடியாமல் போனதுதான் காரணம்.

நாங்கள் கேட்க எண்ணுகிற, சிவாஜி பதில் கூற மறுத்துவிட்ட — துணைக் கேள்விகளை ஆங்காங்கே அடைப்புக் குறிகளுக்குள் தந்துள்ளோம்.

கேள்வி: ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்கு முன்பு உங்களைக் கல்கி சார்பில் பேட்டி கண்ட போது, 'ஒருநாள் இந்தத் தமிழகத்தின் ஆட்சியைக் காங்கிரஸிடம் கொடுக்காமல் கண் மூட மாட்டேன்...' என்று சொன்னீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் இப்போது காங்கிரஸிலிருந்து விலகக் காரணம் என்ன?

சிவாஜி: காங்கிரஸின் மீது நான் கொண்டிருந்த பக்தி — அதன் புனிதத் தன்மை எவராலும் மாசுபடுத்த முடியாதது என்று நான் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை — தன்னலம் கருதாத தியாகிகளின் கூடாரம் காங்கிரஸ்தான் என்று என் நெஞ்சில் என் அன்புத் தலைவர் காமராஜர் எழுதி வைத்த பட்டயம் — இவற்றையெல்லாம் இடையில் வந்த சுகபோகிகள், ஒரே நாளில் தங்கள் சொந்த நலனுக்காகச் சுக்கு நூறாக்கிப் போட்டு விடுவார்கள் என்று நான் கனவு கூடக் கண்டதில்லை. நம்ப வைத்து நடு முதுகில் குத்திய ஒரு நயவஞ்சக நாடகம், கால் நூற்றாண்டு காலத்து என் நம்பிக்கையைச் சிதைத்துச் சின்னா பின்னப் படுத்தி விட்ட பிறகும் நான் அங்கே ஒட்டிக் கொண்டிருக்க முடியுமா?

(இடையில் வந்த சுக போகிகள் என்று நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?)

நீங்கள் என்ன ட்யூப் லைட்டா?



கேள்வி: முந்தைய பேட்டியின் போது ஓரிடத்தில், 'சில விஷயங்களில் உங்கள் பலத்தை நீங்கள் உணராமல் பயப்படுகிறீர்களோ என்று சந்தேகப்படுகிறோம்: எதையும் தைரியமாகத் துவங்க வேண்டாமா?' என்று கேட்ட போது, நீங்கள், 'அரசியலைப் பொறுத்தவரை சில விஷயங்களில் நாணல் மாதிரி வளைந்துதான் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவ்வப்போது வரும் சூறைக் காற்றிலிருந்து தப்ப முடியும். அரசியலில் பணிவும் பொறுமையுமே ராஜதந்திரம்...' என்றீர்கள். ஆனால் இப்போதோ நீங்கள் நாணல் மாதிரி வளைந்து கொடுக்காமல்... வெளியே வந்து விட்டீர்களே?

சிவாஜி: என் பலம் என்ன — தமிழக அரசியலில் என் சக்தி என்ன என்பதை என்னை விட நீங்கள் நன்கு அறிவீர்கள். அச்சம் என்ற ஒரு சொல் நான் அறியாத ஒன்று. அதே நேரத்தில் அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்ற குறளையும் படித்து அறிந்தவன் நான். அரசியலில் அடித்த சூறைக் காற்றிலிருந்து தப்ப நாணல் மாதிரி வளைந்து கொடுத்துக் கொண்டுதான் இருந்தேன் — இருபத்தைந்து வருஷங்களாக! ஆனால் அப்படி வளைந்து நிற்பது காலத்தின் வேகத்திற்காக — ராஜதந்திரத்திற்காக என்பதை மறந்து விட்டு என்னைக் கூனனாகச் சித்திரிக்க ஆரம்பித்த பிறகுதான் நிமிர்ந்து நின்றேன்: நிற்கிறேன்!

(உங்களை யார், எப்போது, எதற்காகக் கூனனாகச் சித்திரிக்க ஆரம்பித்தார்கள்?)

கேள்வி: முன்பு நீங்கள் தி.மு.க.விலிருந்து விலகிக் காங்கிரஸுக்குச் சென்றதற்கு என்ன காரணம்?

சிவாஜி: தி.மு.க. விலிருந்து நான் வெளியேறவில்லை; ஓரங்கட்டப்பட்டேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நாணயமும் நேர்மையும் என்னை அவர்பால் இழுத்துச் சென்றது.

(தி.மு.க. வில் நீங்கள் யாரால் ஓரங்கட்டப் பட்டீர்கள்? எதற்காக ஓரங்கட்டினார்கள்?)

கேள்வி: தேசியக் கட்சியிலிருந்து விலகிப் பார்வையை ஒரு பிராந்திய அளவில் சுருக்கிக் கொண்டது கஷ்டமாக இல்லையா? தேசியக் கட்சியிலிருந்து விலகிய நீங்கள் வேறொரு தேசியக் கட்சியிலல்லவா சேர்ந்திருக்க வேண்டும்? சேராததன் காரணம்?

சிவாஜி: தேசியப் பார்வை என்கிறீர்கள். பார்வை ஒன்றுதான். ஆனால் திசைகள் எத்தனை! இந்த மீனுக்கு ஊர்க் குளத்தில் சுற்றி வருவதென்பது சிரமம்தான்! என்றாலும் குளம் நம்ம ஊர்க் குளமாயிற்றே! முதலில் இதைத் தூர் எடுத்துத் தூய்மைப் படுத்த வேண்டாமா?

(இந்த நம்ம ஊர்க் குளத்தைத் தூர் எடுக்கும் எண்ணம் இத்தனை நாட்களாக இல்லாமல் இப்போது திடீரென்று வருவானேன்?)

கேள்வி: ஜானகி அணியைக் காங்கிரஸ் ஆதரிக்கவில்லை என்பதற்காகத்தான் விலகினீர்கள் இல்லையா?

சிவாஜி: உங்கள் கேள்வி நூற்றுக்கு நூறு தவறானது. ஒரு கட்சிக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள். அது உடைய — குடை சாய நாம் காரணமாக இருக்கக் கூடாது என்று வாதாடினேன்; போராடி



ஆமாம் என்று என்னைச் சொல்ல வைத்து, அதில் குளிர் காய்வதில் உங்களுக்கு ஏன் அப்படியொரு ஆசை?

னேன். ஆனால், கோளாக் காதர்களாகக் கேடு கெட்ட சிலரின் தூண்டுதலினால் தமிழகத்தில் ஒரு தர்மக் கொலையே நடந்தது. அந்தக் கொலைக்கு நாங்கள் உடந்தை இல்லை என்பதை நிரூபிக்கத்தான் நானும் எனது இதயங்களும் கட்சியை விட்டு வெளியேறினோம்.

கேள்வி: நீங்கள் விலகியதற்குக் காங்கிரஸ் கட்சி ஜானகி அணியைச் சட்டசபையில் ஆதரிக்கவில்லை என்பதுதான் காரணம் என்றால், அந்தச் சமயத்தில் காங்கிரஸ் மேலிடம் சொன்ன மாதிரி, உங்கள் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் ஜானகி அணியினரோடு ரகசிய உடன்பாடு கொண்டிருந்தார்கள் என்பது உண்மையாகி விடுகிறதே! அப்படி இல்லை எனில், கட்சித் தலைமையின் முடிவை நீங்கள் எதிர்க்க வேண்டிய அவசியம் என்ன?

சிவாஜி: உங்களின் விஷமத்தனமான கேள்வி எனக்குக் கோபமூட்டவில்லை. ஏனெனில் விஷமங்கள் எனக்கு நீண்ட நாட்களாகவே விளையாட்டுத் தோழர்கள். ரகசிய உடன்பாடு — நான் கோடி வாங்கினேன் என்பதெல்லாம் நோபல் பரிசு பெற வேண்டிய அற்புதமான கற்பனைக் கதைகள். கட்டுக் கதைகளை இட்டுக் கட்டி இந்தக் கணேசனை அழிக்க முடியாது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

(ஜானகி அணியினரோடு ரகசிய உடன்பாடு என்பது நமது விஷமத்தனமான கேள்வி அல்ல. காங்கிரஸ் மேலிடம் கூறியதைத்தானே நாங்கள் இப்போது உங்களிடம் நேருக்கு நேர் கேட்டிருக்கிறோம்?)

கேள்வி: போஃபர்ஸ், நீர் மூழ்கிக் கப்பல், பேர்ஃபாக்ஸ்.. போன்ற ஊழல்களைச் சுட்டிக் காட்டி நீங்கள் காங்கிரஸிலிருந்து விலகவில்லையே? அப்படிச் சொல்லி விலகியிருந்தால் உங்கள் விலகல் தூய்மையானதோர் விலகலாக இருந்திருக்கும். இப்போதைய விலகலோ சுயநலம் போலல்லவா ஆகி விட்டது?

சிவாஜி: நீங்கள் சொல்லுகிற ஊழல்கள் திரை மறைவில் நடந்த திருட்டுத்தனங்கள்... ஆனால் இவர்களை முழுக்க முழுக்க நம்பிய ஒரு தலைவன் இறந்து மூன்று வாரங்கள் கூட முடியாத போது அந்தத் தலைவனின் சவத்தின் முதுகில் குத்தியதை — இரக்கம் என்னும் ஒரு பொருளிலா அரக்கர்களாக இவர்கள் நடந்து கொண்டதை — நேரில் கண்டவன் நான். ரகசிய ஊழல்களுக்காக வெளியேறுவதை விட, நானே நேரில் கண்ட வரலாறு 'கண்டறியாத் துரோகத்திற்காக வெளியேறியது உத்தமமல்லவா?

(ஆக, ஜானகி அணியைக் காங்கிரஸ் ஆதரித்திருக்குமானால், போஃபர்ஸ்... போன்ற ஊழல்களைப் பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்பட மாட்டீர்களா?)

கேள்வி: உங்கள் விலகல் பற்றிக் குறிப்பிட்டபோது, மூப்பனார் கூட 'அவசரப்பட்டு விட்டார்' என்றுதான் கூறியிருக்கிறார். அது பற்றி உங்கள் கருத்து?

சிவாஜி: நீங்கள் என்ன ட்யூப் லைட்டா? நான் அவசரப்பட்டு விட்டேன் என்று மூப்பனார் ஏன் சொன்னார்? அவர் தீட்டித் தந்த துரோக நாடகத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்து, அவரை முதலமைச்சராக்கி — அவர் கழுத்தில் நான் மாலையிட்டுப் பாராட்டி விட்டுப் போவேன் என்று நினைத்தார். அது நடக்கவில்லை. அதனால்தான் நான் அவசரப்பட்டு விட்டேன் என்கிறார்.

(ஆக, ஜானகி அணியைக் காங்கிரஸ் ஆதரிக்காமல் போனதற்குக் காரணம் மூப்பனார்தானா?)

கேள்வி: தமிழகத்திலுள்ள இத்தனை கட்சிகளுக்கிடையில் இன்னொரு புதிய கட்சிக்கான அவசியம் — நெருக்கடி என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?


என் தாத்தா – இந்த வயதிலும் என்ன துடிப்பு !
தாத்தாவுக்கு வயதாகிக் கொண்டே போகிறது. உடம்போட செயலாற்றல் குறைந்து கொண்டே வருகிறது. அவர் இப்போது குறைவாகச் சாப்பிடுகிறார்.
அவர் தனது ஊட்டச்சத்துக்களை காம்ப்ளான் மூலம் நிறைவு செய்கிறார்.
எளிதாக ஜீரணிக்கக் கூடிய காம்ப்ளான், உங்கள் உடலுக்குத் தேவையான 23 ஊட்டச்சத்துணவுகளைக் கொண்டதாகும். தேய்ந்த உடல் திசுக்களைப் புதுப்பிப்பதற்கான பால் புரதம், சக்தி பெறுவதற்கான கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புச்சத்து. உடல் நலத்திற்கான வைட்டமின் மற்றும் தாதுக்கள் ஆகியவற்றை கொண்டதாகும் காம்ப்ளான்.
Complan
23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை.
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு

மாணவ மணிகளே!
கோடை விடுமுறையை
பயனுள்ளதாக்க இதோ ஓர்
அரிய வாய்ப்பு!

பாரத ஸ்டேட் பாங்கும்
ஸ்ரீராம் டிரஸ்ட்டும் (அமுதசுரபி)

SHRIRAM GROUP COMPANIES
MADRAS
SHRIRAM TRUST

இணைந்து நடத்தும் கட்டுரைப் போட்டி.

கட்டுரைத் தலைப்பு :

எதிர்கால இளைஞர்களை உருவாக்குவதில் பெரும் பங்கு பெற வேண்டியது.

1. கல்வி அறிவு
2. உடல் நலம்
3. விடாமுயற்சியும் உழைப்பும்

மேற்சொன்ன ஒவ்வொரு தலைப்பிலும் சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகளை எழுதிய மாணவருக்கு வரும் கல்வியாண்டில்(1988-89)கல்விக் கட்டணங்களை (ரூ. 500 முதல் ரூ. 1000/-க்கு மேற்படாத தொகையை) பாரத ஸ்டேட் பாங்கு கொடுத்து உதவும்.

+2 மாணவருக்கு - 3 பரிசுகள், 3 தலைப்புகளுக்கும். இளநிலை பட்டத் தேர்வு எழுதும் மாணவர் மூவருக்கு-3 பரிசுகள், 3 தலைப்புகளுக்கும். இப்போட்டியில் வெற்றி பெற்று ஆனால் பள்ளி பட்டத் தேர்வில் தேர்வுறாத மாணவர்களுக்குக் கல்விக் கட்டணங்களுக்குப் பதிலாக ரூ. 500/- மட்டும் அன்பளிப்பு வழங்கப்படும்.

கட்டுரையுடன் :

பெயர், முகவரி, வயது, பெற்றோர் பெயர், படிக்கும் வகுப்பு, கல்லூரி/ பள்ளி முகவரியும் குறிப்பிட வேண்டும். கட்டுரை சொந்தமாக எழுதப்பட்டது என்பதற்குப் பள்ளி தலைமை ஆசிரியர்/ கல்லூரி முதல்வர் சான்றிதழ் தனியே இணைக்க வேண்டும். அஞ்சல் வழி படிப்பவர்கள் அதற்கான சான்றிதழ் இணைக்க வேண்டும்.

மூன்று தலைப்பிலும் ஒருவரே எழுதலாம். பரிசு பெற்றக் கட்டுரை அமுதசுரபியில் வெளியிடப்படும். (கட்டுரையின் பதிப்பு உரிமை பாரத ஸ்டேட் வங்கியையும், அமுதசுரபியையும் சேரும்).

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 31.5.88 மாலை 5 மணிக்குள்.

கட்டுரை அனுப்பவேண்டிய முகவரி :
மாணவர் கட்டுரைப் போட்டி,
அமுதசுரபி, தபால்பை எண் : 5043,
145, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை 600 001.

* மேற்கொண்டு விவரங்களை அமுதசுரபி மே இதழில் காணலாம்.

ADWAVE/ST/3554



''டி. வி.யில 'சிந்திக்க ஒரு நொடி' யில கலந்துக்கப் போறேன்னு போயிட்டு ஏன் சீக்கிரம் திரும்பி வந்துட்டே?''

''சிந்திக்க ஒரு மணி நடத்தறப்பச் சொல்லி அனுப்பறோம்னு சொல்லிட்டாங்க.''

— வி. ஐ. குமார்.

சிவாஜி: தாய்த் தமிழகத்தை வளப்படுத்திட, அதற்கு வாழ்வு பெற்றுத் தந்திட எத்தனை குரல்கள் எழும்பினால் என்ன? எத்தனை கரங்கள் உயர்ந்தால் என்ன? அதோடு எங்கள் குரலும் கரங்களும்தான் சேரட்டுமே?

கேள்வி: ஜானகி — ஜெயலலிதா அணிகள் மாதிரி உங்கள் கட்சியைப் பலப்படுத்துவதற்கான வேலைத் திட்டம் — பொதுக் கூட்டம் போன்றவை உங்களிடம் இல்லையே, ஏன்?

சிவாஜி: நாடு முழுவதும் நன்கு தெரிந்து கொண்டுள்ள ஒரு விஷயத்தை நீங்கள் மட்டும் இன்னமும் தெரிந்து கொள்ளாதது போல் நடிக்கிறீர்களே! உங்களுக்கு யாரோ பூட்டி விட்ட முகமூடியைக் கழற்றி விட்டுப் பாருங்கள்; திரும்பிய திசையெல்லாம் எங்கள் கொடிகள் பறப்பதைப் பார்ப்பீர்கள் — திக்கெட்டும் எங்கள் குரல் ஒலிப்பதைக் கேட்பீர்கள்!

(எங்களுக்கு யாரோ போட்டு விட்ட முகமூடியைக் கழற்றி விட்டுப் பார்க்கச் சொல்லுகிறீர்களே, எங்களுக்கு முகமூடி போட்ட அந்த 'யாரோ'வை நீங்கள் வெளிப்படையாகச் சொன்னால் வசதியாக இருக்கும்!)

கேள்வி: உங்கள் கட்சிக்கு எத்தனை கிளைகள் உள்ளன? எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்? கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை சிவாஜி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கிறதா?

சிவாஜி: நீங்களே ஆச்சரியப்பட்டு மூக்கின் மேல் விரல் வைக்கிற அளவுக்கு எங்கள் வளர்ச்சியை — அதன் வேகத்தை விரைவில் புரிந்து கொள்வீர்கள்.

(இப்போது ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியைத் தான் குறிப்பிட்டுக் காட்டச் சொல்லுகிறோம்?)

கேள்வி: ஜானகி அணிக்காகக் காங்கிரஸை விட்டு வெளியே வந்த நீங்கள், வரும் தேர்தலில் அவர் அணியோடுதான் கூட்டு என்று பகிரங்கமாக அறிவிக்காதது ஏன்?

சிவாஜி: திரும்பத் திரும்பக் கேட்டதையே கேட்டுக் கொண்டிருப்பதில்தான் உங்களுக்கு எத்தனை ஆர்வம்? இப்படிக் கேட்டு, 'ஆமாம்' என்று என்னைச் சொல்ல வைத்து அதில் குளிர் காய்வதில் உங்களுக்கு ஏன் அப்படியொரு ஆசை? அப்படியே உறவு ஏற்பட்டால்தான் என்ன? எந்தக் குடி முழுகி விடப் போகிறது?

கேள்வி: வரப் போகும் தேர்தலில் தனித்துப் போட்டியா? கூட்டு உண்டா? யாரோடு கூட்டு? தி.மு.க. வுடன் என்று பரவலாகப் பேசப்படுகிறதே?

சிவாஜி: ஏற்கெனவே பதில் சொல்லி விட்டேன்.

(ஏற்கெனவே சொன்ன பதில்படி ஜானகி அணியோடுதான் கூட்டு என்றாகிறது? அப்படியானால் தி.மு.க.வுடன் கூட்டு என்று பரவலாகச் சொல்லப்படுவது உண்மையில்லையா? தெளிவாகச் சொல்லுங்கள்...)

கேள்வி: உங்கள் கட்சி எத்தனை இடங்களில் வேட்பாளர்களை நிறுத்த முடியும் என்று கருதுகிறீர்கள்?

சிவாஜி: தேர்தல் தேதி தெரிந்ததும் எங்கள் கட்சி முடிவு செய்யும்.

கேள்வி: வரப் போகும் தேர்தலில் மும்முனைப் போட்டி இருக்குமா? அல்லது நான்கு முனைப் போட்டி இருக்குமா? நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

சிவாஜி: எத்தனை முனையோ! நிச்சயமாகப் போட்டி உண்டு. அது முடிந்ததும் உங்களுக்கென்று ஒரு விசேஷப் பேட்டியும் உண்டு.

கேள்வி: உங்கள் கட்சியின் தேர்தல் பிரசாரம் எதை மையமாக வைத்திருக்கும்?

சிவாஜி: எங்கள் தேர்தல் அறிக்கை தயாராக இருக்கிறது. தேர்தல் வந்ததும் தெரிவிக்கிறோம்.

கேள்வி: உத்தேசமாக எந்த அணி வெற்றி பெறும்? எத்தனை இடங்களில் உங்கள் கட்சி வெற்றி பெறும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

சிவாஜி: இப்போதைக்குச் சொல்ல விரும்பவில்லை.

(வரப் போகும் தேர்தலில் நீங்கள் வோட்டுக் கேட்கச் செல்லும் போது உங்கள் கட்சியின் தூய்மையை மக்களிடம் எந்த விதத்தில் நிரூபித்து வோட்டுக் கேட்பீர்கள்?)

— இளங்கோவன்

அட்டை வண்ணப்படமும், மற்ற படங்களும்:

கே. வி. ஆனந்த்

கல்கி
1988 மே 22
மலர் 46 இதழ் 43
விபவ வைகாசி 9


போஃபோர்ஸ் பூதம் துரத்துகிறது!

'தடையம் ஏதாவது இருந்தால் கட்டிக் காட்டுங்கள் போதும்; சாட்சியங்களை நாங்களே கொண்டு வருகிறோம்!' என்று நாடாளுமன்றத்தில் ராஜீவ் காந்தி முன்பு வீராப்பாகப் பேசியதே ஒரு நாடக வசனம்தான் என்பது தெளிவாகிவிட்டது. அறுபத்தி நாலு கோடி கொள்ளை என்ற முழுப்பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கும் நாடாளுமன்ற ஆய்வுக்குழு அறிக்கையை, எல்லாரும் ஏற்றுக் கொண்டு கைகட்டி, வாய் பொத்தி உட்கார்ந்திருக்க வேண்டும் என்று மத்திய அரசு சார்பில் கேட்டுக் கொள்கிறார் நிதி அமைச்சர் திவாரி.

நாடாளுமன்றக் குழுவின் மழுப்பல் அறிக்கை வெளியான அன்றே, போஃபோர்ஸுக்கும் ஹிந்துஜாவுக்கும் தொடர்பு உண்டு என்பதை நிரூபிக்கும் தஸ்தாவேஜுகளை ஹிந்து நாளிதழ் வெளியிட்டது. இவை பொய்யானவை, தயாரிக்கப்பட்ட சாசனங்கள் என்று புதுதில்லி உயர் மட்டம் குழப்பப் பார்த்தது. நடக்கவில்லை. அவை மெய்யான தஸ்தாவேஜுகளே என்று ஸ்விடனிலேயே ஆராய்ச்சிகள் நடத்தி ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன.

இதைக் கண்ட திட்ட அமைச்சர் சிவசங்கர் புதிதாக ஒரு புழுதியைக் கிளப்பி அதில் அறுபத்திநாலு கோடி மோசடியை மறைக்கப் பார்த்தார். அதாவது, போஃபோர்ஸ் நிறுவன டைரக்டர்கள் கமிஷன் — அதற்கு நஷ்டஈடு என்ற புனைபெயரும் உண்டு — தரப்பட்டதாகக் கணக்கு எழுதிவிட்டு, அத்தொகையைத் தாங்களே விழுங்கி ஏப்பம் விட்டு விட்டார்களாம்! சிவசங்கர் கூறுவது உண்மை என்றே வைத்துக் கொள்வோமானால் அது அந்த நிறுவன டைரக்டர்கள் செய்த மாபெரும் மோசடியாகும். ஸ்விடிஷ் நாட்டுச் சட்டப்படி தண்டிக்கப்படக் கூடிய பெரும் குற்றமாகும். எனவே அந்தப் பணத்தை அவர்கள் எந்த ஸ்விஸ் வங்கியில் போட்டு வைத்தாலும் அதுபற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள ஸ்விடிஷ் அரசுக்கு முழு உரிமை உண்டு. ஆக, இந்தியா செய்ய வேண்டியதெல்லாம் இந்த விவரங்களைப் பெறுமாறு ஸ்விடிஷ் அரசையும், தருமாறு ஸ்விஸ் அரசையும் வற்புறுத்த வேண்டியதுதான். ஆனால் இந்திய அரசு இதை ஏன் செய்ய மாட்டேனென்கிறது?







இத்தகைய பயங்கர ஊழல் நிறுவனத்துடன் இந்திய அரசு வர்த்தகத் தொடர்பு கொள்ளலாமா? 'இந்திய மக்களின் வரிப்பணம் அறுபத்தி நாலு கோடியை நம்பிக்கைத் துரோகம் செய்து விழுங்கியிருக்கிறீர்கள்; அதை உடனே திருப்பித் தாருங்கள்; இல்லாது போனால் இனி உங்களுடன் நாங்கள் வியாபாரம் செய்ய முடியாது; ஏற்கெனவே கையெழுத்தான ஒப்பந்தத்தையும் ரத்து செய்ய நேரிடும்' என்று இந்திய அரசு கூற வேண்டாமா?

இதைத்தான் இந்த ஊழல் பற்றி ராஜ்ய சபையில் பேசிய முன்னாள் ராணுவ அமைச்சர் அருண் சிங் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக் கேட்டிருக்கிறார். இன்றைய இக்கட்டான சூழலில் இந்தியாவின் மானத்தைக் காப்பாற்ற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்சொன்னபடி விவரித்திருக்கிறார். ஆனால் அவற்றை யதார்த்தமற்ற யோசனைகள் என்பதாக நீர்வள அமைச்சர் தினேஷ்சிங் ஒதுக்கித் தள்ளி விட்டார்!

அருண் சிங் மேலும் சொல்கிறார்: 'இடைத்தரகர்கள் கிடையாது' என்று போஃபோர்ஸ் சொன்னதை நம்பி விட்டோம்; அதனை ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்தாக்கத் தவறிவிட்டோம். 'கமிஷன் அல்ல; கமிஷன் இழப்புக்கான நஷ்டஈடு' என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. நஷ்டஈடு எனில் அதனை ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பே போஃபோர்ஸ் தந்திருக்க வேண்டும். கமிஷன் இழப்புக்கு அறுபத்தி நாலு கோடி நஷ்டஈடு என்பது இன்று வரை உலகம் கேள்விப்பட்டிராத ஒன்று. நாடாளுமன்றக் குழு உண்மைகளைக் கண்டறியத் தவறிவிட்டது. அது தன்னை (அருண்சிங்) சாட்சியம் கூற அழைத்திருக்க வேண்டும்.

ராஜீவ் காந்தியை விட்டுக் கொடுக்காமலும், ராணுவ அமைச்சராக இருந்தவர் என்ற முறையில் தாமே தார்மீகப் பொறுப்பேற்றும் அருண்சிங் பேசியுள்ளார். ஆனபோதிலும்,.. அருண்சிங்கின் பேச்சு ராஜீவ் காந்தியின் நிலைமையை மேலும் தர்மசங்கடத்துக்குள்ளாக்குகிறது.

போஃபோர்ஸ் பூதம் துரத்தத் துரத்த, ராஜீவ், நாடாளுமன்றத்தில் தமக்கு ஆதரவைப் பெருக்கிக் கொள்ள விரும்பி, இங்கே ஜெயலலிதா அணியுடன் கூட்டணி அமைக்க உடன்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரிக்கின்றன. இந்த நோக்கில்தான் மூப்பனாரும் மற்றவர்களும், 'தனித்துப் போட்டியிடுவோம்' என்று மார்தட்டிய போதெல்லாம் கூட, ராஜீவ் 'கம்'மென்று இருந்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் ஒன்று. கூட்டணித் திரையால் போஃபோர்ஸ் பூதத்தை மூடி மறைக்க முடியாது. அது திரையைக் கிழித்துக் கொண்டு வெளியே வரும். முன்னிலும் வேகமாகத் துரத்தும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

நாகரிக அரசியலில்தானே ராஜினாமாச் செய்ய வேண்டும்!

வட்டமேஜை

* ஒரு நடிகையின் பேட்டி போலில்லாமல் ரொம்பவும் வித்தியாசமாக; அதே சமயம் ஜோலியாகவும் இருந்தது, சிறந்த நடிகை விருது பெற்ற அர்ச்சனாவின் பேட்டி.

கோவை, உமார்த்தி.

* அர்ச்சனாவின் அட்டைப்படம் ஓர் அழகிய கவிதை.

விருத்தாசலம், தஞ்சாவூரான்.

* நாகரீக அரசியல்தானே ராஜீவின் ராஜினாமாவைக் கோருகிறது! அதுதான் இன்று நம் நாட்டிலேயே இல்லையே! பின் எதற்காக அவர் ராஜினாமாச் செய்ய வேண்டும்.

ஸ்ரீரங்கம், மேகதூதன்.

* ராஜீவ் காந்தியின் திறமையற்ற நிர்வாகத்தையும் ஊழலையும் கண்டித்து நாடு தழுவிய "பாரத் பந்த்" நடைபெற்ற போது வைக்கப்பட்ட கோஷங்களில் ஒன்று 'ராஜீவே, ராஜினாமாச் செய்!' என்பது. அதற்கே அசைந்து கொடுக்காத ராஜீவா, உம் தலையங்கத்தைப் பார்த்து ராஜினாமாச் செய்யப் போகிறார். ராஜினாமா கோஷம் வலுவடையும் பட்சத்தில் நெருக்கடி நிலையை அமல் செய்து, மக்களைக் கொடுமைப்படுத்துவதுதான் அதிகமாகும். நியாயமற்ற போக்கில் தாம் எட்டடி என்றால் மகன் பதினாறடி பாயக் கூடியவர்.

விருத்தாசலம் — 1. எஸ். தமிழ்நேசன்.

* எம். ஆர். நாராயண் சுவாமி எழுதிய இலங்கைப் பிரச்னை பற்றிய இரண்டு வாரக் கட்டுரை மூலம், அங்கு நிலவும் நிலைமையை மிகத் துல்லியமாக அறிய முடிந்தது. விடுதலைப் புலிகளின் ஆதரவு இல்லாமலோ, அரசியல் தீர்வு இல்லாமலோ அங்கு அமைதி திரும்பாது என்பதில் இருவிதக் கருத்துக்கள் இல்லை. இது தெரிந்தும், கௌரவத்தை இழக்க விரும்பாமல் இந்திய அரசும், விடுதலைப் புலிகளும் செயல்படுவது வருந்துதற்குரிய விஷயம்!

விருதுநகர், கே. டி. ஆர். சேகர்.

* இந்திய அமைதிப் படையினர் இலங்கையில் என்னதான் செய்கிறார்கள் என்ற குழப்பத்திற்கு ஓரளவு தெளிவு கிடைத்தாலும், அரசியல் தீர்வு இல்லாமல் இலங்கையில் அமைதி திரும்பாது; விடுதலைப் புலிகள் இல்லாமல் அரசியல் தீர்வு ஏற்படாது என்பதுதான் அப்பட்டமான உண்மை என்பதை ஆணித்தரமாக விளக்கியுள்ளீர்கள். விஷயம் இவ்வாறிருக்க, இந்திய அரசு உடனடியாகச் செயலில் இறங்கித் தீர்வு காண்பதை விடுத்து, மௌனம் காப்பதன் நோக்கம் யாழ் மக்களுக்கு மட்டும் புரியவில்லை என்பதல்ல; நமக்கும்தான்!

சென்னை — 85. உதயா. அழகப்பன்.

* நிடமதி யாரையும் விட்டு வைக்க மாட்டார் போலிருக்கிறதே! இந்த வாரம் கவர்னரையே எதிர்க்கத் துணிந்து விட்டார். அடுத்தது யார் யாரையோ... நினைத்தாலே பயம் கவ்வுகிறது!

விருத்தாசலம் — 1. ஒ. குருராஜன்.

* ஸ்பென்சர் பிளாசா போன்றவை கட்டாயம் தேவைதான். ஆனால் அதன் செலவையெல்லாம் தூக்கி வைத்துப் பொருட்களை யானை விலை, குதிரை விலை விற்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

இராமநாதபுரம், கே. மூர்த்தி.

* ஏற்கெனவே பலமுறை கண்டு களித்ததாயினும் 'ஓவியர் மணியம்' அவர்களின் கைவண்ணத்தோடு கல்கியின் புது வண்ணமும் சேர்ந்து பொன்னியின் செல்வனைப் பல வண்ணத்தில் கண்ட போது ஏனோ மெய்சிலிர்த்தது. 'ஸ்பென்ஸர் ப்ளாஸா' கட்டுரைக்கான படங்களிலும் வண்ணக் கலவை வெகு அற்புதம்.

தங்கமாபுரிப்பட்டணம், ஏ. என். ராஜேஷ்.

* தூத்துக்குடி இறால் பண்ணை போலவே — ஜேடர் பாளையத்தில் Central Marine and Fisheries Research Institute வைத்து இறால்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றனர். ஆற்று நீரில் வலைகளை வைத்து இறால் குஞ்சுகளை வளர்க்கின்றனர்!

பள்ளிபாளையம், கே. இரமேஷ்.

* 'காற்றில் பறந்த கவிதை' சிறுகதையில், போலிக் கவிஞர்களை — நடைமுறைக்குத் தகாதவர்களைச் சாடி, தெளிந்த நீரோடை போல் கதை கூறிய பிருதிவிராஜ் அவர்களுக்குப் பாராட்டுதல்கள்.

போடிநாயக்கனூர், ப்ரிய பாரதி.

* நாம் செய்கின்ற நன்மைகள்தான் நமக்கு நல்ல தொரு வாழ்க்கையைக் கொடுக்கும். நல்லதையே நினைக்காமல் நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று கொடுக்கும் என்பதற்கு உதாரணம், அ. தெய்வசிகாமணியின் 'நீங்காத இருள்' சிறுகதை.

சீர்காழி, ராஜ. நடராஜன்.

* மூன்று சிறுகதைகளும் முத்தானவை. அருமையான தேர்வு; பாராட்டுக்கள்!

சென்னை — 1. மருதூர் அகல்யன்.

* தில்லியில் உள்ள ராமானுஜம் லாட்ஜ் பற்றி கல்கி 24.4.88 இதழில் படித்தேன். மிக்க மகிழ்ச்சி. ஆனால் ராமானுஜத்துக்குப் பிறகு அவர் மகன் ரமணி லாட்ஜ் பொறுப்பைக் கவனிப்பதாக அச்சாகி உள்ளது. அவர் பெயர் ரவி. ரமணி அல்ல.

புதுதில்லி, பி. ரவிச்சந்திரன்.

இவர்தான் முதல்வர்:

ஸி.ஆரிடம் பயின்ற ஸி.எஸ்.



தமிழகத்துக்கு ஒரு வல்லவரும் நல்லவரும் வேண்டும். நிர்வாகத்தில் திறமையும் நாணயமும் வேண்டும். சரிவு ஏற்பட்டுள்ள தமிழகத்தை நிமிர்த்திச் சீர் செய்தல் அவசியம். பண பலத்தால் ஊழல் நிறைந்துள்ள சமுதாயத்தை இன்றே நேர்மையாக்குதல் நன்று. இவை வேரூன்றி விட்டால் களைவது மிகக் கடினம்.

அரசியல் சாசனப்படி பெருவாரியான சட்டமன்ற உறுப்பினர்கள் யாரைத் தங்கள் தலைவர் என்று நிர்ணயிக்கின்றார்களோ அவரே முதல்வராக வர வாய்ப்பு உள்ளது. அன்னாரை இப்பொழுதே எல்லாக் கட்சிகளும் கட்சி வேறுபாடின்றி நிர்ணயித்தால் நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை. அனைத்துக் கட்சிகளும் அன்னாரைப் பக்க பலமாகக் கொண்டு அவர் சொற்படி தேர்தலுக்கு உறுப்பினர்களை முடிவு செய்தல் நலம். நாட்டு மக்களுக்கு நன்மை புரியக் கட்சிகள் கூட்டுச் சேருவது கடமை. கூட்டு முயற்சியே நாட்டு உயர்வுக்கு இன்றைய தேவை.

முன்பு ஒரு தடவை குழப்பமான தமிழக அரசியல் சூழ்நிலையில் இராஜாஜியைத் தலைவராகக் கொண்டு அமைச்சரவை அமைக்கப்பட்டு, திறமையாகச் செயல்பட்டது என்பதை நாம் மறக்கவில்லை. அம்மாதிரியான சூழ்நிலை இப்பொழுதும் நம் அரசியலில் உள்ளது. ஆதலால் தமிழ் மக்கள் ஒரு சிறந்தவரைத் தலைமை தாங்கச் செய்ய வேண்டும் என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அதிர்ஷ்டவசமாக நம்மிடையே அப்படிப்பட்ட நற்பண்புகளைக் கொண்ட ஒரு தமிழர் உள்ளார். அவர் பண்பட்ட நிர்வாகி, பழுத்த தேசியவாதி, காந்தி மார்க்கத்தில் செல்பவர். நேர்மையும், நாணயமும் அவர் சொத்து. நல்லதொரு குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இந்தியக் குடிமகன்.

இராஜாஜி அவர்களின் அமைச்சரவையில் பங்கு பெற்ற அவர் பல கோப்புகளை அன்னாருக்குப் படித்துக் காட்டி, 'Hon C. M. agrees' என்று தாமே எழுதி முழு கையொப்பம் இட்டுப் பொறுப்பையும் ஏற்றுள்ளார். மக்களுக்கு நன்மை செய்யும் எல்லாப் பணிகளுக்கும் மத்திய அமைச்சரவையின் அனுமதி பெற்றுத் தமிழகத்துக்கு உதவியுள்ளார். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற தமிழ் மரபில் வந்தவர்.

அந்தப் பண்புகளை உள்ள நபர் வேறு யாரும் இல்லை. நமது சி. சுப்ரமணியம் அவர்கள்தாம். அடுத்து வரும் தமிழக முதல்வர் அவராக வேண்டும் என்பது என் விருப்பம். ஓர் ஆண்டு காலத்திற்காவது அவர் சேவை நாட்டிற்குத் தேவை.

தமிழகத்துக்குத் தேவையற்ற சுயநலமிகளை அவர் களையெடுப்புச் செய்வார். யாருக்கும் அஞ்சாமல், யாருக்கும் சலுகை காட்டாமல் ஆட்சி புரிவார். பொது மக்களுக்கு எவை தேவையோ அவை கிடைக்கச் செய்வார். அதற்கேற்பக் கொள்கைகளை வகுத்து அமுல்படுத்துவார்.

— ஆர். சீனிவாசன்
ஈரோடு — 5

“போக்குவரத்துப் போலீஸின் சுறுசுறுப்பு கவர்னர் ஆட்சியின் ஸ்டண்ட்தானா?”

சென்னை மாநகரப் போக்குவரத்துக் காவல் துறை துணை கமிஷனர் எல். ரஞ்சித் சிங்குடன் ஒரு பேட்டி...

நிருபர்: ஆட்சி சுறுசுறுப்பாய் நடப்பதை மக்களுக்கு உணர்த்தும் வழிகளில் ஒன்று போக்குவரத்துப் போலீஸார், ஆங்காங்கே வண்டிகளை நிறுத்திக் கேஸ் பிடிப்பது. இப்போது நடக்கும் கவர்னர் ஆட்சியின் சுறுசுறுப்பை உணர்த்தும் ஸ்டண்ட் தானே சமீப காலத்திய போக்குவரத்துப் போலீஸாரின் திடீர்ச் சோதனைகள்?

• ரஞ்சித் சிங்



ரஞ்சித் சிங்: (சிரித்தபடி): நிச்சயம் இல்லை. முன்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை ஆட்சி செய்தது. அமைச்சர்களுக்கும், மற்றவற்றுக்கும் பாதுகாப்பு அது. இது என்று டிராபிக் போலீஸ் சேவை தேவைப்பட்டது. இப்போது அந்த மாதிரி இல்லை; கவர்னரும் எனக்கு மிகுந்த பாதுகாப்பு வேண்டாம்; எனக்காகப் போக்குவரத்து தடை செய்யப்பட வேண்டாம்; என்கிறார். எனவே போலீஸார், போக்குவரத்து விதிகளை மீறுவோரைப் பிடிக்கப் பயன்படுத்தப்படுகின்றனர். அவ்வளவு தான். இதிலே ஸ்டண்ட் ஒன்றுமில்லை.


நிருபர்: சமீபத்திய ஆட்டோ ஸ்டிரைக்கின் பிரதானக் காரணங்களுள் ஒன்று, போக்குவரத்துப் போலீஸாரின் அத்துமீறிய, அனாவசியமான கெடுபிடிகள் என்ற குற்றச்சாட்டு. இதற்கு உங்கள் பதில் என்ன?

ரஞ்சித் சிங்: இது மிகைப்படுத்தப்பட்ட, தவறான, மிகவும் மேம்போக்கான குற்றச்சாட்டு. போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் அனைவருமே பிடிக்கப்படுகிறார்கள். அபராதம் விதிக்கப்படுகிறார்கள். ஆட்டோக்களை மட்டும் இலக்காய் வைத்து, ஒருபோதும் கேஸ் பிடிப்பதில்லை. சைக்கிள் ஓட்டிகள் முதல், கனரக வாகன டிரைவர்கள் வரை பலரும் பிடிக்கப்படுகிறார்கள். நானே ஒரு தடவை ஆயிரம் விளக்குப் பகுதியில் ஒரு சைக்கிள் ஓட்டி வந்தவரைப் பிடித்தேன். தான் ஒரு கான்ஸ்டபிள் என்று சல்யூட் அடித்தார். நான் அதனால் என்ன!

குற்றம் குற்றம்தான் என சார்ஜ் ஷீட் கொடுத்தேன். ஆட்டோ டிரைவர்களைக் கொடுமை செய்வதாய்ச் சொல்கிறீர்களே! நான் ஒன்று சொல்லட்டுமா? எந்த இடத்திலும், எந்த ஒரு ஆட்டோவையும் நிறுத்தி, என்றால் குறைந்தபட்சம் இரண்டு குற்றங்களுக்காகவாவது அதன் டிரைவர் மீது கேஸ் புக் பண்ண முடியும்.

நிருபர்: அதெப்படிச் சாத்தியம்?

ரஞ்சித் சிங்: நில்லுமுல்லு மீட்டர், மஞ்சள் கோட்டைத் தாண்டுதல், சரியான அளவில் ரெஜிஸ்டிரேஷன் நெம்பரை எழுதாமை, அதிகப்படியான சத்தம், அதிகப்படியான புகை, ஒலி எழுப்பக் கூடாத இடத்தில் ஹாரன் அடித்தல், சிக்னல்களில், எல்லைக் கோட்டைத் தாண்டி நிறுத்துதல், டிரைவர் சீட்டில் இருவர் போவது, மூன்று பேருக்கு அதிகமாய் ஏற்றிக் கொள்வது... என்று பலவிதமான குற்றங்களின் கீழ் ஆட்டோ டிரைவரை 'புக்' செய்யலாம். இதெல்லாம் ஆட்டோ டிரை



* வேகம் விபரீதமாகி விட்டது...

வர்கள் மிகவும் சகஜமாய்ச் செய்வார்கள். அதனால் தான் அப்படிச் சொன்னேன்.

நிருபர்: பெரும்பாலான நகர ஆட்டோக்கள் போலீஸ்காரர்களுக்குச் சொந்தமானவைதான் என்கிறீர்களே!

ரஞ்சித்: இப்படி பத்திரிகைகளில் வருகிற செய்திகள் வந்து கொண்டிருந்தாலும், இது பற்றிச் சரியான புள்ளி விவரம் இல்லை. மேலும், யார், போக்குவரத்து விதிகளை மீறிய குற்றத்துக்காகப் பிடிக்கப்பட்டாலும், உடனே அவர், 'எனக்குக் கமிஷனரைத் தெரியும். நான் இன்ஸ்பெக்டருக்குச் சொந்தம்...' இந்த ரீதியில் ஏதாவது சொல்வது சகஜம். பெரும்பாலான ஆட்டோக்கள், போலீஸ்காரர்களுக்குச் சொந்தமானவை என்றால், 'போலீஸாரின் கொடுமை' என்று சொல்லி, ஸ்டிரைக் செய்வார்களா? நீங்களே சொல்லுங்கள்.

நிருபர்: சாதாரணமாய்ப் போகிறவர்களைக் கூட, அதிக வேகமாய் ஓட்டுவதாய்ப் பிடிக்கிறீர்களே?

ரஞ்சித்: ஒரு மோட்டார் சைக்கிளில் டிராபிக் இன்ஸ்பெக்டர் நாற்பது கி.மீ.



* ஓட்டுனர் குடித்திருக்கிறாரா? சோதனை...

வேகத்தில் போகும் போது, அவரை ஒரு ஸ்கூட்டர் ஓவர் டேக் பண்ணினால், நாற்பதுக்கும் அதிக வேகத்தில் போவதாய்த் தானே அர்த்தம்? நாற்பது கி.மீ. வேகக் கட்டுப்பாடுள்ள ஒரு சாலையில் இப்படிச் செய்யும் போது அவரை நிறுத்தி கேஸ் போடுவதில் தப்பில்லையே? சாலை விதிகள் என்பவை, சாலை விபத்துக்களையும் உயிரிழப்பையும் குறைக்கத்தான் என்பதை அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த சில வருடங்களில், இதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

நிருபர்: ஸ்தலத்திலேயே அபராதம் என்ற பெயரில், வழக்குப் பதிவு பண்ணிய இடத்திலேயே அபராதம் கட்டும் முறையினால் சில தொல்லைகள் ஏற்படுகின்றனவே! உதாரணமாய் அபராதம் கட்டக் கையில் பணமில்லையெனில்...


ரஞ்சித்: ஸ்தல அபராத முறையை அரசு அறிமுகப்படுத்தியதே, மக்களின் சௌகரியத்தை முன்னிட்டுத்தான். இல்லையெனில் கோர்ட், கேஸ் என அனாவசியமாய் அலைய வேண்டியிருக்கும். இதனால் நேரமும், பணமும் அதிகப்படியாகும். ஆனாலும் ஸ்தலத்திலேயே பணம் கட்டியே தீர வேண்டுமென்ற கட்டாயமில்லை. வீட்டுக்குப் போய்ப் பணம் எடுத்துக் கொண்டு வந்தும் கட்டலாம்; டிரைவிங் லைசென்ஸைக் கொடுத்து விட்டு, அப்புறம் ஸ்டேஷனில் வந்து, அபராதத் தொகையைக் கட்டிவிட்டு, லைசென்ஸைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். எதுவும் இல்லையெனில் கோர்ட்டுக்கே போகவும் செய்யலாம். கேஸ்களை, அந்த இடத்திலேயே துரிதமாய் முடிக்கத்தான் ஸ்தல அபராத முறை.

நிருபர்: நெம்பர் பிளேட்டின் அளவு சிறியது; நெம்பர்கள் சரியாய் எழுதப்படவில்லை என்றெல்லாம் அபராதம் போடுகிறீர்களே. இதெல்லாம் வண்டி வாங்கும் போதே உள்ளவை தாமே! அதற்கு வண்டி ஓட்டுனர் என்ன செய்ய முடியும்?

ரஞ்சித்: இன்ன அளவு நெம்பர் பிளேட் என்று சட்டம் இருந்தால், அந்த அளவில் பிளேட் வைத்துத்தானே ஆக வேண்டும்.



* சாலை விபத்துக்கள்



* சாலை விதிகளை மீறக் கூடாது.

வாங்கும் வண்டியில், சரியான அளவு நெம்பர் பிளேட்டைப் பொருத்த வேண்டியது வண்டி ஓட்டுனரின் கடமை.

நிருபர்: சட்டப்படி தவறு என்றால், அதை ஏன் ஆர்.டி.ஓ. ஆபீஸில், கவனிக்காமல், கண்டிக்காமல் பதிவு செய்கிறார்கள்?

ரஞ்சித்: அது தவறுதான். அதைக் கவனிக்கச் சொல்லி, போக்குவரத்துத் துறைக்கு எழுதியிருக்கிறோம்.

நிருபர்: இத்தனை கண்டிப்பாய் மற்றவர்களைப் பிடிக்கிற நீங்கள், பல்லவன் பஸ்களைக் கண்டு கொள்வதில்லையே! அவர்கள் போக்குவரத்து விதிகளை மீறுவதில்லை என்று பொருளா?

ரஞ்சித்: அப்படி ஒன்றுமில்லை. அறுபது, எழுபது பேர் பயணம் செய்யும் பஸ்ஸை நிறுத்திச் சோதனை செய்ய ஆரம்பித்தால், அது பல பயணிகளுக்கும் இடைஞ்சலாய் இருக்குமே! அதனால் போக்குவரத்துப் போலீஸார், தினமும், விதிகளை மீறும் பல்லவன் பஸ்கள் பற்றிய விவரங்களைப் போலீஸ் ஸ்டேஷன்களில் தருவார்கள். அவை ஒன்றாக்கப்பட்டு, வாரா வாரம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்துக்கு அனுப்பப்படுகிறது; இது பற்றிப் பல்லவன் நிர்வாகத்தினருடன் கூடிப் பேசப்படுகிறது. தவறு செய்யும் டிரைவர்களுக்கு (அரசுப் பஸ் பணியாளர் என்கிற முறையில்) சிறு தொகை அபராதம் விதிக்கப்படுவதுடன், அவர்களின் தவறும், அதன் பேரில் எடுத்த நடவடிக்கையும் அவருடைய சர்வீஸ் ஃபைலில் இடம் பெறுகிறது. அபராதத்தை விட இது சீரியசான விஷயமில்லையா? பஸ் டிரைவர்கள் மீது வாரத்துக்குச் சராசரியாய் நாற்றைம்பது கேஸ்கள் போடுகிறோம்.

நிருபர்: நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு இத்தனை கேஸ் பிடிக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிப்பதால்தானே இத்தனை கெடுபிடி?

ரஞ்சித்: நான் இலக்கு எதுவும் நிர்ணயிக்கவில்லை. (சில பேப்பர்களை எடுத்துக் காட்டி) இது போலீஸ் ஸ்டேஷன் வாரியாக, ஆட்டோ, இரண்டு சக்கர வாகனங்கள், கார், வேன் என இனவாரியாகப் பிடிக்கப்பட்ட கேஸ்களின் விவரம். இது ஸ்டேஷனுக்கு ஏற்ப பூஜ்ஜியத்திலிருந்து, பதினாறு வரை வேறுபடுவதைக் கவனியுங்கள். குறிப்பிட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தால், ஏறத்தாழ ஒரே நெம்பர்தானே எல்லா ஸ்டேஷன்களுக்கும் வரும்? ஒரு டிராபிக் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு நாள் முழுக்க இரண்டே இரண்டு கேஸ் பிடிக்கிறார் என்றால், இரண்டே இரண்டு பேர் மட்டுமே சட்டத்தை மீறியதாய் அர்த்தமா? அவர் ஒழுங்காய் டியூட்டி பார்க்கவில்லை என்றுதானே அர்த்தம். அவரை எச்சரிக்கத்தானே வேண்டும்? (நிறையக் கேஸ் பிடிக்காதவர்களுக்கு அனுப்ப இருக்கும் எச்சரிக்கைக் கடிதத்தைக் காட்டுகிறார்)

நிருபர்: வாகன வாரியாக இல்லாவிட்டாலும், ஒரு ஸ்டேஷனுக்கு மாதத்துக்கு – வாரத்துக்கு இத்தனை கேஸ்கள் என்று இலக்கு நிர்ணயித்திருக்கலாமே! அது கூட எழுத்தில் இல்லாமல் வாய் மொழியாகவே!

ரஞ்சித்: புள்ளி விவரங்களைக் கொண்டு, நீங்கள் சொல்வது உண்மையில்லை என என்னால் நிரூபிக்க முடியும். போக்குவரத்து போலீஸார், நீங்கள் தவறே செய்யாமல், பொய்யாய்க் கேஸ் எழுதினால், எனக்குத் தெரிவியுங்கள். நான் தக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

நிருபர்: பொய்க் கேஸ் ஒரு பக்கமிருக்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

டெபாசிட் சேகரிப்பு விழா!

30-6-88 வரை நீடிக்கப்படுகிறது

ஜெய்சக்தி


வழங்கும்

அன்பளிப்புகளுடன் இணைந்த

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

காலம்	வட்டி
6 மாதங்கள்	18%
1 வருடம்	19%
2 வருடங்கள்	20%
3 வருடங்கள்	21%

முதலீட்டுத் தொகை	சிறப்புப் பரிசு
ரூ. 1,00,000	ஒரு சவரன் அல்லது ரூ. 3000/- ரொக்கம்
ரூ. 50,000	பூஜை மணை அல்லது ரூ. 1500/- ரொக்கம்
ரூ. 25,000	வெள்ளி காமாட்சி விளக்கு அல்லது ரூ. 750/- ரொக்கம்
ரூ. 10,000	வெள்ளி குத்து விளக்கு அல்லது ரூ. 300/- ரொக்கம்
ரூ. 5,000	வெள்ளி கிண்ணம் அல்லது ரூ. 150/- ரொக்கம்



அன்பளிப்பின் விவரம் :-

* மூன்று வருடத்திற்கு குறையாமல் டெபாசிட் செய்பவர்களுக்கு மட்டும் மேற்கண்ட சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
* 3 வருடத்திற்கு குறைவாக டெபாசிட் செய்பவர்களுக்கு 2% CASH INCENTIVE மதிப்புள்ள பொருள்கள் வழங்கப்படும்.

ஜெய்சக்தி பைனான்சியர்ஸ்

(FIRM)

39, நடேசன் தெரு, (2வது மாடி), சிவா-விஷ்ணு கோவில் அருகில்
தி.நகர், சென்னை-600 017. போன் : 442218

விபரம் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

* சென்னை :- 39, நடேசன் தெரு, (2வது மாடி) தி.நகர், போன் :- 442218
* திருச்சி :- 22, மதுரை ரோடு,(முதல் மாடி) ராஜா தியேட்டர் அருகில், போன் :- 31376/33397
* கோயமுத்தூர் :- 666, ராஜா தெரு, (முதல் மாடி) போன் :- 34369
* மதுரை :- 41, வடக்கு வெளி வீதி, (முதல் மாடி) மாடர்ன் லாட்ஜ் அடியில், போன் :- 37233
* பாண்டிச்சேரி :- 11, செட்டி தெரு, (கனரா வங்கி எதிரில்) 2வது மாடி, போன் :- 26493/26471
* திருநெல்வேலி :- 18-K, மீரான் காம்பளக்ஸ், சுவாமி நெல்லையப்பர் ஹைரோடு, போன் :- 25785/25702
* தஞ்சாவூர் :- எண். 2 & 3 முதல் மாடி, தி.எ. கனல் ரோடு, போன் :- 21626/22286
* பெங்களூர் :- 24/1-A, மார்கோஸா ரோடு, (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், போன் :- 366971
* கும்பகோணம் :- 12, கிழக்கு சாரங்கபாணி தெரு, போன் :- 22647
* திருவண்ணாமலை :- 14/A, ஆனைகட்டி தெரு, போன் :- 2483
* பட்டுக்கோட்டை :- 121/8, தலையாரி தெரு, போன் :- 453
* தூத்துக்குடி :- 10 & 11, விக்டோரியா சாலை,
* வேலூர் :- "கோல்டன் பில்டிங்" (திமுக அலுவலகம் அருகில்) லாங்கடை தெரு, வேலூர்-632 004.
* ஈரோடு :- 19, பார்க் ரோடு, (ஸ்டார் தியேட்டர் அருகில்) ஈரோடு-3, போன் :- 74577

LOTUS/38/88/Tam

கட்டும். டிராபிக் சார்ஜண்ட் ஒரு வண்டியை நிறுத்தி விட்டால், அவர் மீது ஏதாவது ஒரு குற்றம் சாட்டுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகிறார். உதாரணமாய் என் நண்பர் ஒருவர் பைக்கில், பீச் ரோடில் சென்று கொண்டிருந்த போது, போக்கு வரத்துப் போலீஸால் நிறுத்தப்பட்டார். வாகன வரி டோக்கன், டிரைவிங் லைசென்ஸ், ஆர். சி. புத்தகம் என்று ஒவ்வொன்றாய்க் கேட்கக் கேட்க, இவரும் எடுத்துக் காட்டிக் கொண்டே வந்தார். மஞ்சள் கோட்டைத் தாண்டுதல், ராஷ் டிரைவிங் என்றும் பிடிக்க முடியவில்லை. வண்டியைச் சுற்றிச் சுற்றி வந்தார். 'நெம்பர் பிளேட்டில் எண்கள் பளிச்செனத் தெரிய வில்லை. இது குற்றம்' என்று சார்ஜ் ஷீட் கொடுத்து, அபராதம் விதித்தார். இதைக் 'கொடுமை' என்று சொல்லாமல் வேறு எப்படி அழைப்பது? நிறுத்திய வண்டிக் காரர் மீது குற்றம் சாட்ட முடியாது போய் விட்டால், தன்மானம் போய் விடுவதாய் நினைத்துச் செயல்படுவதுதானே இது?

ரஞ்சித்: போலீஸுக்கு இதைச் செய்ய உரிமை இருக்கிறது. அவர் அப்படிச் செய்தது சட்டப்படி சரியே! போக்குவரத்து விதிகளில் எதை மீறினாலும், குற்றம் தானே! இதிலே கொடுமைப்படுத்துதலே இல்லை என்பேன்.

நிருபர்: நீங்கள் அபராதம் போடுவது நெகடிவ் அப்ரோச். முக்கியமாய் இதிலே கவனிக்க வேண்டிய விஷயம், சாலைகளை உபயோகிப்போர் பலருக்குச் சாலை விதிகளே தெரியாது. அபராதம் போடுவதற் குப் பதில் மக்களுக்கு சாலை விதிகளைப் பற்றிய அறிவூட்டலாமே! இது பாஸிடிவ் அப்ரோச். இப்படிச் செய்தாலும் குற்றங் கள் குறையுமில்லையா?

ரஞ்சித்: நாங்கள் பல்வேறு அரசு நிறு வனங்கள், சேவை அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் மக்களுக்குச் சட்டங்களை அறிய வைக்கிறோம். இது வரை பல ஆயிரம் துண்டுப் பிரசுரங்களை விநியோகித் திருக்கிறோம். அண்ணா சாலையைப் 'போக்கு வரத்து விதிகளை மீறாத பகுதி' (Traffic Viola-**tion Free Zone**) யாக அறிவித்த போது ஒரு மாதம் வரை, சட்டங்களை எடுத்துச் சொன்னோமே தவிர, யார் மீதும் கேஸ் புக் செய்ய வில்லை. ஆனால் ஒன்று. நம் மக்களுக்குச் சும்மா சொல்வதை விட, அடித்துப் பயமுறுத்தினால்தான் கேட்கிறார்கள். அதற்கு என்ன செய்வது?

நிருபர்: கடைசியாய் ஒரு கேள்வி. இந்தத் திமர் கறுசுறுப்பு இன்னும் எத்தனை நாளைக்கு? தேர்தல் வரைக்குமா?

ரஞ்சித்: என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? போக்குவரத்துப் போலீஸ் என்று ஒரு துறை இருக்கும் வரை நிச்சயம் இருக்கும்.

பேட்டி: எஸ். சந்திரமௌலி.



காதல் வண்டி நிற்கும் இடம்



பூ விற்கும் பொன்னம்மா ஏறுவது பேஸின் பிரிட்ஜில். இறங்குவது கடம்பத்தூரில். அவள் இறங்கியதுமே போர்ட்டர் பூங்காவனத்துக்கு அந்த 'வெண்டார்ஸ் வேன்' – காய்கறி, பூ, பழம் ஏற்றுவதற்கான கம்பார்ட்மெண்ட் – சற்று இருண்டு விடும். விளக்கு அகற்றப்பட்ட கார்த்திகை மாடம் போல.

ஒளிவு மறைவு எதற்கு? எனக்கும்தான். நானும் போர்ட்டர் பூங்காவனமும் சென்ட்ரலில் இருந்து திருவள்ளூர் வரை காலை 8.15 சபர்பன் ரயிலில் பயணம் செய்ய விதிக்கப்பட்டவர்கள்; தினசரி.

அவன் சென்ட்ரலில் போர்ட்டர். இரவு 'டூட்டி'. நான் போன ஜூலையில் தலைமை அலுவலகத்துடன் ஒரு சிக்கலில் திருவள்ளூர் கிளைக்கு 'நாடு' கடத்தப்பட்டவன். பூங்காவனத்துக்கு வீடு திருவள்ளூர். அவன் வந்து போக வேண்டியவன். நான் போய் வருபவன்.

தற்போது என் சுவாரஸ்யம் பொன்னம்மா—பூங்காவனம் விவகாரம் எதில் முடியும் என்பது. அதன் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைப் படிப்படியாக நான் ஒன்றும் பார்த்தவனில்லை. நான் ஓர் இடைச்செருகல்.

மாறுதல் கிடைத்த முதல் வாரத்தில் ஒரு நாள், எத்தனையாவது நாள் என்று ஞாபகமில்லை, ஆழ்வார்த்திருநகரியிலிருந்து அரக்கப் பரக்க சென்ட்ரல் வந்து, கிளம்பி விட்ட ரயிலில் எட்டிப் பிடித்த பெட்டி ஒரு வெண்டார்ஸ் வேன்.

ஏறியவுடனே கருவாட்டு நாற்றம். அடுத்த ஸ்டேஷனில் பெட்டி மாறி விடலாம் என்று தீர்மானித்த போதுதான் மூலையில் உட்கார இடம் தந்தான் பூங்காவனம்.

பலாப்பழம், கறிவேப்பிலை, பூசணிக்காய், புதினா, கொத்தமல்லி, மக்காச்சோளம் என்று ஒரு காய்கறி மார்க்கெட். கூடவே பொன்னம்மா; வாயில் வெற்றிலையும் கண்ணில் மையுமாகக் கட்டுமஸ்தான காய்கறிக்காரி கசீலா. வாழ்க்கை தருகிற அடிக்குப் பதிலடி கொடுக்கிற ஜீவத் துடிப்பு. வெளிவேஷமில்லாத பாமர ரஸானுபவங்கள்.

பயணிகள் பெட்டி கொஞ்சம் 'டல்' தான்.

நிற்கிறவனுக்கு நகர்ந்து இடம் தர மறுக்கிற, அவரவர் சொந்தப் பிரச்னையின் கூண்டுக் கம்பி பிடித்து, வானை வெறித்து, இந்தக் கடனுக்கு எந்தக் கடன் வாங்கி ஈடு கட்டுவது என்ற தனித் தனித் தீவில் மூச்சுத் திணறி, அந்தப் பெருமூச்சில் மிதக்கிறதைப் பயணம் என்று நினைக்கிற மத்திய தர வர்க்கத்து உம்மணாமூஞ்சி உலகை விட வெண்டார்ஸ் வேன் என்னை ஈர்த்தது.

தினசரி ஒரு மார்க்கெட்டோடு பிரயாணம் செய்கிற மூக்கைத் துளைக்கும் அநுபவம், பொன்னம்மா, பூங்காவனம், ஏறி இறங்கிச் செல்லும் சில அபூர்வங்கள் – இவற்றை எல்லாம் நான் நேசிக்கிறேன் என்று புரிந்து, நான் ஏறியவுடன் ''நீ ஒக்காரு சார்... நா மானேஜரு நிக்கிறேரே நவுந்து எடம் வுடு'' என்ற உபசாரம். சீசன் மாறும் போது காய்கறி பழம் தவிர மற்றது மாறாத உலகம்.

வேறென்ன ஐயா தேவை? பூங்காவனத்துக்கு ஏறக்குறைய நான் ஒரு ரசிகன். பெண்களைச் சிரிக்க வைப்பதில் அவன் மன்னன்.

அவள் ஏறியதுமே ''என்னா கசீலாக்கா வர வர மாமனுக்கு மவுஸைக் கொறைச்சுடுவே போலிருக்கே?'' என்பான்.

''இன்னா தம்பி, ஏறினதும் எம் வாயைக் கௌற வந்துட்டே?''

''இல்லே. நேத்திக்கும் இன்னிக்கும் ஒனக்கு வயசு கம்மியாய்க்கினே போவுது. மாமனுக்கு வயசு ஏறிக்கினே போவுது...''

''இன்னா கண்ணு... பலாப்பயம் எதுனா ஒண்ணுமா ஐஸ் வெக்கறே?''

பாத்தியா... பாத்தியா கண்ணுக்கு ஜிலு ஜிலுன்னு கீதே. அதைச் சொல்ல வந்தா?''

வயசுடா தம்பி, வயசு. உன்னைச் சொல்லிக் குத்தமில்லே. உம் முட்டியைத் தட்டி மூணு முடிச்சுப் போட வெச்சுட்டா ஒனக்குப் பார்வை தெளிஞ்சுடும்.''

''எத்தினியோ பேரு ஒங்கூட வர்றாங்க இல்லே... ஒன்னை இப்படித் தள்ளி விடறது!''

''யாரும் தள்ளி விட மாட்டாங்க தம்பி. நீயா அள்ளிகிட்டுத்தான் போவணும்.''

''அள்ள வந்தாத் தள்ளி விட்டுடறியே.''

பெண்கள் சிரித்து விடுவார்கள்.

அவன் பேசுவது கசீலாவுக்காக அல்ல என்று அவளுக்கு மட்டுமல்ல, மேலும் இருவருக்கும் தெரியும். ஒன்று பொன்னம்மா. இன்னொன்று நான். பூங்காவனத்தின் ரசிகர் பட்டியலில் நான் உண்டு. பொன்னம்மா? அவள் இல்லையென்பதால்தான் பூங்காவனம் விடாப் பிடியாக முயற்சி செய்கிறான்.

பொன்னம்மாவை அசப்பில் பார்க்கிறவன் யாராயினும் அவளுக்காகச் செய்யப்படும் எந்த முயற்சியும் தகும் என்று ஆமோதிக்க நேரிடும். கண்ணுக்கு அப்படி ஒரு குளிர்ச்சி அவள்.

இமையை உயர்த்தி அவள் ஒரு பார்வை பார்த்தால் மனசில் ஒரு மண்வெட்டி விழுந்து என்னமோ அள்ளி விட்ட பள்ளம். கொஞ்சம் சிரித்தால் விழுந்த பள்ளத்தில் ஜிலு ஜிலுவென்று தளத்து நீர் புதிய பெருக்கம்!

அவளைச் சிரிக்க வைக்கப் பூங்காவனம் செய்யும் முயற்சிகளுக்குப் பலன், ஆவாரி வந்தால்தான் ஒரு புன் முறுவல். அது கூட, சீ, பாவம் ரொம்பத்தான் மாய்கிறான் என்ற நினைவில்.

மற்றபடி –

அவள் பாட்டுக்கு யந்திர வேகத்தில் பூக் கட்டிக் கொண்டே போர்ட்டர் பக்கம்

வையவன்

பார்வையைக் கூடத் திருப்பாமல் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவளிடம் பேசியவாறு இங்கும் அங்கும் கண்ணை ஓட விடுவாள்.

கடம்பத்தூர் வருவதற்குள் ஒரு பெரிய பூப்பந்து தயார். வெட்டிக் கொண்டு இறங்குபவள் போல் அவள் பிளாட்பாரத்தில் கால் வைப்பாள்.

திருவள்ளூர் வரை நானும் பூங்காவனமும்.

''என்ன பூங்காவனம், இன்னிக்கு என்ன டெவலப்மெண்ட்?''

''அட போ சார்!''

''அண்ணனூர் வர்றப்போ ஒரு பார்வை பார்த்தாப்பல இருக்கு!''

அவனுக்கு ஒரு குஷி வரும். இருந்தாலும் அழுத்துக் கொள்வான் கள்ளக் குரலில்.

''ஓங்களுக்கு என்னை வாராக்காட்டி பொழுது போவாது.''

''த... த... ஏங்கிட்டே கத வுடாதே! ஒனக்கும் அதுக்கும் ஒரு இதுதானே!''

அங்கே தொட்டால் பொதுவாய் எல்லா ஆண்களுக்கும் ஒரு நெளிசல்தான்.

''கண்டுக்கினிங்க இல்லே. அப்பறமா இன்னு? மேக் கொண்டு கண்டுக்காதீங்க.''

செவ்வாப்பேட்டை ரோடு வரும் போது தன் போர்ட்டர் சட்டையைக் கழற்றி மடித்துக் கொண்டே அவன் பதிலளிப்பான். நான் தொடர்வேன்.

''இருந்தாலும் ஒரு வயசுப் பொண்ணுக்கு இவ்வளோ பிகு தகாதுப்பா.''

''நீங்க ஒண்ணு. இந்தப் பிகு இல்லாகாட்டி சோமாறிப் பசங்க லகுவாக் கைய வச்சுடுவானுங்க.''

''அதுக்காக... ஓங்கிட்டே கூடவா?''

''சார், நீங்க எதுனா லவ் பண்ணிக்கீறிங்களா?''

என்னை மடக்கி விட்டான்.

''இல்லியே!''

''அதான் விஸ்யம். சடுக்குனு ஒரு பொண்ணு வுளுதுன்னு... வாணும் தன் வீடு. ரொம்ப டாவு காட்டுதுன்னு வுடாத. முக்காவாசி போ. அது வுளுற நெலேக்கு வருதுன்னு அப்பறமாக் கண்டுக்காத. கப்புனு உட்று. சிறுக்கி மவ. அவளா வந்து ஒன்னை டிங்கி டிமாயணும். அப்புறமா கட்டிக்கோ. அதுதான் ஒனக்குப் புல்லா ஸேப்டாவும். ஏன்னு அதுல ஒரு கேம் இந்துகீது. ரெண்டு பேரும் ஓர்த்தர்க்கொருத்தர் பிஃப்டி பிஃப்டி போராடிக்கீறிங்க.. அதான் பாலன்ஸ். இன்னு ரைட்டா?''

பல உபதேசங்களைக் கேட்கிற பாக்கியம் எனக்கு உண்டு. எனினும் போர்ட்டர் பூங்காவனத்துடையது கொஞ்சம் 'ஹெவி—டோஸ்'.

''இருக்கலாம்பா!''

''இஸ்க்கிறியே... இருக்கலாம் இன்னு... இருக்குது. கீது... நீ ஒண்ணு பாரு சார்''

பூங்காவனத்துக்கு மரியாதைப் பன்மையில் நம்பிக்கை கிடையாது. அது ஒரு மாதிரி இதயத்தின் வாசற்படிக்கு வெளியில் நிற்கிற அன்னியம். எனவே நீ, நீர், நீங்கள் என்று குழப்பியடிப்பான்.

பொன்னம்மா — பூங்காவனம் விவகாரம் சுபமாக முடிய வேண்டும் என்று சினிமா பார்க்கிறவருக்கு ஏற்படுகிற ஒரு தவிப்பு எனக்குள்.

நல்ல ஜோடிப் பொருத்தம். இரண்டு பேர் கையிலும் ஒரு தொழில் உண்டு. வாழ்க்கையும் வசதியாக ஓடும். மகிழ்ச்சியாக ஆசீர்வதித்து வைக்கலாம்.

ஆறு மாதமாய்ப் பூங்காவனத்தின் கூற்றுப்படி பொன்னம்மா எப்போது டிங்கி டிமாயப் போகிறாள் என்று நானும் எதிர்பார்க்கிறேன், எதிர்பார்க்கிறேன்... நடக்கவில்லை.

கடம்பத்தூர் வந்ததும் கையில் கனக்கும் பூப்பந்தோடு கத்தரித்துக் கொண்டு போகிறாள்.

பூங்காவனம் ஒரு பீடியைப் பற்ற வைத்து ஜன்னல் வழியாகப் புகையை வானில் ஊதி வருகிறான்.

ஆவடியிலோ அண்ணனூரிலோ சொட்டு மருந்து மாதிரி பட்டும் படாததுமாக அவள் ஒரு புன்னகை செய்கிறாள். ஒன்றும் சுரத்தில்லை.

''என்ன பூங்காவனம்? இப்படியே இப்படியே விட்டீன்னு அவ பொசுக்குன்னு ஒரு தாலிக் கயித்தைக் கழுத்திலே கட்டிக்கிட்டு வந்து நிக்கப் போறா?''

''இன்னு பண்ணலாங்கறே சார்?''

''டைரக்டா கேட்டுடு.''

''என்னை கட்டிக்கிறியான்னு?''



சமீபத்தில் பம்பாயின் 'பலமாடி' கட்டடம் ஒன்றின் நாலாவது மாடியில் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது, முன்னாள் பிரதமர் 'மொரார்ஜி'க்கு! காரில் வந்து இறங்கிய மொரார்ஜி, நேராக 'லிஃப்ட்'க்குச் சென்றார். மின்சாரம் இல்லாததால் 'லிஃப்ட்' இயங்கவில்லை. ஆனால் மொரார்ஜியோ, அதற்காகக் காத்திருக்கவில்லை! கூடியிருந்தவர்கள் அதிசயிக்கும்படி, 'விறுவிறு'வென்று படிகளில் ஏறி, நாலாவது மாடியை அடைந்தார்! 91 வயதிலும் இவர் இப்படி இளைஞர் போல் இயங்குகிறார்!

— சம்பத் குமாரி.

ஆதாரம்: இல்லஸ்டிரேட்டட் வீக்லி.

க்ரேட் ஷேக் பற்றி. சில உண்மைகள் உங்களை வியப்பில் ஆழ்த்திடும்.

க்ரேட் ஷேக். முழுமையான புரதச்சத்து ஆகார பானம்.

உலகிலேயே மிகச் செறிவான இயற்கைப் புரதச்சத்தின் மூலாதாரமான ஸோயாவிலிருந்து தயாராவது க்ரேட் ஷேக். ஏதோவொரு புரதம் நிறைந்தது அல்ல க்ரேட் ஷேக். இதில் உள்ளது, உங்கள் உடல் வளர்ச்சிக்கும், தசை வளர்ச்சிக்கும் மிகத் தேவையான உயர்தர புரதச்சத்து. இது, 22 அமினோ அமிலங்களில் 20 அமினோ அமிலங்களை, நல்ல விகிதத்தில் கொண்டது; இன்றியமையாத எல்லா 9 அமினோ அமிலங்களையும் கொண்டது.

க்ரேட் ஷேக் விட்டமின் நிறைந்தது— மாத்திரையோ மற்றதோ இன்றியே.

B காம்ப்ளெக்ஸ் விட்டமின்கள் செறிந்தது க்ரேட் ஷேக்; அத்துடன், A மற்றும் E விட்டமின்களும். இரும்புச் சத்து, பாஸ்வரம் மற்றும் கால்சியம் ஆகிய கனிமச் சத்துக்களும் செறிந்தது.

க்ரேட் ஷேக். ஆரோக்கியமான மாற்றுணவு

க்ரேட் ஷேக் கொழுப்புச் சத்து அற்றது. இம்மியும் கொலெஸ்டிரால் இல்லை. சிலர்க்கு அலெர்ஜியான, பண்ணைப்பாலிலுள்ள லாக்டோஸ் அற்றது இது.

க்ரேட் ஷேக். சாப்பாடுகளுக்கிடை—யே ஒரு ஆகாரம்.

அடுத்த முறை பசிக்கும்போது, அதுவும் சாப்பாட்டு வேளை அல்லாத போது, குளுமையான க்ரேட் ஷேக் அருந்துங்கள்.

செறிவான, திருப்திதரும் இந்த ஸோயாமில்க் பானம் சுவைமிக்க பல மணங்களில் கிடைக்கிறது.



க்ரேட் ஷேக் ஸோயா நலமிக்க ஹாயான உணவு பானம். உலகிலேயே மிகச் செறிவான புரதச்சத்தின் மூலாதாரம்.

தயாரிப்பாளர் : நோபிள் ஸோயா ஹவுஸ் லிமிடெட்,
விநியோகஸ்தர்கள் : கோத்ரெஜ்

Enterprise/NS/269 Tm


ஹா!!!
புதிய ஸிபாகா டாப் டூத்பேஸ்ட்...
ஒவ்வொரு சுவாசமும் புத்துணர்ச்சிமயம்.
Cibaca Top
super fresh
toothpaste
improved taste & foam
முன்னைவிட சிறந்த சுவை அதிக நுரை
ஸிபாகா டாப்பில் நன்கு பரவும் விசேஷ பொருள் உண்டு. இது உடனடியாக வாய் முழுதும் பரவி, பற்சிதைவை உண்டாக்கும் நுண்கிருமிகளை அழித்து, வாய் துர்நாற்றத்தைத் தடுக்கிறது; உங்கள் வாயையும், பற்களையும் துப்புரவாக சுத்தம் செய்யும் போதே, உங்கள் சுவாசத்திற்கு முழுமையான புத்துணர்ச்சியையும் தருகிறது.
சுவாசத்தின் புத்துணர்ச்சியை சோதித்துப் பாருங்கள் இப்படி.... ஹா ! ஸூப்பர் ஃப்ரெஷ்ஷ்... ஸிபாகா டூத்பேஸ்ட்.
முழுமையான புத்துணர்ச்சி
வாய்க்கு முழுப் பாதுகாப்பு
ஸிபாகா டாப்
டூத்பேஸ்ட்
இந்துஸ்தான் ஸிபா காய்கியின் தரமிக்க தயாரிப்பு.
RCA/CT/141/88-TM-1



''ஊர் முழுக்கக் கடன் வாங்கினது ரொம்ப நல்லதாப் போச்சு...''

''எப்படி...?''

''வோட்டுப் போட்டால் ஜெயிச்சு எம்.எல்.ஏ.வாகி சம்பாதிச்சுக் கடனைத் திரும்பத் தந்துடுவான்னு எல்லாரும் வோட்டுப் போட்டுட்டாங்க!''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

''நான் ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி வந்தப்ப 'எட்டாம் கிளாஸ் படிக்கறான்'னு சொன்னாயே அவனா இவன்?''

''அவனேதான், ஏன் அடையாளம் தெரியாம நல்லா வளர்ந்துட்டானா?''

''அதில்லே, இப்பவும் எட்டாம் கிளாஸ் தான் படிக்கிறேன்னு சொல்றானே, அதனால கேட்டேன்...!''

— ஏம். கே. சங்கர்.



''எப்படிக் கேக்கறதுன்னு உனக்கா சொல்லித் தரணும்!''

''சரி.. நாளைக்கி துணிஞ்சிடறேன் சார்!''

மறுநாள் கடம்பத்தூரில் பொன்னம்மா இறங்கிய போது படாரென்று பூங்காவனமும் பின்னாலேயே இறங்கி விட்டான். நாளைக்கு ஒரு 'அட்வெஞ்சர்' கேட்கப் போகிற 'த்ரில்' எனக்கு.

மறுநாள் 8.15 வண்டியில் சென்ட்ரலில் பூங்காவனம் ஏறவில்லை. என் கற்பனையின் குதிரை வேகம் அதிகரித்து இரண்டு பேரும் பேஸின் பிரிட்ஜில் வந்து ஏறப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தது.

பொன்னம்மா மட்டும்தான் ஏறினாள். ஏறியவுடனே நான் வழக்கமாக உட்கார்கிற மூலை திரும்பி என்னைப் பார்த்தாள். ஒரு செதுக்கி எறிகிற பார்வை. வெலவெலத்தது. சமாளித்தேன். அப்புறம் ஒரு ஜிப்பை சர்ரென்று திறக்கிற மாதிரி என்னைப் பார்த்து. தைரியமாக — உல்லாசமாக — இதெல்லாம் உன் வேலைதானே என்று கேட்கிற மாதிரி சிரித்தாள்.

நான் ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டேன். பூங்காவனம் இல்லையே என்று ஒரே தவிப்பு. இந்தச் சிரிப்புக்கு அவனாயிருந்தால் கிறங்கியிருப்பான்.

மறுநாளும் பூங்காவனம் வரவில்லை. ஒரு வாரம். நான் தவறாமல் பொன்னம்மா வந்தாள். அழகாய், லட்சணமாய் இதுதான் சிரிப்பு பார்த்துக் கொள் என்று சவால் விடுகிற மாதிரி துணிச்சலாய் என்னைப் பார்த்துச் சிரிப்பாள். ஒன்றுக்கு இரண்டு முறை.

என்ன நேர்ந்தது? பூங்காவனம் நான்தான் யோசனை சொன்னேன் என்று இவளிடம் சொல்லியிருப்பானோ?

அவனை ஏன் காணோம்? ஒருவேளை உடம்பு சரியில்லையோ! எனக்கு ஒரே சஸ்பென்ஸ்.

மறுநாளும் அவன் வரவில்லையென்றால் சென்ட்ரலிலாவது திருவள்ளூரிலாவது நலம் விசாரிப்பது என்று முடிவு செய்தேன்.

பூங்காவனம் வந்தான். முகத்தில் எட்டு நாள் தாடி.

''என்ன பூங்காவனம் தாடி?''

''விடப் போறேன் சார்.''

பேஸின் பிரிட்ஜில் பொன்னம்மா பூக்கூடையோடு ஏறினாள். பூங்காவனத்தின் தாடியை ஓரக் கண்ணில் பார்த்து விட்டு அவளுடைய கூட்டாளிகளோடு குதூகலமாகச் சிரித்துச் சிரித்துப் பேசினாள். பிகையா கப்பட்டது.

''ரொம்ப ஓவரா இருக்கே?''

''எனக்கு வெறி ஏத்தறா சார்.''

''என்ன ஆச்சு?''

''அன்னிக்கி அவ எறங்கினவுடனே பின்னாடியே போனேன். ஸ்டேஷன் படிக்கட்டு எறங்கினதும் பொன்னம்மான்னு கூப்ட்டு நிறுத்தினேன். அலட்சியமா என்னைத் திரும்பிப் பார்த்தா. உங்கிட்ட ஒரு விஷயம் பேசணும்னேன். இப்படியே சொல்லுன்னா. தனியாப் பேசணுமென்னு சொன்னேன். இப்போ தனியாத்தானே நின்னுகிட்டிருக்கேன்னாள்...''

''என்ன பூங்காவனம் என்னமோ வாய் வீரம் பேசினே... தனியா ஒனக்குப் புடிச்ச பொண்ணுகிட்டே போயி எதுவோ கம்பெனியிலே வேலை கேக்கிற மாதிரி நெஞ்சேநிமிஞ்சேன்னு சொல்லியிருக்கியே.''

''முழுசாக் கேள் சார்! நான் ஒன்னைப் பொண்ணு பார்க்க வரலாம்னு நெனைக்கிறேன்னு சொன்னேன்...''

''ம்ம்... இது பரவாயில்லே. என்ன சொன்னா?''

''இப்படிக் கேளுன்னு ஒங்கூட வர்றாரே

மானேஜர் அவரு சொல்லியனுப்பிச்சா ரான்னு!"

கேட்டுக் கொண்டிருக்கிற எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"நீ என்ன சொன்னே?"

"இல்லே நானுத்தான் வந்தேன்னேன். நம்ப மாட்டேன்னு. யாரு சொல்லி இருந்தா இன்னு... சொல்லாகாட்டி இன்னு. இதான் விஷயம்னேன். ஒனக்கும் எனக்கும் சூட் ஆவாதே வாத்யாரேன்னு."

"வாத்யாரேன்னு சொன்னு?"

"ஆமா"

"வாத்யாருன்னு."

"அட ஆமா சார்...!"

"அப்புறம். ஏன்னு கேட்டியா?"

"கேட்டேனே! பளிச்சுனு கச்சிதமாச் சொல்லிட்டா. நீ நைட்ல வூட்டுக்கு வர மாட்டே. நைட் போர்ட்டர். நான் பகல்ல வூட்ல இருக்க மாட்டேன். பூ விக்கணும். எப்படி சூட் ஆவும்னு?"

"அப்போ?"

"அவ்ளோதான்"

"நீ தாடி வளர்க்க ஆரம்பிச்சுட்டியா?"

"வேற வழி?"

"நான் ஒண்ணு செய்யட்டா?"

"'எல்ப்' பண்றேன்றியா?"

"ஒரு சமரசம் பண்ணிப் பார்க்கலாமா?"

"எதுனா செய்! ஆனா இது நடக்கற கதை இல்லே."

"சும்மா ஒரு முயற்சி..."

அன்று ஒரு மணி ஆபீஸுக்குத் தாமத மானால் பரவாயில்லை என்று நான் கடம்பத்தூரில் இறங்கினேன்.

ஸ்டேஷனை விட்டு வேகமாக அவள் நடந்து போவாள். நான் ஓடிப் பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தேன். அவள் நிதானமாக எனக்காகக் காத்திருப்பவள் போல் நின்றாள்.

"பொன்னம்மா" என்று மென்று விழுங்கினேன். சிரித்து விட்டு கண்ணை ஒரு தரம் மூடித் திறந்தாள். கம் ஆன் புரொஸீட் என்பது போல.

"பூங்காவனம் ஒம் மேல உசிரையே வச்சிருக்கான்..." என்று ஆரம்பித்தேன்.

"அவர்கிட்டேயே சொல்லிட்டேனே."

"அதனாலேதான தாடி வுட்டுட்டான்."

"தாடி கீடியெல்லாம் இன்னு சார். இது இன்னு சினிமாவா டிராமாவா. எடுத்துடச் சொல்லுங்க. ஐயைய... போயும் போயும் இந்தக் காலத்துல எவனாவது பொம்பளை கெடைக்கலேன்னு தாடி வப்பானா?"

"இல்லே ஒம் மேல அவனுக்கு அவ்வளவு பிரியம்.. நான் காதல் என்ற வார்த்தையை உபயோகிக்கப் பயந்தேன்.

"ஒண்ணு சொல்ட்டா?"

"சொல்லு."

"எனக்கு ஒங்க மேல பிரியம். கட்டிக் கறீங்களா?"

நான் ஆடிப் போனேன்.

"நெசம்மா சொல்றியா பொன்

னம்மா?''

"நெஜம்தான்! நீங்க காய்கறி வண்டியிலே ஏர்றதே எனக்குத்தான்னு நெனச்சுக்கறேன். கட்டிக்க முடியுமா ஒங்களால...?''

அவள் என்னைத் துறுதுறுவென்று ஒரு பார்வை பார்த்தாள். சர்வ சகஜமாக ஒரு கள்ளமுமின்றித் தொடர்ந்தாள்.

"அட ஆசைப்படறுனேன்னு ஓர் ஆசைய வச்சுக் கட்டிக்கிறீங்கன்னு வச்சிக்குங்க... நான் ஒங்களுக்கு சூட் ஆயிடுவனா...?''

இது அடுத்த சம்மட்டியடி.

"இதே மாதிரிதான் பூங்காவனம் கதை. பூ வித்து நான் நாலு ஏக்கர் நெலம் வாங்கி வுட்டிருக்கேன். இந்த ஆளு கூலி தூக்கி இன்னு சம்பாரிச்சிருக்காரு? அதுவும் நைட்ல டூட்டி. பொயுது போடறதுக்குள்ள பூட்டணும். பொயுது மொளச்சாத்தான் வரணும். நடக்குமா சம்சாரம்? முதுகு முறியச் சொமந்துக்குனு வந்திட்டுத் தண்ணியடிப்பாரு. அப்பறம் இவுருக்கும் இவரு தண்ணிக்கும் சேத்து நான் லோலோன்னு பூ விக்கணும்...''

"பொன்னம்மா?''

"என்ன... அதான் சொல்டனே. எனக்கு ஒங்க மேல ஆசைன்னு... கட்டிக்கிறீங்களா, சொல்லுங்க... எனக்கும் ஒரு மானேஜர் பொஞ்சாதியா இருக்கணும்னு ஒரு ஆசை தான்!''

ஆசை என் மீதா என் மானேஜர் பதவி மீதா..., எனக்குக் கிறுகிறுத்தது.

"தா ஏன் இந்த வெயில்லே நின்னு பேசிக்கிட்டிருக்... தோ அங்க வாங்க!'' என்று அருகிலிருந்த சர்பத் கடைக்கு அழைத்தாள்.

என்ன இருந்தாலும் நான் ஓர் ஆண் மகனல்லவா? கூடப் போனேன்.

"நாயரே சாருக்கும் எனக்கும் ரெண்டு நன்னாரி சர்பத் போடு. டக்கரா இருக்கணும். சாரு பெரிய மானேஜரு. மெட்ராஸ் காரு. கரண்டியைக் கவுத்து வுட்டே நம்ம ஊரு மானம் பூடும்!''

சர்பத் 'டக்கராக'த்தான் இருந்தது. நான் சில்லறை கொடுக்கப் போனேன்.

"அவரு வாங்கிடுவாரா?'' என்று மறைமுகமாக நாயரை எச்சரித்து விட்டாள். இது எங்க ஊர் சார்.''

சில்லறையைக் கொடுத்து விட்டு நடந்தாள். கூட நான்.

"அப்போ என்ன சொல்றே?''

"நீங்கதான் சொல்லணும்.''


"எதுக்கு?''

அவள் பளீரென்று சிரித்தாள்.

"ஒரு பொம்பளே இவ்வளவு ஒப்பனு எப்பச் சொல்வா தெரியுமா சார். கிட்டாதாயின் வெட்டென மறங்கறப்ப. பாவம் தாடி எடுத்துடச் சொல்லுங்க!''

சர்பத் இனிப்பை விட அவள் வெளிப்படை எனக்குள் இனித்தது. என் தூதுக்குக் கூலியா? அல்லது எனக்கே ஓர் அங்கீகாரமா?

பொன்னியி



அத்தியாயம் 12

"தீயிலே தள்ளு!"

கொல்லன் சிறிது நேரம் தன் வேலையிலேயே கவனமாயிருந்தான். வந்தியத்தேவன் இரண்டு மூன்று தடவை கனைத்த பிறகு நிமிர்ந்து பார்த்தான்.

"யார், அப்பனே, நீ! உனக்குள்ளென்ன வேண்டும்? வாள், வேல் ஏதாவது வேண்டுமா? வாளுக்கும் வேலுக்குந்தான் இப்போதெல்லாம் தேவையில்லாமல் போய்விட்டதே? நீ வாளுக்கு எங்கே வந்திருக்கப் போகிருய்?" என்ருன் கொல்லன்.

ன் செல்வன்



"என்ன ஐயா, இவ்வாறு சொல்கிறீர்? உம்முடைய கையில் வாளை வைத்து வேலை செய்து கொண்டே வாளுக்குத் தேவையில்லையென்கிறீரே?" என்றான் வந்தியத்தேவன்.

"இது ஏதோ அபூர்வமாக வந்த வேலை; பழைய வாளைச் செப்பனிடுவதற்காகக் கொண்டு வந்தார்கள். சில வருஷங்களுக்கு முன்னால் பாண்டிய நாட்டுப் போரும் வட பெண்ணைப் போரும் நடந்து கொண்டிருந்த போது இந்தப் பட்டறையில் மலைமலையாக வேலும் வாளும் குவிந்திருக்கும். இலங்கை யுத்தம் ஆரம்பமான புதிதில் கூட ஆயுதங்களுக்குக் கிராக்கியிருந்தது. இப்போது வாளையும் வேலையும் கேட்பாரில்லை. பழைய வாள்களையும் வேல்களையும் என்னிடம் கொண்டு வந்து விற்பதற்காக வருகிறார்கள். நீ கூட அதற்காகத்தான் ஒருவேளை வந்தாயா, என்ன?"

"இல்லை; இல்லை! இன்னும் சில காலத்துக்கு எனக்கு வாள் தேவையாயிருக்கிறது. ஒப்புக் கொண்ட வேலையை முடித்துவிட்டால், அப்புறம் கையில் தாளத்தை எடுத்துக் கொண்டு தேவாரம் பாடிக் கொண்டு சிவ ஸ்தல யாத்திரை புறப்படுவேன். அப்போது வேணுமானால் என் ஆயுதங்களை உம்மிடமே கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்."

"பின்னே, இப்போது எதற்காக என்னைத் தேடி வந்தாய்?"

"என்னுடைய குதிரையைக் காட்டிலும் மேட்டிலும் விட்டுக் கொண்டு வந்தேன். இன்னும் வெகு தூரம் போயாக வேண்டும். குதிரைகளின் கால் குளம்புக்கு இரும்புக் கவசம் போடுவதாமே? அது உம்மால் முடியுமா?"

"ஆம்; அரேபியா தேசத்தில் அப்படித்தான் வழக்கம். இங்கேயும் சிலர் இப்போது குதிரைக் குளம்புக்கு இரும்பு லாடம் அடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். எனக்கும் கொஞ்சம் அந்த வேலையில் பழக்கம் உண்டு."

"என் குதிரைக்கு லாடம் போட்டுத் தருவீரா?"

"அதற்கு நேரம் அதிகம் பிடிக்கும். கையில் உள்ள வேலையை முடித்து விட்டுத்தான் உன் வேலையை எடுத்துக் கொள்ள முடியும்."

வந்தியத்தேவன் யோசித்தான். அவனுக்கும் களைப்பாயிருந்தது. குதிரையும் கஷ்டப்பட்டுப் போயிருந்தது. சிறிது நேரம் காத்திருந்து அதன் குளம்புகளுக்குக் கவசம் போட்டுக் கொண்டே போவது என்று முடிவு செய்தான்.

"கைவேலை முடியும் வரையில் காத்திருக்கிறேன். அப்புறமாவது உடனே செய்து தருவீர் அல்லவா?"

"அதற்கென்ன, ஆகட்டும்!"

வந்தியத்தேவன் சற்று நேரம் கொல்லன் காய்ச்சிச் செப்பனிட்ட வாளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இந்த வாள் அபூர்வமான வேலைப்பாடு அமைந்ததாயிருக்கிறதே? இராஜ குலத்து வாள் மாதிரி அல்லவா இருக்கிறது? இது யாருடைய வாள்?" என்றான்.

"அப்பனே! இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் அரிச்சந்திர நதி என்று ஓர் ஆறு ஓடுகிறது."

"நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் என்ன?"

"நான் அரிச்சந்திர நதிக்குச் சென்று அடிக்கடி தலைமுழுகி வருவது வழக்கம்."

"மிக்க நல்லகாரியம். போகும் இடத்துக்குப் புண்ணியம்."

"ஆகையால் கூடிய வரையில் மெய்யே சொல்லுவதென்றும் பொய் சொல்லுவதில்லையென்றும் வைத்துக் கொண்டிருக்கிறேன்."

"அதற்கு என்ன ஆட்சேபம்? உம்மை யார் பொய் சொல்லச் சொன்னது? நான் சொல்லவில்லையே?"

"நீ என்னை இந்த வாளைப் பற்றி ஒன்றும் கேள்வி கேட்காமலிருந்தால் நானும் பொய் சொல்லாமலிருக்கலாம்!"

ஓஹோ! அப்படியா சமாசாரம்?— என்று வந்தியத்தேவன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டான்.

"நான் கேள்வியும் கேட்கவில்லை; நீர் விரதபங்கமும் செய்ய வேண்டாம். கைவேலையைச் சீக்கிரம் முடித்து விட்டு என் வேலையை எடுத்துக் கொண்டு செய்து கொடுத்தால் போதும்!"

கொல்லன் மௌனமாகத் தன் வேலையில் கவனம் செலுத்தினான்.

வந்தியத்தேவன் வாளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் அடிப்பகுதியில், பிடியின் பக்கத்தில், மீன் உருவம் பொறிக்கப் பட்டிருப்பதைப் பார்த்து வியந்தான். மீன் உருவம் எதற்காக? அதற்கு ஏதேனும் பொருள் உண்டா! வெறும் அலங்காரத்துக்குத்தானா?

கொல்லன் அந்த மீன் உருவம் உள்ள இடத்தை மறுபடியும் தீயில் காட்டிக் காய்ச்சி அதன் பேரில் சுத்தியால் அடித்தான். மீன் உருவம் தெரியாமல் மறைப்பதுதான் அவனுடைய நோக்கம் என்று தோன்றியது.

எதற்காக இந்தக் காரியம் என்று வல்லவரையன் யோசனை செய்தான். யோசனை செய்து கொண்டிருந்த போதே, அவன் கண்கள் சுழலத் தொடங்கின. பல நாட்களாக அவனால் விரட்டியடிக்கப்பட்டு வந்த நித்திரா தேவி இப்போது தன் மோக மாயவலையை அவன் பேரில் பலமாக வீச ஆரம்பித்தாள். வந்தியத்தேவன் அதிலிருந்து தப்ப முடியவில்லை. சிறிது

நேரம் உட்கார்ந்தபடியே ஆடி விழுந்தான். பிறகு அப்படியே, கொல்லன் உலைக்குப் பக்கத்தில், படுத்துத் தூங்கிப் போனான்.

தூக்கத்தில்வல்லவரையன் பலபயங்கரக் கனவுகள் கண்டான். கத்தியைப் பற்றியே ஒரு கனவு. ஒருவன் வந்து கொல்லனிடம் கத்தியைத் திரும்பக் கேட்டான். கொல்லன் கொடுத்தான். "என்ன கூலி வேண்டும்?" என்று அவன் கேட்டான். "கூலி ஒன்றும் வேண்டாம். பழுவூர் இளையராணிக்கு நான் அளிக்கும் காணிக்கையாயிருக்கட்டும்" என்றான் கொல்லன்.

"ஜாக்கிரதை! இந்தவிஷயம்யாருக்கும் தெரியக் கூடாது. முக்கியமாக, பழுவூர் இளையராணியின் பெயரைச் சொல்லவே சொல்லாதே! சொன்னால் என்ன செய்வோம் தெரியுமா?......"

"நான் எதற்காக ஐயா, பழுவூர் ராணியின் பெயரைச் சொல்லப் போகிறேன்? ஒருவரிடமும் சொல்ல மாட்டேன்."

"இதோ இங்கே யாரோ ஒரு வாலிபன் படுத்திருக்கிறானே! சத்தம்போட்டுப் பேசுகிறாயே?"

"அவன் ஆழ்ந்தநித்திரையில் இருக்கிறான். இடி இடித்தாலும் அவனுக்குக் காது கேட்காது."

"ஒருவேளை அவனுக்குத் தெரிந்து விட்டது என்று தோன்றினால், இந்த உலைக் களத்தின் நெருப்பில் அவனைத் தூக்கிப் போட்டு வேலை தீர்த்து விடு!"

இந்தச் சம்பாஷணையின் முடிவில் கொல்லனும் கத்திக்கு உடையவனும் வந்தியத்தேவனை இழுத்துப் போய் உலைக்களத்தில் போடப் போவதாக வந்தியத்தேவன் கனவு கண்டான்.



பிறகு அந்தக் கனவு மாறியது.

வந்தியத்தேவனை யம தூதர்கள் நரகத்துக்கு அழைத்துச் சென்றார்கள். யம தர்மராஜன் பூலோகத்தில் வந்தியத்தேவனுடையநடவடிக்கைகளைப்பற்றி விசாரித்தான். "பொய் சொல்வதில் இவன் நிபுணன்; எத்தனை பொய் தான் சொல்லியிருக்கிறான் என்பதற்கு அளவே கிடையாது" என்றான் சித்திரகுப்தன், கையிலிருந்த ஓலையைப் பார்த்துவிட்டு.

"இல்லை, இல்லை! எல்லாம் சக்கரவர்த்தி குடும்பத்தாரின் சேவையிலே தான் சொன்னேன். எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதற்காகச் சில பொய்களைச் சொன்னேன்."

"எதற்காகச் சொல்லியிருந்தாலும் பொய் பொய்தான். தள்ளுங்கள் இவனை நரகத்தின் பெரிய நெருப்புக் குழியில்!" என்றான் யமன். உடனே நரகத்தின் உட்புறத்திலிருந்து நாலாயிரம் குரல்கள் பயங்கரமாக ஊளையிட்டன.

யம தூதர்கள் அவனை அழைத்துப் போனார்கள். பயங்கரமாகக் கொழுந்து விட்டெரிந்த பெரு நெருப்பில் அவனைத் தள்ளுவதற்கு ஆயத்தம் செய்தார்கள். அந்த யம தூதர்கள் இருவரையும் பார்த்தால், முகங்கள் பழுவேட்டரையர்களின் முகங்களைப் போலிருந்தன. அதைப் பற்றி அவன் திடுக்கிட்டு நிற்கையில் குந்தவை தேவி அங்கே வந்தாள். "என்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்காகவே அவர் பொய் சொன்னார். ஆகையால் அவருக்குப் பதிலாக என்னை நெருப்பிலே போடுங்கள்!" என்று கூறினாள்.

இந்தச் சமயத்தில் நந்தினி தேவியும் அங்கே எப்படியோ வந்து சேர்ந்தாள். "இரண்டு பேரையுமே சேர்த்து நெருப்பிலே போட்டு விடுங்கள்!" என்றாள் அந்தப் புண்ணியவதி. யம தூதர்கள் அவர்கள் இருவரையும்பிடித்து நெருப்பில் தள்ளப் போனார்கள். "ஐயோ! வேண்டாம்!" என்று வந்தியத்தேவன் அலறிக் கொண்டு நிமிறினான்; கண் விழித்து எழுந்து உட்கார்ந்தான். கண்

டது கனவு என்ற எண்ணம் ஆறுதல் கொடுத்தது. ஆனால் எல்லாம் உண்மையாக நடந்தது போலவே தோன்றியபடியால் அவன் உடம்பு இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது.

சேச்சே! இனிமேல் எக்காரணத்துக்காகவும் பொய் சொல்லக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான்.

"ரொம்ப நேரம் தூங்கிப்போய்விட்டேனா?" என்று கொல்லனைப் பார்த்துக் கேட்டான்.

"அப்படி ரொம்ப நேரம் ஆகிவிடவில்லை. இரண்டு ஜாமம்தான். அப்பனே! நீ கும்பகர்ணன் வம்சத்தில் வந்தவனோ? பட்டப்பகலில் இப்படித் தூங்குகிறாயே? இரவிலே எப்படித் தூங்க மாட்டாய்?" என்றான் கொல்லன்.

"கடவுளே! இரண்டு ஜாம நேரமா தூங்கி விட்டேன்? குதிரைக் குளம்புக்குக் கவசம் செய்தாகி விட்டதா?"

"இனிமேல்தான் செய்ய வேண்டும். ஆனால் உன்னைப் போன்ற தூங்கு மூஞ்சிக்கு அதனால் என்ன பயன்? நீ குதிரையையே பறி கொடுத்து விடுவாய்! இன்னும், உன்னையே கூடப் பறி கொடுத்து விடுவாய்!"

வந்தியத்தேவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. எழுந்து ஓடிப் போய் வாசற்பக்கம் பார்த்தான். குதிரையை நிறுத்திய இடத்தில் அதைக் காணோம்.

"ஐயோ! குதிரை எங்கே?" என்று இரைச்சல் போட்டுக் கொண்டே உடைவாளின் பிடியில் கைவைத்தான்.

"பயப்படாதே! உன் குதிரை பத்திரமாயிருக்கிறது. கொல்லைப்புறத்தில் போய்ப் பார்!"

வந்தியத்தேவன் கொல்லைப்புறம் சென்று பார்த்தான். அங்கே மூன்று பக்கம் அடைக்கப்பட்ட கீத்துக் கொட்டகையில் அவனுடைய குதிரை நின்று கொண்டிருந்தது. கொல்லன் உலைக் களம் ஊதிய சிறுபிள்ளை அதன் வாயில் புல் கொடுத்துக் கொண்டிருந்தான். வந்தியத்தேவனைப் பார்த்ததும் குதிரை உடலைச் சிலிர்த்துக் கொண்டு கனைத்தது.

"ஐயா! இங்கே வந்து கொஞ்சம் உங்கள் குதிரையைப் பார்த்துக் கொள்ளுங்கள். இதன் குளம்புகளுக்கு அளவு எடுக்க வேண்டும்!" என்றான் பையன்.

வந்தியத்தேவன் குதிரை அருகில் சென்று அதைத் தடவிக் கொடுத்துக் கொண்டு நின்றான்.

பையன் குதிரையின் குளம்புக்கு அளவு எடுத்தான்.

"இதை யார் இங்கே கொண்டு வந்து கட்டினார்கள்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"நான்தான் கட்டினேன்."

"எதற்காக?"

"அப்பா கட்டச் சொன்னார்."

"அது எதற்காக?"

"இந்த ஊர் வழியாகச் சற்று முன்னால் பெரிய பழுவேட்டரையரும் அவர் பரிவாரங்களும் போனார்கள். குதிரையை வாசலில் பார்த்திருந்தால் கட்டாயம் கொண்டு போயிருப்பார்கள்."

வந்தியத்தேவனுக்குப் பழைய ஞாபகம், — திருநாராயணபுரத்து ஞாபகம், — வந்தது. தான் செய்த தவறை எண்ணி வெட்கம் அடைந்தான். கொல்லனிடமும் அவன் மகனிடமும் மனத்திற்குள் நன்றி உணர்ச்சி கொண்டான்.

குதிரையின் குளம்புக்கு அளவு எடுத்துக் கொண்டதும் இருவரும் உலைக் களத்துக்குள் வந்தார்கள்.

கொல்லன் இரும்புத்துண்டை எடுத்துக் குளம்பைப் போல் வளைத்து வேலை செய்யத் தொடங்கினான்.

"என் குதிரையைக் காப்பாற்றிக் கொடுத்தீரே? அதற்காக மிக்க வந்தனம்" என்றான் வல்லவரையன்.

"என்னைத் தேடி வருகிறவர்களுடைய உடைமையை நான் காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமல்லவா? அது என் கடமை."

"பழுவேட்டரையர் பரிவாரம் இந்தப் பக்கம் போய் எத்தனை நேரமிருக்

கும்?''

''இரண்டு நாழிகைக்கு மேலேயிருக்கும். அவ்வளவு ஆர்ப்பாட்டத்துக்கும் நீ தூங்கிக் கொண்டிருந்தாயே, அதை நினைத்தால்தான் எனக்கு வியப்பாக இருக்கிறது.''

''நான்தான் தூங்கிப் போய்விட்டேன். இத்தனை நேரம் நீர் வீணாக்கி விட்டீரே? அவர்கள் போன பிற்பாடாவது வேலையை உடனே ஆரம்பித்திருக்கலாமே?''

''எப்படி ஆரம்பிப்பது? அவர்கள் கொண்டு வந்த செய்தியைக் கேட்ட பிறகு யாருக்கு வேலை செய்ய மனம் வரும்? உனக்காக மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு இதை நான் செய்கிறேன். எங்கிருந்து அப்பனே, நீ வருகிறாய்?''

அவர்கள் கொண்டு வந்த செய்தி என்னவாயிருக்கும் என்று யோசித்துக் கொண்டே வந்தியத்தேவன், ''இலங்கையிலிருந்து வருகிறேன்'' என்றான்.

கொல்லன் அவனுடைய முகத்தை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''இலங்கையில் இருந்தபோது இளவரசர் அருள்மொழி வர்மரைப் பார்த்தாயா?'' என்றான்.

உண்மையே சொல்லுவதென்று சற்றுமுன்பு சங்கல்பம்செய்துகொண்டிருந்த வந்தியத்தேவன், ''பார்த்தேன்'' என்றான்.

''கடைசியாக அவரை நீ எப்போது பார்த்தாய்?''

''இன்று காலையில் பார்த்தேன்.''

கொல்லன் வந்தியத்தேவனைக் கோபமாய் நோக்கினான்.

''விளையாடுகிறாயா, தம்பி!''

''இல்லை, ஐயா, உண்மையைத்தான் சொன்னேன்.''

''இளவரசர் இப்போது எங்கேயிருக்கிறார் என்று கூடச் சொல்வாய் போலிருக்கிறதே!''

''ஓ! கேட்டால் சொல்லுவேன்!''

''இளவரசர் எங்கே இருக்கிறார்? சொல் பார்க்கலாம்.''

''நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் இருக்கிறார்!''

''அப்பனே! நானும் எத்தனையோ பொய்யர்களைப் பார்த்திருக்கிறேன். உன்னைப் போல் கட்டுக் கதை புனைந்துரைக்கக் கூடியவர்களைப் பார்த்ததேயில்லை.''

வந்தியத்தேவன் தன் மனத்திற்குள் சிரித்துக்கொண்டான். புனைந்து கூறும் பொய்யை நம்புவதற்கு எல்லோரும் ஆயத்தமாயிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் நம்ப மறுக்கிறார்கள். இது நமது ஜாதக விசேஷம் போலும்!

''தம்பி! நீ இலங்கையிலிருந்து எப்போது புறப்பட்டாய்?''

''நாலு நாளைக்கு முன்னால்!''

''அதனாலேதான் உனக்குச் செய்தி தெரியவில்லை.''

''என்ன செய்தி ஐயா!''

''பொன்னியின் செல்வரைக் கடல் கொண்டு விட்டது என்ற செய்திதான்!''

வந்தியத்தேவன் கஷ்டப்பட்டுத் திடுக்கிடுவது போல் பாசாங்கு செய்தான்.

''ஐயோ! அப்படியா? யார் சொன்னார்கள்!''

''நேற்று முதல் இங்கெல்லாம் அப்படிப் பேச்சாயிருந்தது. இன்றைக்குப் பழுவேட்டரையர் இவ்வழியாகப் போன போது ஊர்த் தலைவர்கள் அவரைக்கேட்டார்கள். அந்தச்செய்தி உண்மைதான் என்று பழுவேட்டரையர் கூறினார். அந்தச் சண்டாளப் பாவியின் தலையில் இடி விழவில்லையே!''

''ஏன் அந்தக் கிழவரை வைகிறாய்?''

''அவராலேதான் இது நடந்திருக்கிறது. ஏதோ சூழ்ச்சி செய்து இளவரசரை அவரே கடலில் மூழ்க அடித்து விட்டார் என்று ஊரார் சொல்லுகிறார்கள். அதனால் அவருக்காக ஏற்பாடு செய்திருந்த உபசாரங்களையும் நிறுத்தி விட்டார்கள்.''

''இளவரசர் மீது இந்த ஊராருக்கு அவ்வளவு பிரியமா?''

''கேட்க வேண்டுமா? ஊர் மக்கள் அவ்வளவு பேரும் இப்போது கண்ணீரும் கம்பலையுமாயிருக்கிறார்கள். இந்த ஊரார் மட்டும் என்ன? சோழ

நாடு முழுவதும் ஓலமிட்டு அழப்போகிறது. பழுவேட்டரையர்களைச் சபிக்கப் போகிறது. ஏற்கெனவே சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டிருக்கிறார். இந்தச் செய்தி கேட்டு என்ன பாடுபடுவாரோ தெரியாது. இன்னும் என்னவெல்லாம் விபரீதங்கள் நடக்குமோ? சில நாளாக வானத்தில் தூமகேது தோன்றி வருகிறதே? அதற்கு ஏதேனும் நடந்துதானே தீர வேண்டும்?"

நடக்கக் கூடிய விபரீதங்கள் என்னவாயிருக்கக் கூடும் என்று வந்தியத்தேவன் எண்ணிப் பார்த்தான். தான் கூறியதை இந்தக் கொல்லன் நம்பாமலிருந்ததே நல்லதாய்ப் போயிற்று. தான் இனிமேல் பொய் சொல்லாவிட்டாலும் இளவரசரைப் பற்றிய உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. இளைய பிராட்டி ஏதோ முக்கிய காரணத்திற்காகத்தானே அவரைச் சூடாமணி விஹாரத்தில் இருக்கச் சொல்லியிருக்கிறார்! இளவரசியைக் கண்டு பேசிய பிறகு, அவர் சொல்லும் யோசனைப் படி நடந்து கொள்ள வேண்டும்.



"தம்பி! என்ன யோசிக்கிறாய்?" என்றான் கொல்லன்.

"நடுக்கடலில் சுழற்காற்றில் நானும் அகப்பட்டுக் கொண்டேன். கடவுள் அருளால் நான் தப்பிப் பிழைத்ததை நினைத்துப் பார்த்துக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்."

"கடவுள் அருள் என்பது ஒன்று இருக்கிறதா, என்ன?"

"பெரியவரே! அது என்ன அப்படிச் சொல்லுகிறீர்?"

"கடவுள் அருள் என்பதாக ஒன்று இருந்தால் பழுவேட்டரையர்களின் அக்கிரமங்கள் இன்னும் நடந்து கொண்டிருக்குமா? பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கியிருப்பாரா?"

"பெரியவரே! பழுவேட்டரையர்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள். அவர்களைப் பற்றி இப்படியெல்லாம் பேசலாமா? யார் காதிலாவது விழுந்தால்? கொஞ்சம் ஜாக்கிரதையாயிருங்கள்."

"என்னை விட நீதான் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நானாவது விழித்துக் கொண்டிருக்கும் போது பேசுகிறேன். நீ தூக்கத்தில் உளறுகிறாய்!"

"ஐயையோ! என்ன உளறினேன்?"

"பழுவேட்டரையர்களை யமதூதர்கள் என்று சொன்னாய். பழுவூர் இளைய ராணியைப் பெண் பேய் என்று சொன்னாய். நீ சொன்னது என்னமோ உண்மைதான். ஆனால் என்னைத் தவிர வேறு யார் காதிலாவது விழுந்தால் உன் கதி என்ன? நீ அப்படிப் பிதற்றிக் கொண்டிருக்கிற சமயத்திலேதான் இந்தச் சாலைவழியாகப் பழுவேட்டரையர்களின் பரிவாரங்கள் போயின. எனக்கு ரொம்பத் திகிலாய்ப் போய் விட்டது."

"நீர் என்ன செய்தீர்?"

"வாசற்பக்கம் போய் நின்று இந்த உலைக் களத்தின் கதவையும் சாத்திக் கொண்டேன். அதற்கும் முன்னால் உன் குதிரையைக் கொல்லைப்புறம் கொண்டு போய்க் கட்டியாயிற்று."

"தூக்கத்தில் நான் இன்னும் ஏதாவது உளறினேனா?"

"உளறலுக்குக் குறைவேயில்லை."

"ஐயோ! என்ன உளறினேன்?"

“நீ இளவரசரைப் பழையாறைக்கு வரும்படி வற்புறுத்தினாய். அவர் பழுவேட்டரையர் கட்டளைப்படி சிறைப்படுவேன் என்றார். இன்னும் என்னவெல்லாமோ சொன்னாய், தம்பி! பழையாறை இளையபிராட்டியைக் குறித்துக் கூட ஏதேதோ சொன்னாய். ஜாக்கிரதை, அப்பனே, ஜாக்கிரதை!”

வந்தியத்தேவன் வெட்கித் தலைகுனிந்தான். இளைய பிராட்டியைக் குறித்து அனுசிதமாக ஏதாவது பேசிவிட்டோமா என்று பீதி அடைந்தான். இனிமேல் தூங்குவதாயிருந்தால் தனி அறையில் கதவைத் தாளிட்டுக் கொண்டு தூங்க வேண்டும். அல்லது மனித சஞ்சாரம் இல்லாத காட்டிலோ, பாலைவனத்திலோ, மலைக்குகையிலோ தூங்க வேண்டும்.

“தம்பி! சுழற் காற்றில் நீ எப்படி அகப்பட்டுக் கொண்டாய்? எப்படித் தப்பிப் பிழைத்தாய்?”

“நான் ஏறி வந்த கப்பல் இடி விழுந்து கடலில் முழுகி விட்டது. முறிந்த பாய் மரத்தைப் பிடித்துக் கொண்டு வெகுநேரம் மிதந்தேன். பிறகு ஓடக்காரப் பெண் ஒருத்தியின் உதவியால் தப்பிக் கரையேறினேன்.”

“இளவரசரும் ஒருவேளை அவ்விதம் தப்பிப் பிழைத்திருக்கலாம் அல்லவா?”

“கடவுள் சித்தமிருந்தால் தப்பிப் பிழைத்திருக்கலாம்.”

“நேற்றிரவு நீ எங்கே தங்கினாய்?”

“கோடிக்கரையிலேதான். கடற்கரையோரத்தில் பழுவேட்டரையர் பரிவாரங்கள் ஒரே கூட்டமாயிருந்தது. ஆகையால் குழகர் கோவிலில் சிறிது நேரம் படுத்துத் தூங்கினேன். பொழுது விடிவதற்குள் புறப்பட்டு விட்டேன்.”

“அதனால்தான் உனக்கு இளவரசர் செய்தி தெரியவில்லை போலிருக்கிறது.”

“நீர் தெளிவுபடுத்தியதற்காக வந்தனம். ஐயா! நான் பழையாறைக்குக் கூடிய சீக்கிரம் போக வேண்டும். பழுவேட்டரையரின் பரிவாரத்திடம் சிக்காமல் போக வேண்டும். எந்த வழியாகப் போவது நல்லது?”



“பழுவேட்டரையர் தஞ்சாவூர் இராஜபாட்டையில் போகிறார். நீ முல்லையாற்றங்கரையோடு போனால் பழையாறையை அடையலாம்.”

“நீங்கள் கொஞ்சம் சீக்கிரமாகவே குதிரைக் குளம்புக்குக் கவசம் அடித்துக் கொடுத்தால் நல்லது.”

“இதோ!” என்றான் கொல்லன்.

வளைத்துக் காய்ச்சியிருந்த இரும்பைச் சுத்தியினால் அடிக்கத் தொடங்கினான்.

''இது பெரிய பழுவேட்டரையருக்கு! இது சின்னப் பழுவேட்டரையருக்கு! இந்த அடி சம்புவரையருக்கு! இது மழவரையருக்கு!'' என்று சொல்லிக் கொண்டே அடித்தான். இதிலிருந்து அந்தச் சிற்றரசர்கள் பேரில் நாட்டு மக்கள் எவ்வளவு கோபம் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒருவாறு வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான்.

குதிரைக் குளம்புகளுக்கு லாடம் அடித்து முடிந்தது. செய்து கொடுத்த வேலைக்காகக் கொல்லனுக்குக் காசு தர வந்தியத்தேவன் யத்தனித்தான். கொல்லன் அதைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மறுத்து விட்டான்.

''நீ நல்ல பிள்ளை என்பதற்காகச் செய்து கொடுத்தேன். காசுக்காகச் செய்து தரவில்லை'' என்றான்.

வந்தியத்தேவன் மறுபடியும் கொல்லனுக்கு நன்றி கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

புறப்படும் சமயத்தில் கொல்லன், ''தம்பி! பழையாறைக்கு நீ எதற்காகப் போகிறாய்?'' என்று கேட்டான்.

''ஐயா! நீங்கள் என்னை அதைப் பற்றி ஒன்றும் கேட்காமலிருந்தால் நான்பொய்சொல்லவேண்டிய அவசியமும் ஏற்படாது'' என்றான் வல்லவரையன்.

கொல்லன் சிரித்துவிட்டு, ''அப்பனே! நீ துரிதமாகக் கெட்டிக்காரன் ஆகி வருகிறாய்! தூங்குகிற போதும் இவ்வளவு ஜாக்கிரதையாயிரு!'' என்று சொல்லி விடைகொடுத்து அனுப்பினான்.

வந்தியத்தேவன் மறுபடியும் பிரயாணம் தொடங்கிய போது சூரியன் அஸ்தமிக்கும் நேரமாகி விட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தி மயங்கி இருள் சூழ்ந்து வந்தது. இதற்குள் முல்லையாற்றங்கரையை வல்லவரையன் பிடித்து விட்டான். அதற்குமேல் ஆற்றங்கரையோடு போக வேண்டியதுதான். வழி விசாரிக்க வேண்டிய அவசியம் கூடக் கிடையாது.

முன்னிருட்டு வேளைதான். ஆனால் வானத்தில் ஆயிரங்கோடி நட்சத்திரங்கள் ஒளிச்சுடர்களாக விளங்கின. முல்லை நதியின் கரைகளில் மரங்கள் அதிகம் இல்லை. சிறிய சிறிய புதர்கள் தான் இருந்தன. ஆகையால் வழி கண்டுபிடித்துப் போவதற்கு வேண்டிய வெளிச்சம் விண் மீன்கள் தந்தன.

வானத்தில் ஜொலித்த நட்சத்திரங்களோடு போட்டியிடுவது போல் ஆயிரக்கணக்கான மின்மினிப் பூச்சிகள் நதிக்கரைப்புதர்களைச் சுற்றிவட்டமிட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் உற்சாகம் ததும்பியது. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. நாடெல்லாம் இளவரசரைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருக்கும்போது அவனுக்கு மட்டும் அவர் பத்திரமாயிருக்கிறார் என்ற செய்தி தெரிந்திருந்தது. இளவரசரிடம் சோழ நாட்டு மக்கள் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறார்கள் என்பதை அவன் ஓரளவு தெரிந்துகொள்ள முடிந்தது. மந்திர வாதி ரவிதாஸனை அவன் மறுபடியும் ஏமாற்ற முடிந்ததை நினைக்கக் குதூகலமாயிருந்தது. இதையெல்லாம் விடக் குந்தவை தேவியைச் சீக்கிரத்தில் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணம் அவனுக்கு எல்லையில்லாத மனக்கிளர்ச்சியை அளித்தது.

வெறுமனேயா பார்க்கப் போகிறான்? இளைய பிராட்டி கூறிய காரியத்தைச் செய்து முடித்துவிட்டுப் பார்க்கப் போகிறான்! அந்தக் காரியத்துக்கு ஏற்பட்ட தடங்கல்களையெல்லாம் நினைத்து அவற்றையெல்லாம் தான் எதிர்த்து வெற்றி கொண்டதையும் எண்ணி அவன் பெருமிதம் அடைந்தான். நாளை மாலை இந்த நேரத்துக்குள் இளையபிராட்டியைச் சந்தித்து விடுவோம் என்பதில் சந்தேகமில்லை. ஆகா! அந்தச் சந்திப்பைக் குறித்து எண்ணும் போதே அவனுக்கு மெய் சிலிர்த்தது.

நட்சத்திரச் சுடர்களால் விளங்கிய வானமும் மின்மினிகள் பறந்த பூமியும் சலசலவென்ற சத்தத்துடன் ஓடிய முல்லையாற்று வெள்ளமும் மந்த மந்தமாக வந்த குளிர் பூங்காற்றும் வந்



துடியான வாழ்வுக்கு ஒப்பில்லாத் துணை ஸ்டே:ப்ரீ பெல்ட்லஸ் ஸானிட்டரி நேப்கின்கள். பெல்ட்டு, கயிறு, கச்சை, கொக்கி, ஊசி எதுவுமே வேண்டாம். சௌகரியத்தில் இணையற்றது ஸ்டே:ப்ரீ. உலர்ந்த மாறாத சுகம் எந்த நேரமும் எனதே. மாதம் எந்த நாளிலும் சுக லாகவமுடன் இருக்க முடிகிறது என்னால்!

பலத்த திரவப் போக்கு உள்ள நாட்களிலேயோ நம்பிக்கையோடு நான் உபயோகிப்பது ஸ்டே:ப்ரீ ஸுப்பர்; காரணம் அது அளவிற் பெரிதாக இருப்பதால் கூடுதலான பாதுகாப்பு பத்திரமான உறுதியோடு கிடைக்கிறது எனக்கு.

இப்போது, ஸ்டே:ப்ரீ டியோடரன்ட்டும் உள்ளதே. ஸ்டே:ப்ரீ டியோடரன்ட் ஸேனிட்டரி நேப்கின்கள் மாதவிடாயின் வாடையைக் குறைக்க உறுதுணையாக உள்ளது. ஆகவே நான் புத்துணர்வுடன் நிலைபெறுவதோடு, மனம்போல் எதையும் செய்கிறேன் தன்னம்பிக்கையுடனே.

எனவேதான், நான் ஸ்டே:ப்ரீ உபயோகிக்கிறேன். என்னை நாளுக வாழ வைக்கிறது.இது ஓர் அரும்பேறுதானே!

உரித்தெடுத்து ஒட்டினால் போதும்

நேப்கினின் மூன்று-படல பசைப் பட்டிகளை, மிக இறுகலான ஜட்டியோடு அழுந்த ஒட்டிவிடுங்கள். அது நகராது. நழுவாது. உரியாது. சரியாது.



ஸ்டே:ப்ரீ* பாதுகாப்புத் திட்டம்

ரெகுலர்	முழுப் பாதுகாப்பு. பத்திரமான காப்புறுதி.
ஸுப்பர்	பலத்த திரவப் போக்கின் போதும், இரவு முழுமைக்கும் உபயோகிக்கவும் கூடுதலான பாதுகாப்பு.
டியோடரன்ட்	முழுமொத்தப் பாதுகாப்புடனே வாடை நீக்கிய புத்துணர்வு.

OBM 2527 TAM

ஸ்டேஃப்ரீ*... என்றும் போல் நீங்கள் ஓர் சுதந்திரச் சிட்டு.

* ஸ்டே:ப்ரீ என்பது ஜான்ஸன் & ஜான்ஸன் யு.எஸ்.ஏ. டிரேடு மார்க் ஆகும்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

அருள்வாக்கு

மதம் எதற்கு? ஒரு மத குரு சொல்லுவதை நாம் ஏன் கேட்கப் போகிறோம்? நமக்குக் கஷ்டம் போவதற்காகவும் குறை நீங்குவதற்காகவும் போகிறோம். குறையில்லா விட்டால் வேண்டியதில்லை. குறை அதிகமானால் அதிகமாகக் கோயிலுக்குப் போகிறோம்; அதிகமாகப் பெரியவர்களைத் தரிசிக்கிறோம்; உபதேசம் கேட்கிறோம். குறையில்லா விட்டால் உபதேசம் வேண்டாம். நமக்குள்ள ஸந்தேகங்களையும் கஷ்டங்களையும் போக்கிக் கொள்வதற்காக நாம் பெரியவர்களிடம் போகிறோம்; புஸ்தகங்களை வாசிக்கிறோம்; நல்லவர்களிடம் உபதேசம் பெறுகிறோம். மஹா க்ஷேத்திரங்களுக்குப் போகிறோம். தீர்த்த ஸ்நானம் செய்கிறோம். அப்படிச் செய்வதால் மனம் கொஞ்சம் கொஞ்சமாகச் சாந்தி அடைகிறது. முழுவதும் சாந்தி அடைந்தவர்கள் வெட்டினாலும் குத்தினாலும் பூஷித்தாலும் தூஷித்தாலும் ஆனந்தமாக இருக்கிறார்கள். புஸ்தகம் வாசித்தல், குரு தரிசனம் செய்தல் முதலியவற்றால் இந்த சாந்தி ஏற்படுகிறது. எல்லா ஜாதிகளிலும் மஹான்கள் ஜனிக்கிறார்கள்; மனத்தில் சாந்தி அடைகிறார்கள். இந்த



சாந்திக்குரிய மார்க்கத்தைத்தான் ''மதம்'' என்பது. இதன் பேர் ''தர்மம்'' என்று சொல்லுவார்கள். தர்மமானது ஸ்ரேயஸுக்கு ஸாதனம். அதுதான் மதம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தியத்தேவனைப் பரவசமடையச் செய்தன. வானமும் பூமியும் ஒரே ஆனந்தமயமாக அவனுக்கு அச்சமயம் தோன்றியது. பழைய காதல் பாட்டு ஒன்று அவனுக்கு நினைவு வந்தது. தான் வாய் விட்டு உற்சாகமாகப் பாடுவதற்குத் தகுந்த இடம்தான் இது. சுற்றுப்புறமெங்கும் மனித சஞ்சாரமே கிடையாது. ஏன்? பட்சிகள் கூடக் கூடுகளிலே சென்று அடங்கிவிட்டன. அவன் பாடுவதற்குஎன்ன தடை இருக்கிறது? இதோ அவன் பாடிய பாட்டு. யாரை மனத்தில் நினைத்துக் கொண்டு பாடினான் என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா?

''வானச் சுடர்களெல்லாம்
மானே உந்தனைக் கண்டு
மேனி சிலிர்க்குதடி — அங்கே
மெய்ம்மறந்து நிற்குதடி!

தேனே உந்தன் குரல்தான்
தென்றலோ உன் வாய் மொழிகள்
மீனொத்த விழி மலர்கள்—கண்டால்
வெறி மயக்கம் தருவதேனோ!''

வந்தியத்தேவன் இப்படிப் பாடி முடித்தானோ இல்லையோ, அவனுடன் போட்டி போடுவது போலத் தூரத்தில் நரிகள் ஊளையிடத் தொடங்கின.

அதே சமயத்தில் மனிதக் குரலில் கலகலவென்று சிரிக்கும் சத்தம் கேட்டது.

வந்தியத்தேவன் சிறிது மிரண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுடைய கை உடைவாளில் சென்றது.

புன்னைமரம் ஒன்றின் கரிய நிழலிலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டது.

''தம்பி! உன் பாட்டுப் பிரமாதம்! நரிகளின் போட்டி கானம் அதைவிடப் பிரமாதம்!'' என்று கூறிவிட்டுத் தேவராளன் மீண்டும் சிரித்தான்.

(தொடரும்)

எட்டு மணியிலேர்ந்து பன்னிரண்டு மணி வரைக்கும் ஏவி. எம்.லே 'மடியில் விழுந்த மாங்கனி' ஷூட்டிங். லஞ்சுக்கப்புறம் வாஹினியிலே 'தியாகி' பட ஷூட்டிங். ஆறு மணிக்கு மைலாப்பூர் நண்பர்கள் கலாசார கு ழு வி ன ர் நடத்தற ஒரு பாராட்டு விழாவிலே கலந்துக்கறிங்க...

அவன் கலந்து கொள்ள வேண்டிய அன்றைய நிகழ்ச்சிகளைப் படித்துக் கொண்டிருந்த காரியதரிசியைக் கையமர்த்தினான் சூப்பர் ஸ்டார் நிலவழகன்.

"பாராட்டுக் கூட்டம் எனக்குத்தானே?"

'எப்பவும் உன்னைத்தான் மத்தவங்க பாராட்டணுமா? நீ யாரையும் பாராட்டக் கூடாதா?' என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்ட காரியதரிசி,

"இல்லீங்க. இது ஒரு சுதந்திரப் போராட்ட வீரருக்கு நடக்கிற கூட்டம். அவர் அந்தக் காலத்திலே சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஜெயிலுக்குப் போனவர். பதினேழு வருஷங்களை ஜெயிலேயே கழிச்சவர். 'தியாகி ஆறுமுகம்'னு அவரைச் சொல்லுவாங்க. அவருக்கு இப்போ எண்பது வயசு. நாட்டுக்காகச் சொந்த வாழ்க்கையையே தியாகம் செஞ்சவர். ஜெயிலில் பற்பல சித்திரவதைகளை

நிழல்களின் காலம்



அனுபவிச்சவர், நாட்டுக்காக! அவரைத் தான் இப்போ பாராட்டறாங்க. சுதந்திரம் வந்து நாற்பது வருஷம் முடிஞ்சதுக்கு அடையாளமா இதைச் செய்யறாங்க. அதுல நீங்களும் கலந்துக்கிட்டு நாலு வார்த்தை பாராட்டிப் பேசணும்...!'' என்றார்.

''அவனை நான் எதுக்குப் பாராட்டணும்? இது மாதிரி பைசா பெறாத நிகழ்ச்சிக்கெல்லாம் ஏன் ஒத்துக்கறீங்க?'' — எரிந்து விழுந்தான் சூப்பர் ஸ்டார்.

'நீ சினிமாவிலே பண்றதையெல்லாம் அவர் நிஜமாவே பண்ணியிருக்கார்யா... அவரை ஒருதரம் கண்ணாலேதான் பாரேன்...' என்று சொல்ல ஆசைப்பட்ட காரியதரிசி, தன் உத்யோகத்தையும் அதை நம்பியுள்ள பெரிய குடும்பத்தையும் நினைத்து, ''வந்து ஸார், அந்த மீட்டிங்லே ஒரு முக்கியமான மந்திரி கலந்துக்கறார். அவருக்கு சென்டர்லே நல்ல மதிப்பு. இப்பத்திலேர்ந்தே அவருகிட்டே பழகி வச்சிங்கன்னா, நாளைக்கு இன்கம்டாக்ஸ், அது இதுன்னு பிரச்னை வந்தா உதவியா இருக்கும். அவரோட பழக்கம் ஏற்படுத்திக்க இந்த மீட்டிங் ஒரு சான்ஸாச்சேன்னு...'' என்று இழுக்க......

''பரவாயில்லையே!''என்றான் நிலவழகன்.

''அது மட்டுமில்லேங்க...'' என்று ஆரம்பித்த காரியதரிசியின் கண்களில் மிளிர்ந்த குறும்பைக் கண்ட சூப்பர் ஸ்டார்,

''வேறே என்ன?'' என்றான்.

'''புதுமலர்' படப் புகழ் மலர்க் குழலியும் அந்த விழாவிலே கலந்துக்கறாங்க!'' என்று காரியதரிசி சொன்னதும் துள்ளிக் குதித்தான் நடிகன்.

''ஹை, சபாஷ்! உண்மையிலேயே நீ பெரிய ஆள்தானய்யா! ஷூட்டிங் முடிஞ்சதும், நான் அவளைப் பிக்கப் பண்ணிக்கிறேன்...'' என்றான் நிலவழகன்.

அமைச்சரின் அறைக்கதவில் பொருத்தப்பட்டிருந்த சிறு கண்ணாடி வழியே, உள்ளே பார்வையை ஓடவிட்ட அமைச்சரின் பிரைவேட் செகரெட்டரி, உள்ளே அமைச்சரும், அவருடைய கட்சி ஆள் ஒருவரும் மிகவும் தீவிரமாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, 'ப்ச்' என்று சலிப்பைக் காட்டியவாறு தம் அறைக்குத் திரும்பினார்.

''ஆறு மணிக்கு மீட்டிங்குன்னு பத்துத் தரம் ஞாபகப்படுத்தியாச்சு. இப்பவே மணி 6.15. இவங்க எப்ப வெளிய வர்றாங்களோ! அந்தத் தியாகி பாவம் காத்திருக்க வேண்டியதுதான் என்று நினைத்த பி.ஏ. 'எப்ப மீட்டிங் முடிஞ்சு எப்ப அமைச்சர் வீட்டுக்குப் போறாரோ? நாம எப்ப வீட்டுக்குப் போறதோ? இப்படியே தினமும் நடந்தா வீட்லே பொண்டாட்டி, பிள்ளைங்களுக்கு நம்ப முகமே மறந்துடப் போவுது...' என்று எரிச்சலுற்ற அவர், ஏண்டாப்பா இந்த வேலைக்கு வந்தோம் என்று வருத்தப்


சத்யா ஸ்ரீனிவாசன்

பட ஆரம்பித்தார்.

உள்ளே அமைச்சர் மிகவும் காட்டமாக இருந்தார்.

''தோ பார் பழனி, ஏதோ நம்ப ஆள் ஆச்சேன்னுதான் பத்து லட்சத்துக்கு ஒத்துக்கிட்டேன். இதே விஷயத்தை வேறு யாராவது கேட்டிருந்தா பதினைந்து லட்சம்தான் ரேட், தெரிஞ்சுக்கோ. மாரிமுத்து கூட பத்து லட்சம் வரைக்கும் கேட்டுப் பார்த்துட்டாரு. நான் ஒத்துக்கல்லே. அப்படியிருக்கறப்போ இவருக்கு இங்க லட்சத்துலே விஷயத்தை முடிச்சுக் கொடுத்துட்டா, பெரியவரு கோவிச்சுக்க மாட்டாரா? நீயே சொல்லு...'' என்றதும் —

''யாரு அண்ணே பத்து லட்சம் தர்றேன்னது? போன வாரம் கூட சட்டசபையிலே



யும், மதுரை மீட்டிங்லேயும் உங்களை மட்டமாத் தாக்கி பேசினுரே அவரா? நம்பவே முடியலேண்ணே?" என்று பழனி வியந்ததும்—

"தோ பார் பழனி, நீ இப்பத்தான் பெரிய மட்டங்கள்லே பழக ஆரம்பிச்சிருக்கே. நீ தெரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்கு. எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி—ன்றதெல்லாம் சட்டசபையிலும், மேடையிலும்தான். இது மாதிரி பொழைக்கற விஷயங்கள்லே, நாம எல்லாருமே அண்ணன்—தம்பிங்கதான். நாம இப்ப மாரிமுத்தைக் கொஞ்சமாவது கவனிச்சுக்கிட்டாத்தானே, நாளைக்கு நிலைமை மாறி அவன் ஆட்சிக்கு வரப்போ, நம்ப ஆளுங்களையும் கவனிச்சுக்குவான்... அதெல்லாம் இப்ப இன்னத்துக்கு? நீ அந்த ஆள்கிட்டே சொல்லிடு. பத்து லட்சத்துக்கு ஒரு பைசாக் கொறைஞ்சாக் கூடப் பெரியவரு ஒத்துக்க மாட்டாருன்னு!" என்றதும் தலையைச் சொறிந்த பழனி—

"நான் அந்த ஆளை உங்க வீட்டுக்கே கூட்டியாறேண்ணே. நீங்க நேரிடையாவே பேசி முடிவுக்கு வாங்களேன்..." என்றதும் "சரி, எட்டு மணிக்கு வீட்டுக்குக் கூட்டியா!" என்று கிளம்பினார் அமைச்சர்.

காரில் அவருடன் வந்து கொண்டிருந்த பி.ஏ. "ஸார் நீங்க பாராட்டிப் பேச வேண்டிய ஆள் பெயர் ஆறுமுகம். சுதந்திரப் போராட்ட வீரர், தியாகி..." என்று ஆரம்பித்ததும்—

"ச்சு. சும்மா இருய்யா!" என்று அவரைக் கையமர்த்திய அமைச்சர், ஆழ்ந்த சிந்தனையில் லயித்து விட்டார். 'நம் கட்சிக்குக் கவர்ச்சியே இல்லாம இருக்கு. இன்னிக்கு மீட்டிங்குக்கு வர்ற நிலவழகனையும், மலர்க்குழலியையும் வளைச்சுப் போட்டா, கட்சிக்குக் கொஞ்சம் 'இமேஜ்' கிடைக்கும்' என்று நினைத்த அமைச்சர், அவங்களை எப்படி வளைத்துப் போடுவது என்று யோசிக்க ஆரம்பித்தார்.

நேரந்தவறாமை என்பதைஒருமுக்கிய விதியாகக் கொண்டிருந்த தியாகி ஆறுமுகம், சுத்தமான கதர் உடையோடு ஐந்து மணிக்கே தயாராகி விட்டார்.

ஆனால் அவரை அழைத்துப் போக விழா கமிட்டியின் அங்கத்தினர் வந்த போது மணி ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஒன்றும் பேசாமல் வண்டியில் அமர்ந்தார் ஆறுமுகம். விழா நடக்கும் இடத்தை நெருங்கியதும், அங்கே பறந்து கொண்டிருந்த ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் கொடியையும், சினிமா நட்சத்திரங்களின் பேனர்களையும் கண்ணுற்ற ஆறுமுகம் பெரிதும் துணுக்குற்றார்.

விழாக் கமிட்டி அங்கத்தினரிடம் விளக்கம் கேட்டார்.


"என்னங்க நண்பர்கள் கலாசார குழு ஏற்பாடு பண்ணின விழான்னு சொன்னீங்க. இங்கே அரசியல் கட்சிக் கொடி பறக்குது. சினிமா நட்சத்திரங்களோட பேனர் எல்லாம் இருக்கு?"

"ஸார், இந்தக் காலத்திலே, சினிமான்னாத்தான் மக்கள் வருவாங்க. அதுமட்டுமில்லாம, நம்ப குழுவிலேயே சில பேர் இந்தக் கட்சியோட அனுதாபிகள். அவங்க மந்திரியை விழாவுக்குக் கூப்பிடணும்னு ஆசைப்பட்டாங்க. அப்புறம் வேறே சில பேருக்கு சினிமான்னா மோகம் ஜாஸ்தி. அவங்களுக்குச் சூப்பர் ஸ்டார் நிலவழகனையும், புதுமலர் மலர்க் குழலியையும் ஒரு தரமாவது கிட்டே நின்னு பார்க்கணும்னு ஆசை. அதனாலே அவங்களையும் அழைச்சிருக்கோம்... இப்படி பெரிய ஆளுங்க எல்லாம் வந்து கலந்துக்கிறது உங்களுக்கும் பெருமைதானே?" என்றார் அவர்.

மணி மாலை ஆறரை. விழா தொடங்குவதற்கான அறிகுறிகளே தென்படவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக

"யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ் மேன் தான் எவ்வளவு நல்லவர், என் வீட்டில், சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்திய இனிய நண்பர் அவர்தான்"

திருமதி. அர்ச்சனா கம்பானி, பம்பாய்



வரும் நாட்கள் ஏதேனும் ஒன்றில் யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, அடையாளச்சீட்டுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வார்.

அவர் பேச்சில்தன்னம்பிக்கை தொனிக்கும் – இதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில், இவர் இந்தியாவிலே இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் வெற்றி வாகை சூடியதுமாகிய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தினர் ஆவார். இந்நிறுவனம் விற்பனைக்குப் பின் நம்பகமான சேவை புரியும் பின்னணி கொண்டது.

தூசு, குடிநீர் அசுத்தம், அசுத்தமான நீர் மற்றும் வீட்டு வேலைகளில் உதவியின்மை போன்ற இன்றைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கென நவீன வீட்டுபயோக சாதனங்களை அவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார்.

செயல்முறை விளக்கத்திற்கு இவரிடம் இரண்டு இணையற்ற தயாரிப்புகள் உள்ளன: யூரோக்ளீன் – அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம். இது வேக்கம் க்ளீனரை விட சிறந்தது. மற்றும் அக்வாகார்ட் – நீர் பைப்பிலேயே பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.

யூரோக்ளீன் – உங்கள் வீட்டில் உள்ள தூசு மற்றும் சிறு துரும்புகளையும்கூட சிரமமின்றி எளிதில் அகற்றுகிறது. கண்ணிற்கு புலப்படாத தூசுகள்கூட அகன்று விடும். அக்வாகார்ட் – ஒரு ஸ்விட்சை இயக்கி, குழாயைத் திறந்தால், கிருமிகள் அற்ற பாதுகாப்பான, சுத்தமான குடிநீரை உங்கள் குழாயிலேயே நீங்கள் பெறலாம்.

உங்கள் குடும்பத்திற்கு, சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான நவீன முறைகளை இத்தயாரிப்புகள் எவ்விதம் வழங்குகின்றன என்பதை யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டிலேயே உபயோகித்து விளக்குவார். அதன் மூலம் உங்களைச் சுற்றிலும் சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த உலகம் உருவாகும்.

அவர் உங்கள் வீட்டிற்கு வரும் நாள் வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். விரைவில் வருகை புரிய கேட்டுக்கொள்ள யூரேகா ஃபோர்ப்ஸ் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது இம் முகவரிக்கு எழுதுங்கள்: யூரேகா ஃபோர்ப்ஸ், பி.ஓ. பாக்ஸ் 936, ஜி.பி.ஓ. பம்பாய்- 400 001.

யூரோக்ளீன்
அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம் – வேக்கம் க்ளீனரை விட சிறந்தது

அக்வாகார்ட்
நீர் பைப்பில் பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.

யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்
நவீன முறை சுத்தம் சுகாதாரத்தின் முன்னோடிகள்.

87/EFL/552-tm



''நம்ப தலைவரைப் பத்தி லஞ்ச ஊழல் புகார் வந்ததே கிடையாது!''

''அவ்வளவு நேர்மையாக்கும்!''

''புகார் பண்ணுற அளவுக்குச் சாமர்த்தியமா எதிர்க்கட்சிக்காரங்களையும் கவனிச்சுக்குவார்!''

— வி. வித்யா.

மேடையில் அமர்ந்திருந்தார் தியாகி ஆறுமுகம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோட்டையிலிருந்து கிளம்பி விட்டார். இன்னும் ஐந்து நிமிடங்களில் வந்து விடுவார்...' என்ற அறிவிப்பு பல முறைகள் தொடர்ந்தது.

கடைசியாக அமைச்சர் வந்து சேர்ந்த போது மணி ஏழு.

காரிலிருந்து இறங்கும் போதே இரு கரங்களையும் தலைக்கு மேலே உயர்த்தியபடி வந்த அமைச்சர், மேடை மீது ஏறி, மேடையின் ஒவ்வொரு பக்கமும் சென்று கைகளை அசைத்து மக்களின் வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்டார்.

மலர் மாலை, துண்டு போர்த்துதல் போன்ற வழக்கமான சம்பிரதாயங்கள் முடிந்த பிறகு, சாவகாசமாக இருக்கையில் அமர்ந்தார் அமைச்சர்.

அடுத்த அறிவிப்புத் தொடர்ந்தது.

''அண்ணன் நிலவழகன் அவர்கள் வாஹினி ஸ்டுடியோவிலிருந்து புறப்பட்டு விட்டார். தன் உயிருக்குயிரான ரசிகர்களைக் காக்க வைக்க விரும்பாமல், மேக்கப்பைக் கூட கலைக்காமல் நேராக விழா மேடைக்கு வந்துகொண்டிருக்கிறார்...'' என்ற அறிவிப்பு பல முறை தொடர்ந்த பிறகு, சூப்பர் ஸ்டார் நிலவழகன், புதுமலர் மலர்க்குழலியுடன் ஏழே கால் மணிக்கு வந்து சேர்ந்தான். இருவரையும் ஒரு சேரப் பார்த்த மக்களின் உற்சாகம் கரை புரண்டது.

மேடையை நோக்கி ஓடிவர முயன்றவர்களைப் போலீஸார் தடியடி நடத்தித் தடுத்தனர்.

நிலவழகனும், மலர்க்குழலியும் கை கோத்து நின்றபடி மக்களுக்குப் பத்து நிமிட நேரம் தரிசனம் தந்தனர்.

வழக்கமான வரவேற்புக்குப் பிறகு அமைச்சர் பேச எழுந்தார்.

தம் கட்சியின் சாதனைகளைப் பட்டியல் போட்டுக் காண்பித்தார். எதிர்க்கட்சிகளைச் சாடினார். பிறகு நிலவழகனைப் பார்த்து, ''தம்பிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. அவரைச் சுற்றி ரசிகர்கள் படை உள்ளது. தம் சக்தியை வீணாக்காமல் அவர் உடனே அரசியலில் ஈடுபட வேண்டும். செல்வி மலர்க்குழலியும் நிலவழகனுடன் ஜோடியாகவே இப்போதே அரசியலில் இறங்கலாம். அவர்கள் சேவை நாட்டுக்கு மிகவும் தேவை...'' என்று கூறி அமர்ந்தார்.

அடுத்துப் பேசிய நிலவழகன், ''நடிப்பதில் உள்ள கஷ்டங்களை விளக்கினார். அந்தக் காலத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற ஒரு தலைவரைப் போல் இப்போது தாம் ஜெயில் உடையில் நடிப்பது மக்களை மகிழ்விப்பதற்காக மட்டுமே; பணத்திற்காக அல்ல...'' என்று அவர் சத்தியம் செய்த போது, கைதட்டல் வானைப் பிளந்தது.

''உண்மையாகவே ஒரு சுதந்திரப் போராட்ட வீரராக இருந்து போராடியது ஒன்றும் பெரிய விஷயமல்ல. அதுபோல் நடிப்பதுதான் கஷ்டம்...'' என்று அவர் கூறியதை மக்கள் ஏற்றுக் கொண்டனர். அடுத்துத் தம்மை அரசியலுக்கு வரும்படி அழைத்த 'அருமை அண்ணனுக்கு' நன்றி தெரிவித்துத் தமக்கும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் உள்ளதென்றும், காலம் கனியும் போது, 'அண்ணனின்' வழியிலே நடப்பேன் என்றும் உறுதி கூறினார். பிறகு தாமும் செல்வி மலர்க்குழலியும் கலந்து கொள்ள வேண்டிய 'முக்கியமான ஷூட்டிங்' இருப்பதால் தங்களை மன்னிக்கும்படி இருவரின் சார்பாகவும் வேண்டிக் கொண்டு, நடிகை பின் தொடரக் காரில் ஏறிப் பறந்தார் சூப்பர் ஸ்டார்.

நடிகர் சென்ற உடனேயே கூட்டம் முக்கால்வாசிக்கும் மேல் கலைந்து போய் விட்டது. அதற்கு மேலும் தாம் மேடையில் அமர்ந்திருப்பது மரியாதையல்ல என்பதை உணர்ந்த அமைச்சருக்கு வீட்டில் பழனியும் பத்து லட்ச பேரமும் நினைவுக்கு வர, அவசரமாக ஒரு பைலைப் பார்த்தாக வேண்டுமென்று கூறி விடை பெற்றுக் கொண்டார்.

கூட்டம் முற்றிலும் கலைந்து போன நிலையில் 'நிக்கிரமை' பிடித்தவர் போல் அமர்ந்திருந்தார் தியாகி ஆறுமுகம்.

அவர் முதுகைத் தொட்டது ஒரு கரம். அவரைப் போலவே ஒரு முதியவர் நின்று கொண்டிருந்தார். அவரை அன்பாகப் பார்த்தார்.

''என்னங்க... நாமதானே விழா நாயகன் நம்பளை யாருமே கவனிக்கலையேன்னு பார்க்கறீங்களா... இது என்னங்க ஆச்சரியம்! 'எம்.ஜி.ஆர்.' மறைவுக்கான இரங்கல் கூட்டம் போட்டுட்டு, இரங்கல் தீர்மானத்தையே மறந்து போன பெரிய கதையெல்லாம் இங்கே இருக்கு. அதே மாதிரிதான் இதுவும். நம்ப நாட்டிலே நிஜங்களுக்கு மதிப்பு இல்லே... இது நிழல்களின் காலம்; காலம் மாறும்...'' என்று ஆதரவாகக் கூறிய போது ஆறுமுகத்தின் கண்கள் ஏனோ கலங்கின.


கல்கி
விடுமுறை
மலர் 1988
வண்ணங்களில் —
* எஸ். பி. பாலசுப்பிரமணியம்; சௌராஷ்டிரா
* ஆழ்கடல் அற்புதங்கள்
* கார்த்திக்; மீனாட்சி சேஷாத்திரி
* வைஷ்ணவி தேவி யாத்திரை.
* ரமேஷ் கிருஷ்ணன்; சீத் சேத்தி
* நாகாலாந்து காட்சிகள்.
* அலெக்ஸாந்தர்; மூப்பனார்
* குடை விரிக்கலாம்; காற்றில் மிதக்கலாம்!
* பி. ஸி. சொர்க்காரின் மந்திர ஜாலம்
* திருவிடைக்கழி முருகன்; தெய்வயானை.
* செல்லப்பன் — அரஸ்: நகைச்சுவை ஓவியங்கள்
* டிஸ்னிலாந்து
* கோகுலம் பக்கங்கள்
* இயற்கைக் காட்சிகள்
* மற்றும் ஏராள உள்நாட்டு, அயல்நாட்டுப் பயணக் கட்டுரைகள்; சிறுகதைகள்; இரண்டு நாவல்கள்.
320 பக்கங்கள் :: விலை ரூ. 10/—.
* ஜூன் முதல் வாரத்தில் கிடைக்கும்.
உங்கள் பிரதிக்கு உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளவும். அல்லது பதிவுத் தபாலில் பெற ரூ. 15 அனுப்பவும்.
மானேஜர், கல்கி, சென்னை — 600 032
* தெற்கு மராஹட்டாவில் ஒரு காட்சி!

ஆகவே செக்ஷன் 302 படி

19

நிவிதா மிக இயல்பாக வார்டனின் அறைக்குள் வந்து ஷியாமைப் பார்த்து ஆச்சர்யப்படுவது போல் பாவனை காட்டி, "குட் ஈவினிங் சார்... எங்கே ஹாஸ்டலுக்கு வந்திருக்கீங்க? என்னைப் பார்க்கவா?" என்றாள். இன்ஸ்பெக்டரையும், சப்–இன்ஸ்பெக்டரையும் பார்த்து, "இவங்க..." என்று கேட்டாள்.

ஷியாம் குமார் மௌனமாக இருந்தான். விஷமமாகப் பார்த்தான்.

"உன் பேரென்னம்மா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"நிவிதா."

"எங்களோட கொஞ்சம் வரணும்!"

"எங்கே?"

"உங்க ஆபீஸுக்கு."

"எதுக்கு?"

"அதை அங்கே போனதும் சொல்றேன்."

"கொஞ்சமாச்சும் விவரம் சொன்னாப் பரவாயில்லே."

ராமநாதன் அவளை ஏற இறங்கப் பார்த்தார். சாமர்த்தியமாகத்தான் பேசுகிறாள். கொஞ்சம் அழுத்தமானவளாகத்தான் தெரிகிறாள். படபடப்பு இல்லை. குற்ற உணர்வு இல்லை. கண்கள் அலை பாயவில்லை. முகத்தில் ஒரு குற்றம் செய்தவளின் தடுமாற்றம் சிறிதும் இல்லை. தேர்ந்த நடிப்பாகக் கூட இருக்கலாம். தேர்ந்த குற்றவாளிகள் பதற்றப்படுவதில்லை.

"மிஸ் நிவிதா, உங்க ஆபீஸ்ல முக்கியமான டாகுமெண்ட் ஒண்ணு திருட்டுப் போயிடுச்சின்னு உங்க ரீஜனல் மேனேஜர் எங்களுக்குப் புகார் கொடுத்திருக்கார். அது சம்பந்தமா விசாரிக்கத்தான் உங்களைக் கூப்பிடறோம்."

"என்னையா?"

"ஆமாம். உங்க மேல் சந்தேகப்படறதா இவர் சொல்றார்."

"கடவுளே... நானா? திருட்டா? சார், என்ன இதெல்லாம்? ஏன் இப்படி அபாண்டமா என் மேல் பழி போட்டுப் புகார் கொடுத்தீங்க?" என்றாள் ஷியாமைப் பார்த்து.

ஷியாம் அமர்த்தலாக, "நிவிதா, ரொம்ப நடிக்காதே... ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி நம்ம ஆபீஸ்ல நடந்தது எல்லாத்தையும் நான் போலீஸ்ல சொல்லிட்டேன்" என்றான்.

"புரியலையே.. அப்படி என்ன நடந்திச்சி?"

"புரியலையா? டாகுமெண்ட்டை நீ திருடியிருக்கலாமோன்னு சந்தேகப்பட்டு நான் உன் மேஜைக்கு வந்து உன் கைப்பையைச் சோதனை போடக் கேட்டேன். நீ கொடுக்க மறுத்தே. நான் அதட்டிக் கேட்டதும் எடுத்துக் கொடுத்தே. அதுல டாகுமெண்ட் இருந்திச்சி. நான் போலீஸுக்குப் போன் பண்ண இருந்தப்ப, நீ விருட்டுன்னு புறப்பட்டு வந்துட்டே. நான் உன் ஹேண்ட் பேகை உன் மேஜை டிராயர்ல போட்டுப் பூட்டிட்டுச் சாவியோட நேரா போலீஸ் ஸ்டேஷன் போனேன். சொன்னேன். இப்போ புரியுதா?"

"இன்ஸ்பெக்டர், நம்பாதீங்க. இவர் சொல்றது அத்தனையும் பொய். என்னமோ காரணத்தால் என் மேல் பழி போடறார். ஆபீஸ்ல நான் எதையும் திருடலே. நான் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவ."

"மிஸ் நிவிதா! இவர் உங்க மேல் குற்றம் சுமத்தியிருக்கார். நீங்க மறுக்கறீங்க. இது ரெண்டுல எது உண்மைங்கிறதைக் கண்டு பிடிக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கு. அதைச் செஞ்சி முடிக்க நீங்க ஒத்துழைப்புத் தந்துதான் ஆகணும்."

"நான் என்ன செய்யணும்?"

"எங்களோட வரணும்!"

"என்னோட துணைக்கு ரெண்டு பேரைக் கூட்டிக்கிட்டு வர்றதிலே உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?"

ராமநாதன் சப்–இன்ஸ்பெக்டர் கௌசல்யாவைப் பார்க்க... அவர், "சரி, அழைச்சிக்கிட்டுப் புறப்படுங்க, சீக்கிரம்" என்றார்.

"ஒரு நிமிஷம்."

நிவிதா தன் அறைக்கு வந்து தமிழ்ச்செல்வியையும், பத்மாவையும் பார்த்து, "விளக்கமாச் சொல்ல நேரமில்லை. என் மேல பொய்க் கேஸ் ஜோடிக்கப் பார்க்கிறாங்க. விசாரணைக்கு என்னைக் கூட்டிட்டுப் போக வந்திருக்கு போலீஸ். நீங்க ரெண்டு பேரும் என் கூட வரணும். வர்றீங்களா?" என்றாள் படபடப்பாக.

"பொய்க் கேசா! போலீசா! என்ன சொல்றீங்க நிவிதா? என் சித்தப்பாவோட மச்சான் இங்கே லாயரா இருக்காரு. அவரைக் கூப்பிடுவோமா? என்ன கேசு?"

"அதுக்கெல்லாம் இப்போ அவசியமும் இல்லை. அவகாசமும் இல்லை. தேவைப்பட்

பட்டுக்கோட்டை பிரபாகர்

டாக் கூப்பிட்டுக்கலாம். இப்போ நீங்க ரெண்டு பேரும் சும்மா என் கூட வாங்க. எனக்குத் தெம்பா இருக்கும். நடக்கிற நிகழ்ச்சிக்குச் சாட்சியாவும் இருக்கும்.''

ஐந்து நிமிஷத்தில் மூவரும் புறப்பட்டுக் கீழே வந்தார்கள்.

''போகலாமா சார்?'' என்றாள் நிவிதா.

''ஒண்ணுமில்லே மேடம். நான் தப்புச் செய்யலே. சும்மா சந்தேகப்பட்டு விசாரிக்கிறாங்க. சீக்கிரம் வந்துடுவேன்'' என்று வார்டனிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

காரின் முன் இருக்கையில் ராமநாதன் மட்டும் அமர்ந்து கொள்ள, பெண்கள் நால்வரும் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டார்கள். நிதானமாகக் காரைச் செலுத்தினான் ஷியாம்.

தான் எவ்வளவு சாமர்த்தியமாக மடக்கப்பட்டிருக்கிறோம் என்பது தெரிந்தும், இத்தனை சவடாலாக, அழுத்தமாகப் பேசுகிறாளே... இது திமிரா இல்லே தெரியாத்தனமா? குழந்தைக்கு உடம்பு சரியில்லே என்றால் டாக்டரிடம் தூக்கிப் போவது இயல்பானது. புத்திசாலித்தமானது. என் குழந்தைக்கு எதுவும் ஆகாது, ஆக விடமாட்டான் இறைவன் என்று பேசாமல் இருப்பது விவேகமானதில்லேயே...

அதைப் போல உண்மை வெல்லும், நியாயம் சொல்லும் என்று வறட்டுத்தனமாகப் பிடிவாதமாய் நம்பிக் கொண்டு இப்படிச் செயல்படுவதைப் பார்த்துச் சிரிக்கத்தான் செய்ய முடிகிறது. பாவம்!

நிவிதா, எனக்கு எதிரிகளைக் 'காலம் பார்த்துக் கொள்ளும்' என்று மன்னித்து விட்டுவிடும் பழக்கமே கிடையாது. அன்றே, அப்போதே கணக்குத் தீர்த்தாக வேண்டும்.

என் இச்சைக்குச் சம்மதிக்கவில்லே. அவமானமாய்ப் பேசினாய். இதோ நீ படப் போகிற அவதிகளின் ஆரம்பம்.

அலுவலகம் வந்து கார் நின்றது.


எல்லோரும் இறங்கி லிஃப்ட் வழியாக மேலே வந்தார்கள். வாட்ச்மேன் எழுந்து கொண்டான். கும்பலேப் பார்த்து விழித்தான். ஷியாம் குமார் சொன்னதும் கதவைத் திறந்து விட்டான்.

உள்ளே வந்தார்கள். அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் நிவிதாவின் மேஜைக்கு வந்தார்கள்.

''மிஸ் நிவிதா, இந்த ஆபீஸ்ல திருட்டுப் போன டாக்குமெண்ட் உங்க கைப்பையிலே இருக்கிறதாவும், அதுக்காக நீங்க பார்ட்டிகிட்டே இருபத்தையாயிரம் லஞ்சம் வாங்கியிருக்கிறதாவும் சொல்றார். இது நிரூபணம் ஆகிடுச்சின்னா.. நான் உங்களே அரெஸ்ட் செய்ய வேண்டியிருக்கும்!'' என்றார் ராமநாதன்.

''பொய் என்னேக்காவது ஜெயிச்சதுண்டா இன்ஸ்பெக்டர்? எங்க மேனேஜர் ஏதோ தப்புச் செஞ்சிட்டுக் குற்றத்தை என் தலேயில் சுமத்தப் பார்க்கிறார்ங்கிறது என் பதில். அதுதான் உண்மை. அந்த உண்மையைத்தான் நான் கடைசி வரைக்கும் சொல்வேன். இப்ப என்ன செய்யப் போறிங்க?''

''நான் எதுவும் செய்யலே. இந்தாங்க உங்க மேஜை டிராயர் சாவி. நீங்களே திறந்து உங்க கைப்பையை எடுத்துத் தாங்க.''





அதிகாரி: கள்ளச் சாராய ஆசாமிகள் லிஸ்ட்டை எடு!

கான்ஸ்டபிள்: மாமூல் லிஸ்ட்டையா? மாமூல் தராதவங்க லிஸ்ட்டையா?

— உ. ராஜாஜி.

''தர்றேன். அதுக்கு முன்னாடி இவர் சொன்னதை ஒரு தடவை செக்கப் பண்ணிக்கங்க.''

''எதை?''

''என்னைச் சந்தேகப்பட்டுக் கேட்டார். என் கைப்பையைக் காட்டச் சொன்னார். நான் மறுத்தேன். அப்புறம் கொடுத்தேன். உள்ளே டாக்குமெண்ட் இருந்திச்சி. கைப்பையை டிராயர்ல வச்சிப் பூட்டிட்டு உங்ககிட்டே வந்தார். இதானே இவர் ஸ்டேட்மெண்ட்?''

''ஆமாம்.''

''அதை வாட்ச்மேனைக் கூப்பிட்டு விசாரிச்சி உறுதி செஞ்சிக்கங்க. இந்த ஆபிஸை விட்டு யார் முதல்ல போனது. யார் அப்புறம் போனதுன்னு கேளுங்க.''

''அவர் ஸ்டேட்மெண்ட்ல சந்தேகப்பட்டாதான் நான் விசாரிக்கணும்.''

''நான் சந்தேகப்படறேன். ப்ளீஸ், விசாரிக்கடுங்களேன்!''

ஷியாம் புருவத்தை நெரித்தான். என்ன குழப்புகிறான்?

ராமநாதன் சற்று யோசித்துவிட்டு வாட்ச்மேனை அழைத்தார்.

''இங்கே வாப்பா. இன்னிக்குச் சாயங்காலம் இங்கே யார், யார் ஓவர்டைம் செஞ்சாங்க?''

''நிவிதாம்மா மட்டும்தான்.''

''மானேஜர் எப்போ வந்தார் மறுபடி?''

''ஆபீஸ் முடிஞ்சதும் கொஞ்ச நேரத்திலே புறப்பட்டுப் போய்ட்டு ஒரு மணி நேரம் கழிச்சி வந்தார்.''

''சரி. அப்புறம் எப்போ வெளியே போனார்?''

''பத்து நிமிஷத்திலே புறப்பட்டுட்டார்.''

''நிவிதாம்மா எப்போ போனாங்க?''

''மேனேஜர் சார் புறப்படறதுக்கு அஞ்சி நிமிஷம் முன்னாடியே புறப்பட்டுப் போய்ட்டாங்க.''

''சரி, நீ போகலாம்!'' என்றவர் நிவிதாவைப் பார்த்து, ''உங்க சந்தேகம் தீர்ந்துடுச்சா?'' என்று கேட்டார்.

''தீர்ந்துடுச்சி சார்.''

''மேஜையைத் திறங்க.''

நிவிதா தரப்பட்ட தன் சாவியைப் போட்டுத் திறந்து, தயக்கமே இல்லாமல் கைப்பையை எடுத்து அவரிடம் தந்து விட்டு, கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டிக் கொண்டு நின்றாள்.

ராமநாதன் கைப்பையின் ஜிப்பைத் திறந்து உள்ளே ஆராய்ந்தார். உள்ளே இருப்பவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து மேஜை மேல் வைத்தார்.

ஒரு கர்ச்சீப். ஒரு சிறிய டார்ச் லைட். மூன்று ஹேர்ப்பின்கள். இரண்டு ஸேஃப்டி பின்கள். ஒரு விக்ஸ் டப்பா. நான்கு பல்லவன் டிக்கெட்டுகள். எண்பத்தைந்து காசு சில்லறை. இருபத்தி ஆறு ரூபாய்க்குத் தாள்கள். ஒரு பால் பாய்ண்ட் பேனா. சோப்புக் காகிதத் துண்டுகள் அடங்கிய ஒரு புக். டெலிபோன் நம்பர்கள் எழுதும் சிறிய புத்தகம் ஒன்று.

நிமிர்ந்து ஷியாமைப் பார்த்தார்.

''நீங்க சொன்ன மாதிரி டாகுமெண்ட் எதையும் காணுமே?''

ஷியாம் அதிர்ந்தான். நானேதானே வைத்தேன். நானேதானே உள்ளே வைத்துப் பூட்டினேன். சாவியை எடுத்துக் கொண்டேன். இந்த மேஜைக்கு உள்ள மாற்றுச் சாவி எனது அறையில் உள்ள பீரோவுக்குள் அல்லவா உள்ளது? அந்தப் பீரோவின் சாவியும் என் பேண்ட் பாக்கெட்டில் இருக்கிறதே... அந்த மாற்றுச் சாவி எடுத்து, திறந்து நிவிதா டாக்குமெண்டை எடுத்து மறைத்து விடச் சாத்தியமே இல்லை.

பிறகு... எங்கே அது?

''என்ன சார்?'' என்றார் ராமநாதன்.

''இருந்திச்சி சார். நான் பார்த்தேன். பிரெளன் கலர் கவர். இதோ இவ்வளவு நீளம் இருந்திச்சி. இந்தக் கைப்பைக்குள்ளே தான் இருந்திச்சி. நானே டிராயர்ல வச்சிப் பூட்டினேன்.''

''சரி. காணுமே... எங்கே?''

''இவ ஏதோ தில்லு முல்லுப் பண்ணிட்டா சார்.''

''எப்படி முடியும்? அவங்க முதல்ல போய்ட்டாங்க. அப்புறம்தான் நீங்க பூட்டிட்டுப் புறப்பட்டீங்க. அப்புறம் எப்படி அவங்க தில்லு முல்லு செய்ய முடியும்?''

பதற்றமாகப் பார்த்த ஷியாமை, தலையை லேசாகச் சாய்த்துக் குறும்பாக, அலட்சியமாகப் பார்த்தாள் நிவிதா.

''இன்ஸ்பெக்டர் கேக்கறாரில்லே. பதில் சொல்லுங்க சார்'' என்றாள்.

(தொடரும்)

நினைவிருக்கிறதா? இந்தத் தொடர் கதையைக் கவனமாகப் படித்து வருகிறவர்கள், இறுதியில் ஓர் எளிமையான போட்டியில் கலந்து கொண்டு ஆயிரம் ரூபாய் பரிசு பெறும் வாய்ப்புக் காத்திருக்கிறது!

இண்டர்வியூ



“என்னம்மா மஞ்சு? இண்டர்வியூவுக்கு ரெடியா? எல்லாம் ஒருவாட்டி ரிவைஸ் பண்ணிட்டியா?” — மாமனார் கரிசனமாக விசாரித்தார்.

“ம்... ம்... ஒரு மாதிரியா ஆச்சுப்பா...” — ‘இந்திரா காந்தி அண்ட் இண்டியன் எரா’வைப் புரட்டியவாறே மஞ்சு பதிலிறுத்தாள்.

“அதுதான் நேத்தி உன் ஃப்ரண்டு கீதாவுக்கு இந்திரா காந்தி பற்றிக் கட்டுரை வந்து’டுதாமே! திரும்ப இன்னிக்கு அதையே கேக்க மாட்டானே...”

“லேடீஸ்ங்கறதாலே ஏதானும் பெண் தலைவர்களைப் பத்தித்தான் குடுப்பாங்க: வேறு யார் இருக்கா? மதர் தெரஸாவா?”

“அடப்பாவமே! அரசியல் தலைவர் வேற, மதத் தலைவர் வேற: இந்தம்மா பெரிய சோஷியல் ஒர்க்கர். நீ ‘மதர் தெரஸாவும் இருபது அம்சத் திட்டங்களும்’னு எழுதிக் காரியத்தைக் கெடுக்காதே! வேணும்னு ‘அன்னை ஜானகி,’ செல்வி ஜெயலலிதா இவங்களைப் பத்தி எழுதேன்!” — கணவன் பாஸ்கரின் கேலி சுருக்கென்றது மஞ்சுவுக்கு.

“உங்களை யார் கேட்டது? இந்த மாசம் காம்ப்படீஷன் சக்ஸஸ்’ வாங்கி வாங்கன்னு கரையறேன்; அதுக்கு வழியைக் காணோம்; பெரிசாப் பேச வந்துட்டார்!”

“அவன் கிடக்கறான் விடும்மா... நான்தான் ‘ஹிந்துஸ்தான் இயர் புக்’ குடுத்தேனே! அதைப் படிச்சுட்டே இல்லியா? அதுலேயே முக்கியக் குறிப்புகள்லாம் இருக்கும்...” — மாமனார் சமயோசிதமாக ஒரு மகாபாரதத்தைத் தவிர்த்தார்.

‘மிஸஸ் ஷர்மாவை ‘டுக்ரேட் அஸோஸினேடட் லீடர்ஸ் ஆஃப் இண்டியா’ன்ற தலைப்புல எழுதச் சொன்னாங்களாம்; காந்தியும் இந்திரா காந்தியும்தானே?” — மீண்டும் சந்தேகம் மஞ்சுவுக்கு.

“வந்து ஒரு வாய் சாப்பிட்டுப் போயேன் மஞ்சு...” — மாமியார்க்காரி இடைமறித்தாள்.

“வேண்டாம்மா... அந்த ரென் அண்ட் மார்ட்டின் புக் எங்கே போச்சு? கொஞ்சம் அனலிஸிஸ் படிச்சுக்கணும்.”

“க்ராமரெல்லாம் ஜாக்கிரதை. இங்லீஷில் பேசறப்பவே ‘இஸ்’ஸுக்கு ‘வாஸ்’ன்னும், ‘வாஸ்’க்கு ‘வுட்’டுன்னும் தடுமாறுவே...” — பாஸ்கர் வேண்டுமென்றே சீண்டினான்.

“ஏண்டா பாஸ்கர் அவளைக் கிண்டல் செய்யறே? பாவம், ஏற்கெனவே இண்டர்வியூவுக்குப் போறோமென்னு நெர்வஸா இருக்கா...” — மாமனார் ஆதரவாய்ப் பேசினார்.

பாவம் மஞ்சு! வாழ்க்கையில், அவள் முதல் முதலாகப் போகவிருக்கும் இண்டர்வியூ இதுதான். காலேஜ் முடித்தவுடன், அவள் தந்தைக்குத் தெரிந்த நிறுவனத்தில் கண் துடைப்பு இண்டர்வியூ நடத்தி விட்டு வேலை போட்டுக் கொடுத்து விட்டார்கள்! திருமணமான கையோடு அதை உதறியாகி விட்டது. இப்போது குழந்தை சௌம்யா பிறந்து, மூன்று ஆண்டுகள் கழித்து இப்படி ஓர் இண்டர்வியூ செல்ல நேரிடும் நிலைமை உருவாகும் எனக் கனவிலும் அவள் நினைக்கவில்லை!

குழந்தை சௌமி பாட்டுக்கு உரக்க, ‘ஏ, பி, ஸி, டி...’ பாடிக் கொண்டிருந்தது.

“டிஸ்டர்ப் பண்ணாதேடீ சனியனே...” ரயில்வேஸ் ஆஃப் இந்தியா வரைபடத்திலிருந்து கண்களை எடுக்காமல் கத்தினாள் மஞ்சு.

''ம்... ம்... சௌமிக் குட்டியை இண்டர் வியூவுக்கு அனுப்பிறு பனிச்சுன்னு பாஸ் பண்ணிடும்! இவ என்னத்தைப் பண்ணப் போறுளோ? ரிட்டன் வேற, ஓரல் வேற இருக்கு...'' — பாஸ்கர் அங்கலாய்த்தான்.

''எல்லாம் பாஸ் பண்ணிடுவாடா! நான் பெருமாளுக்கும், குருவாயூரப்பனுக்கும் முடிஞ்சு வெச்சிருக்கேன்'' —மாமியார் தைரிய மூட்டினுள்.

''ம்... ம்... டயமாச்சு, கிளம்பு, கிளம்பு!'' — மாமனுர் ,அவசரப்படுத்தினுர்.

மஞ்சு ட்ரெஸ்ஸிங் டேபிள் முன் நின்று, ஃபினிஷிங் டச்சஸ்' செய்து கொண்டாள். மாமியார் கொடுத்த ஹார்லிக்ஸைப் பருகிய வாறே மாநில முதல்வர்கள், கவர்னர்கள் லிஸ்டை நோட்டம் விட்டாள்.

''ஸென்ட்ரல் மினிஸ்டரெல்லாம் ஞாபக மிருக்காம்மா?'' — மாமனுர் கடைசி நிமிட பிரஷ்ஷைப் கொடுத்தார்.

''போறும்பா. ரொம்பக் குழப்பாதீங்க... அப்புறம், 'உன் பேர் என்ன'ன்னு கேட்டா, மார்கரெட் ஆல்வா'ன்னப் போறு...'' பாஸ்கரால் சும்மாயிருக்க முடியவில்லே.

அரசியல் கட்சி — கட்சித் தலைவர் பட்டியலைச் சரி பார்த்தான் மஞ்சு.

''கொஞ்சம் இரும்மா. இன்னிக்கு எவரு வது புதுக்கட்சி ஆரம்பிச்சிருக்காளுபாத்துடு வோம்...'' என்று மாமனுர் அவசரமாய்ச் செய்தித் தாளே மேய்ந்தார்.

மஞ்சு, சுவாமியை நமஸ்கரித்து, மாமனுர், மாமியார் காலில் விழுந்து, செந்தூரான் விபூதிப் பிரசாதத்தையும் மஹாலக்ஷ்மி குங்குமப் பிரசாதத்தையும் பயபக்தியுடன் இட்டுக் கொண்டு, எதிர்த்த வீட்டு சீதா மாமி சுமங்கலியாய் எதிர்ப்பட்டு நல்ல சகுன சிக்னல் கொடுக்க, சௌம்யா — மாமனுர் — பாஸ்கர் புடைசூழ, இதற்கென்று பிரத்தி யேகமாக வரவழைக்கப்பட்டிருந்த பாஸ்க ரின் ஆபீஸ் காரில் ஏறிப் புறப்பட்டாள்.


''எல்லாரும் எங்கே போறுப்பல?'' —சீதா மாமியின் வம்பு வாய் கார் கிளம்பும் வரை மூடியிருந்ததே பெரிய அதிசயம்தான்!

''அதுவா? இன்னிக்கு மஞ்சுவுக்கு ஸெயின்ட் ஃபிலோமினுஸ் ஸ்கூல்ல இண் டர்வியூ!''

''என்ன, டீச்சர் வேலேக்கா?''

''டீச்சரா? நீங்க ஒண்ணு! நம்ம சௌமி யோட எல். கே. ஜி. அட்மிஷனுக்குத்தான்! அந்தப் பிரின்ஸிபாலுக்குக் குழந்தையை விட, அதனுடை தாய்தான் ரொம்ப முக்கியமாம். குழந்தைப் பாடமெல்லாம் சொல்லித் தரத் தகுதி இருக்கான்னு 'செக்' பண்ண, அம்மாக் களுக்கு ரிட்டன், ஓரல் டெஸ்ட் ரெண்டும் நடத்துவாராம். எதைப் பத்தி வேணும்னுலும் கேள்வி கேப்பாராம். அதிலெல்லாம் அம்மாக்காரி பாஸ் பண்ணினுத்தான் குழந் தைக்கு ஸீட் உண்டு. சௌமி பிறந்ததுமே இங்கே ரிஜிஸ்தர் பண்ணியாச்சு; இப்பத் தான் 'கால்' வந்துருக்கு; பகவான் புண்ணி யத்துல இவ பாஸ் பண்ணி, குழந்தைக்கு ஸீட் கிடைக்கணும்!'' என்ருர் மஞ்சுவின் மாமியார்.

"ஸ்ரீ யோகாம்பிகை அதிஷ்டானம்"
ஸ்ரீ யோக கருமாரி அம்மன் அதிஷ்டானம்
திருவேற்காடு, சென்னை - 600 077.



உலக க்ஷேமத்திற்கு 16-வது ஆண்டு

"ஸ்ரீசத சண்டி மஹா யாகம்"

ஆரம்பம் 29.5.88 - 31.5.88 விசாக பௌர்ணமி மாலை

மஹா பூர்ணாஹுதி,

29.5.88. ஸ்ரீ ஆதி சங்கரருக்கு அபிஷேகம், விக்னேஸ்வரர் பூஜை, கலச ஸ்தாபனம், ஸப்தஸதி 50 ஆவர்த்தி பாராயணம், ஸ்ரீ வாஞ்சா கணபதி ஹோமம்.

30.5.88. ஸப்த ஸதி 50 ஆவர்த்தி பாராயணம், ஸ்ரீ ப்ரத்யங்கார பத்ரகாளி ஹோமம்.

31.5.88 காலை கோபூஜை, கஜபூஜை, புதுக்கோட்டை புவனேஸ்வரி பீடம் ஸ்ரீ மத் ஸாந்தானந்த ஸ்ரஸ்வத் யவதூத ஸ்வாமிகளுக்கு பாத பூஜை, ஸ்ரீ சத சண்டி ஹோமம் ஆரம்பம் வடுக பூஜை, கன்னிகா பூஜை, ஸுவாசினி பூஜை, மஹா பூர்ணா ஹுதி, வசோத்தாரை, ஸ்ரீ யோக கருமாரி அம்மனுக்கு கலச அபிஷேகம்.

ஸ்ரீ மத் ஸாந்தானந்த ஸ்வாமிகள் ஸ்ரீ வித்யா பூஜாக்ரம : என்ற நூதன ஸம்ஸ்கிருதம் தமிழில் புஸ்தகம் அரங்கேற்றம் செய்வார்.


புவனேஸ்வரி பீடம் ஆஸ்த்தான வித்வான் சாக்த ஸ்ரீ Dr. K.V. வைத்ய நாத சாஸ்திரிகள் மற்றும் ஸ்ரீ வித்யா உபாஸகர்களால் க்ரமப்படி ஹோமங்கள் நடைபெறும்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் பரமாச்சார்யாள் ஜெயந்தி ஸ்ரீ சக்ர பூர்ண மஹா மேருவிற்கு நவாவர்ண பூஜை.

ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடம் மஹா சன்னிதானம் அளித்த ஸ்ரீ சக்ர அங்கியை அம்பாளுக்கு அணிவித்தல், மகா தீபாராதனை.

ஒரு சங்கல்ப ஹோமத்திற்கு ரூ.100/- அனுப்புகிறவர்களுக்கு ப்ரஸாதம் ஸ்ரீ வித்யா மலர் அனுப்பப் படும். நன்கொடை சங்கல்ப ஹோமத்திற்குஸ்ரீ யோகாம்பிகை அதிஷ்டானம் திருவேற்காடு, சென்னை - 600 077. என்ற முகவரிக்கு அனுப்பவும்.

குழுவினர் தலைவர்
தவத்திரு அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்
உபதலைவர்
அம்பிகை அடிமை (ஆனந்த தாண்டவபுரம்) ஸ்ரீ N. சங்கரன்.
(ஸ்தாபகர், அதிஷ்டானம், திருவேற்காடு.)
காரியதரிசி,
ஸ்ரீ M.V.ஸ்வாமிநாதன் B.Com.,
சுபம்.



போலீஸ் வேஷம்

அந்தப் புதிய போலீஸ் யூனிபார்மில் நிலைக்கண்ணாடியின் முன் நின்று தன்னை ஒருதரம் முழுதாய்ப் பார்த்துக் கொண்டான் ரவி.

அவன் முகத்திலே பூரிப்பு. அரும்பு மீசையை வலதுகை நடுவிரலால் வருடிக் கொண்டான். தொப்பியைச் சற்றே முன்னுக்கு இழுத்துச் சரிசெய்து கொண்டான். லத்தியை இடது அக்குளுக்குள் கொடுத்து விரைப்பாக நின்று சல்யூட் அடித்துப் பார்த்தான். மொர மொரவென்ற காக்கி மடிப்புகளைச் சரிசெய்து கொண்டு, பளபளக்கும் பெல்டின் ப்ராஸ் பட்டைகளை ஒருமுறை புடைத்துக் கொண்டான். அதிகாலையிலிருந்து பலமுறை வெயிலில் வைத்து எடுத்து பாலிஷ் போட்ட ஷூக்களை மீண்டும் பி[illegible]ழினால் உரசிக் கொண்டு வெளியே வந்தான்.

வீதியில் அவனது காலணிகள் எழுப்பிய ஓசைக்குத் தக்கபடி கைகளை வீசிக் கொண்டு தலையை நிமிர்த்திக் கம்பீரமாக நடந்தான். உலகமே அவனை மதிப்போடு பார்ப்பதாக ஓர் உணர்வு அவனுள்.

சாலையில் எதிர்ப்படுவோரின் எவரது பார்வையும் இவனை விடவில்லை. தெரிந்தவர்களும், தெரியாதவர்களுமாகப் பலர் வணக்கம் தெரிவித்தனர். இடுப்பளவிலிருந்து தலைவரை பலவிதமாகக் கைகளை உயர்த்தினர். அனைத்தையும், பெருமிதத்தோடு ஏற்றுக் கொண்டான். வண்டிக்காரர்களும், கூலிக்காரர்களும், கரங்கூப்பினர். தெருமுனையில் தூங்கி வழிந்து கொண்டிருந்த 'சோம்பேறிகள் எழுந்து நின்றனர்.

''எந்தா, ரவி ஸாரே, டியூட்டிக்கோ?'' என்ற டீக்கடை நாயரின் குரல் இவனது கவனத்தைத் திருப்பியது. நேற்று வரை ரவி என்று அழைத்தவர் ரவி ஸார் என்றதில் புளகாங்கிதம் அடைந்தான். எல்லாம் இந்த யூனிபார்ம் பெற்றுத் தருவது! புஜங்களைச் சற்றே உயர்த்திக் கொண்டான்.

''ஸ்ட்ராங் டீ ஒண்ணு சாப்பிட்டுக்கிணம் பணும் ஸாரே!'' — அவர் நீட்டிய கிளாஸைப்

புதுவை சந்திரஹரி

பெற்றுக் கொண்டு நிதானமாக ருசித்துக் குடித்துவிட்டு, அவர் எவ்வளவு மறுத்தும் உரிய சில்லறையைக் கொடுத்தான்.

அவனுக்கு நகரின் புறநகர்ப் பகுதி ஒன்றின் காவல் நிலையத்தில் அப்பாயின்ட்மென்ட் ஆகியிருந்தது.

நிலையத்தின் பதிவேட்டில் கையொப்பமிட்டுவிட்டுத் தன் அன்றைய வேலை குறித்த கட்டளைகளுக்காகக் காத்திருந்தான் ரவி.

''இந்தாய்யா போர் நாட் த்ரீ, ஐயா ரெண்டு பூரி செட்டும், காப்பியும் வாங்கியாரச் சொன்னார்'' —என்றார் ஹெட் கான்ஸ்டபிள் இவனிடம்.

'முதன் முதலில் இந்த வேலையா?' என்று சற்றே தயங்கியவன், பின்னர் அவர் நீட்டிய பிளாஸ்கைப் பெற்றுக் கொண்டான். அவர் கடையை மட்டும் கூறிவிட்டுச் சில்லறையே தராதது ஆச்சரியமாக இருந்தது.

ஹோட்டலில் காஷியர், ''சப் — இன்ஸ்பெக்டர் ஐயாவுக்கா'' என்று கேட்டுவிட்டு இவன் நீட்டிய சொந்தப் பணத்தையும் வாங்காமல் சிரித்தார். அதன் பொருள் அவனுக்கு விளங்கச் சற்றுநேரம் பிடித்தது.

நிலையத்திற்குத் திரும்பியவனிடத்தில், இரண்டு கோழிகளையும், காய்கறிப் பையையும் கொடுத்து, அதிகாரியின் வீட்டில் கொடுத்துவரப் பணித்தார்கள்.

இரண்டு தெருக்கள் தள்ளித்தான் வீடு என்றாலும்கூட கொக்... கொர... கொக்... கொக் என்ற கோழிகளைப் பிடித்தபடி வீதியில் செல்வதென்பது மொர மொரப்பான யூனிபார்மில் இருந்த அவனுக்குச் சற்றே சங்கடமாக இருந்தது. நெளிந்து கொண்டே நடந்தான். எதிரில் ஒரே சைக்கிளில் பயணித்த மூன்றுபேர்கள் கூட, 'கோழிகளையும், காய்கறிகளையும் சுமந்து செல்லும் இவனால் என்ன செய்துவிட முடியும்?' என்ற பாணியில் இவனைச் சட்டை செய்யாமலே சென்றது அவனுக்குப் பெருத்த அவமானமாக இருந்தது.

மதியம். சப் — இன்ஸ்பெக்டர் ஒருவனை விசாரித்துக் கொண்டிருந்தார். அறை வாசலில் காவலில் நின்றிருந்த ரவிக்கு அந்த உரையாடல் தெளிவாகவே கேட்டது.

''என்ன வேலை செய்யறே?''

''தச்சு வேலைங்க.''

''ஓஹோ, எந்தக் கட்சி நீ?''

''நான் எந்தக் கட்சியுமில்லீங்க.''

''எம். எல். ஏ., மந்திரி யாரையாவது தெரியுமா?''

''ஒருத்தரையும் தெரியாதுங்க.''

''எந்தச் சங்கத்திலேயாவது இருக்கியா?''

''இல்லீங்க.''

''பெரிய மனுஷங்க யாராவது உன்னை இப்படிப் புகார் தரச் சொன்னாங்களா?''

''இல்லீங்க. நானுத்தாங்க புகார் செஞ்சேன்.''

'பளார்' என்று பேயறை ஒன்று விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தவனின் கன்னத்தில் இறங்கியது.

''அப்புறம் ஏண்டா உனக்கு இந்த வீண் வேலை, ராஸ்கல்?''

''ஐயா, எதுக்காகய்யா என்னை அடிச்சீங்க?''

''எதுக்குன்னு கேக்கறே, படவா?''

'பளார், பளார்' என்று மாற்றி மாற்றிச் சரமாரியாக அவனை அறைந்தார் சப்—இன்ஸ்பெக்டர்.

''பெரிய மகாத்மான்னு நெனப்பாடா ஒனக்கு? எவன் என்ன காய்ச்சினா ஒனக்கென்னடா கழுதை? ஒன் வேலையை நீ பார்க்க வேண்டியதுதானேடா?''

''ஐயா, பள்ளிக்கூடத்துப் பக்கத்துலே இருட்டுத்தனமாச் சாராயம் காய்ச்சுறாங்கய்யா. அந்தப் பக்கமாக் கோயிலுக்குக் கூடப் போவ முடியலேய்யா. அதனாலேதானுங்க புகார் செஞ்சேன்?''

''எதிர்த்தாடா பேசறே, ராஸ்கல்... ஃபோர் நாட் த்ரீ, ஃபைவ் நாட் செவன்...''

ரவியும் இன்னுமொரு கான்ஸ்டபிளும் உள்ளே நுழைந்தனர்.

''தம்பிக்குப் போலீஸ் அடின்னா என்னன்னு கொஞ்சம் காட்டுங்க'' — உத்தரவு பிறப்பித்தார்.

''சட்டையைக் கழட்டு!''

பயந்தபடியே சட்டையைக் கழற்றினான் அந்த ஆள். சற்றைக்குள் பனியன், வேட்டி எல்லாம் உருவப்பட்டுக் கட்டியிருந்த அண்டர் வேரோடு நின்றான் அவன். மற்றொரு கான்ஸ்டபிள்தான் அவனது ஆடைகளைக் களைந்தார். பார்த்துக் கொண்டே நின்றான் ரவி.

''யோவ், காயம் படாமே மொத்துங்கய்யா இவனை.''

சப் — இன்ஸ்பெக்டரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஃபைவ் நாட் செவன் தனது லத்தியில் ஒரு பழந்துணியைச் சுற்றிக் கொண்டு அவனது புஜங்களிலும், தொடையிலும் கெண்டைக்கால், தசைகளிலும் விளாச ஆரம்பித்தார்.

''ஐயா, நான் என்ன தப்புய்யா செய்தேன்? ஏன்யா என்னை அடிக்கறீங்க...? ஐயோ... அம்மா... அப்பா...'' என்று அலறி



''என்னோட குழந்தைக்குத் தலைவரைக் கொண்டு பெயர் வைக்கச் சொன்னது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

''பினுமின்னு வெச்சுட்டார்!''

— ஒய். கே. சங்கர்.

ஞன் அந்த மனிதன்.

லத்தியைக் கையில் பிடித்தபடியே செய்வதறியாது நின்றிருந்த ரவியைப் பார்த்துக் கர்ஜித்தார் அதிகாரி.

"ஏன்யா சும்மா நிக்கறே. தீவட்டி மாதிரி... சாத்துய்யா அவனை!"

ஓங்கிய லத்தியை இறக்க முடியாமல் தவித்தான் ரவி. அவனுக்கு உடலெல்லாம் வியர்த்தது. 'ஒரு பாவமும் அறியாதவனை எப்படி அடிப்பது?'

"டேய் என்னடா சொல்லிக்கிட்டிருக்கேன், நிக்கறே...? இப்ப உனக்குக் காட்டணுமா?" — நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளியபடி ஆவேசமாக எழுந்தார் சப் — இன்ஸ்பெக்டர்.

மரியாதைகுறைந்ததோடில்லாமல், தயங்கினால் தனக்கும் தண்டனை கிடைத்துவிடும் என்று தோன்றியது ரவிக்கு.

கண்களை மூடிக்கொண்டு இவனும் இவன் பங்கிற்கு அந்த ஆளைத் துவைக்க ஆரம்பித்தான். லத்தியைப் பிடித்திருந்த கை ஏறி இறங்கிக் கொண்டிருந்ததே தவிர உள்ளத்தின் பலவீனம் அதிலும் தெரிந்தது.

"இன்னொருதரம் புகார் கொர்னு மேலிடத்துக்கு எழுதினே, காய்ச்சறவனை விட்டே பின்னிருவேன், பின்னி.. பொதுச் சேவையெல்லாம் உட்டுட்டு ஒழுங்காப் பொழைப்பைப் பாரு."

வேட்டியை அவனது முகத்தில் வீசிவிட்டு வெளியேறினார் சப் — இன்ஸ்பெக்டர்.

அன்று மதியம் சாப்பிடவேயில்லை ரவி.

ஆடு மாடுகளைக்கூடச் சண்டித்தனம் செய்தாலொழிய அடிப்பதில்லையே, இங்கு ஏன் இப்படி? அப்படி அவன் என்ன தவறு செய்து விட்டான்? திருடினானா? பொய் சொன்னானா? லஞ்சம் வாங்கினானா? பொதுச் சேவையில் ஈடுபட்ட ஒருவனுக்கா இந்தக் கதி?

ரவியால் நிகழ்ந்தவற்றை ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

'கசாப்புக் கடைக்காரன் போலக் கடமை ஆற்ற வேண்டுமோ? போகப் போகச் சரியாகிவிடுமோ?'

அடுத்தநாள் காலைசூரியன் ஜன்னலில் எட்டிப் பார்த்தபொழுது உறக்கமில்லாத, சிவந்து வீங்கிய கண்களோடு, படுக்கையிலிருந்து எழுந்தான் ரவி. நெடுநேரம் பிரஷை வாயில் வைத்தபடி கொல்லையில் நின்று வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான். பிறகு நிதானமாகத் தலைமுழுகி உடைமாற்றிக் கொண்டு புறப்பட்டான்.

லுங்கி, பனியனோடு கடைக்குள் நுழைந்தவனைப் பார்த்து அவனது தந்தை. "ஏம்பா, டியூட்டிக்குப் போகலே, இன்னிக்கு லீவா?" என்று வினவினார்.

"இல்லே, நான் வேலையை விட்டுட்டேன்." என்று மளிகைப் பொட்டலங்களைக் கட்ட ஆரம்பித்தான் ரவி.

இங்கே ஒரு காந்திசமாதி



கண்ணை உறுத்தியது அந்த முரண்பாடு. அதிர்ச்சி, மனசை நோகடித்தது. இடம்: சென்னை அயனாவரம் பகுதியில், கொன்னூர் நெடுஞ்சாலையில்.

காந்திஜி ஆரம்பித்த சர்வோதய சங்கத்தின் கடை ஒன்று கதர் ஆடைகளையும் கிராமப்புறத் தயாரிப்புகளையும் விற்றுக் கொண்டிருக்கிறது. அதன் அடுத்த கடை — ஒரே ஒரு குறுக்குச் சுவரால் பிரிக்கப்பட்ட அடுத்த கடை — காந்திஜி தீவிரமாக எதிர்த்துப் போராடிய மதுக்கடை!

சுமார் இருபது வருடங்களாகச் சர்வோதய சங்கத்தின் விற்பனை நிலையம் அதே இடத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஓராண்டுக்கு முன்னால் இயங்கி வந்த அண்டைக் கடையான ஓர் அச்சகம் திடீரென்று காணாமல் போய் அந்த இடத்தில் மதுக்கடை வந்து அமர்ந்திருக்கிறது! காந்திஜியின் கொள்கைகளுக்கு இங்கே ஒரு சமாதி எழுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்த்தவோ!

படம், தகவல்: மணிமகன்.


நியூட்ரமுல்
வீரர்களை
உருவாக்குகிறது–
Amul's
Nutramul
மிக நேர்த்தியான பால், மால்ட்,
கோக்கோ இவற்றின் சேர்க்கையே
போதும்...நியூட்ரமுல்
பரம்பரையின் சக்திக்கு!
நியூட்ரமுல் எல்லா
வீரர்களின் உடலும்
உள்ளமும் உரம்
பெற!
ஒவ்வொரு
கோப்பையும்
ஊரமூட்டும்

தேர்தல் கூட்டு பற்றி ராஜீவ் பேசாதது ஏன்?

* எம். இராஜேந்திரன், லால்குடி.

? தமிழ்நாடு தேர்தல் கூட்டு பற்றிப் பிரதமர் ராஜீவ் காந்தி இதுவரை வாய் திறக்கவில்லையே, ஏன்?

! தெரியாதா சேதி! தமிழக இ. காங்கிரஸைப் போயஸ் கார்டனில் அடகு வைக்கிற வேலையெல்லாம் அமுக்கமாக நடந்து விட்டதாம். ஜெயித்தால் ஜெயலலிதாதான் முதலமைச்சர் என்பதையும் ஒப்புக் கொண்டாயிற்றாம். அதனால்தான் மார் தட்டி, சவால் விடுகிற வேலைகளைப் பிறரிடம் விட்டு விட்டு இவர் கண்டு கொள்ளாமல் இருக்கிறாரோ என்னவோ!

* வி. விஸ்வநாத், ஈரோடு — 2.

? கோடை விடுமுறையைக் கழிக்க ஒரு பயனுள்ள வழியைச் சொல்லுங்களேன்!

! ஒழிந்தது போங்கள்! அதற்காகத்தானே வண்ண மயமாகக் கல்கி விடுமுறை மலர் தயாராகிக் கொண்டிருக்கிறது. வாங்கிப் படியுங்கள். அது பயனுள்ள வழி மட்டுமல்ல; சிக்கனமானதும் கூட!

* கே. செல்வராஜ், ராசிபுரம்.

? அரசு ஊழியர்களின் சம்பளத்தைக் கூட்டிக் கொண்டே போகும் அரசு, விலைவாசியை ஏற விடாமல் ஒரு கட்டுக்குள் வைத்திருந்தால் என்ன?

! புத்திசாலிகளைக் கொண்ட அரசு என்பது விலைவாசியைக் கட்டுக்குள் வைத்திருப்பதுதானே தவிர, சம்பளத்தை உயர்த்துவது அல்ல. என்ன செய்வது, நமக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லையே!

* சீர்காழி இராஜா, சீர்காழி.

? தண்ணீர் பிரச்னையை நிரந்தரமாகத் தீர்க்க, இந்தியாவிலுள்ள எல்லா நதிகளையும் இணைக்க வேண்டும் என்று ஜனாதிபதி வெங்கடராமன் கூறியிருக்கிறாரே?

! இந்த விஷயம் இப்போது அல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பே சிந்திக்கப்பட்டு அதற்கானதொரு திட்டமும் போடப்பட்டிருக்கிறது. அதற்குக் 'கார்லண்ட் கெனல் திட்டம்' என்று பெயர். அது ஏன் கிடப்பில் போடப்பட்டது என்பது பற்றி நமது ஜனாதிபதியவர்கள் கவனிப்பது நலம்.

* ஆர். விஜய ராஜ், பெரியகுளம்.

? ப. சிதம்பரத்தை 'சின்னப் பையன்' என்று கருணாநிதி கூறுகிறாரே?

* டி.ஜே.பிரிட்டோப்ரியன், புத்தனம்பட்டி.

? 'தி.மு.க. வைத் தடை செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. வரப் போகும் தேர்தலில் மக்களே அக்கட்சியைத் தடை செய்து விடுவார்கள்' என்கிறாரே சிதம்பரம்?

! இப்படியெல்லாம் ஒரு சாதாரண அரசியல் கட்சிப் பேச்சாளன் பேசலாம். மத்தியில் அமைச்சராக இருப்பவர் பேசலாமா? அதனால்தான் கருணாநிதி அவரைச் 'சிவகங்கைச் சின்னப் பையன்' என்று வர்ணிக்கிறார் போலும்!

* எம். சம்பத், வேலாயுதம் பாளையம்.

? நெடுஞ்செழியன் மீண்டும் தி.மு.க. வில் சேர்ந்தால் அவரது எதிர்காலம் சிறப்பாக அமையுமா?

! ஆக, நெடுஞ்செழியன், தொடர்ந்து ஜெயலலிதா கோஷ்டியிலேயே இருந்தால் அவரது எதிர்காலம் சிறப்பாக இருக்காது என்ற முடிவுக்கே வந்து விட்டீர்களா? பாவம், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதீர்கள்.

* நதிகள் இணைப்பு



* அசம்பாவிதம்




* புரட்சிச் செல்வி



* என்ன செய்யலாம்?





நீங்கள் கேட்டவை — தராசு

* ஆர். ஜெ. பாலன், சிவகங்கை.

? 'போஃபர்ஸ் பிரச்னையை மீண்டும் மீண்டும் எழுப்புவதன் மூலம், எதிர்க்கட்சிகள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசைக் கவிழ்க்க முயற்சி செய்கின்றன' என்று திட்ட அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளது பற்றி?

! போஃபர்ஸ் பிரச்னையை மீண்டும் மீண்டும் அமுக்க முயற்சி செய்வதன் மூலம் தேர்ந்தெடுத்த மக்களையே முட்டாள்களாக்குவதாகாதாமா?

* கு. கணேசன், சென்னை — 15.

? சபாநாயகர் பி. ஹெச். பாண்டியனின் அதிகார வரம்பு பற்றியும் அவர் இன்னும் பதவியில் நீடிப்பது பற்றியும் கேலி செய்து கொண்டிருந்தோமே! அவர் பதவியில் நீடிப்பது சரிதான் என்று இப்போது நீதிமன்றம் கூறிவிட்டதே, இனி என்னங்க செய்யலாம்?

! வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கலாம். அல்லது சீக்கிரம் தேர்தலை நடத்திப் புது சபாநாயகர் வர வழி செய்யலாம்.

* எஸ். தினகரன், வையகளத்தூர்.

? 'புரட்சி செல்வி' என்றால் அர்த்தம் என்ன?

! செல்வியா அல்லது செல்வி அல்லவா என்பதிலேயே அனைவரையும் குழப்பியடிக்கிறாரே. அதுவே புரட்சிதானே!



* டி. சீனிவாசன், சென்னை — 79.

? இஸ்ரேலுடன் டேவிஸ்கப் போட்டியில் விளையாட மறுத்த இந்தியாவுக்கு இப்போட்டியில் கலந்து கொள்ள ஐந்து ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டிருப்பது குறித்துத் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

! இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த போது, இலங்கை அணியுடன் நாம் கிரிக்கெட் விளையாடினோமே — அவ்வாறிருக்க இஸ்ரேலுடன் மட்டும் நாம் ஆட மறுப்பதை எப்படி நியாயப்படுத்துவது? ஒன்று, விளையாட்டில் அரசியல் புக விடமாட்டோம் என்று அரசு முடிவெடுக்கட்டும்; அல்லது அரசியல் புகும் என்றால் அதனைப் பாரபட்சமின்றி நடத்திக் காட்டட்டும்.



* தவணை முறையின் தந்தை

* ஜி. சண்முகக் குமார், திருச்சி — 1.

? உழைத்தால் முன்னேறலாம் என்று உணர்த்திய வி. ஜி. பன்னீர்தாஸ் பற்றி...

! உழைப்பு மட்டும் ஒருவனை உயர்த்தி விடுவதில்லை. சமயோசித அறிவாற்றல் அத்துடன் இணைதல் வேண்டும். பன்னீர்தாஸ் இளம் வயதில் நாளிதழ் விநியோகித்தார். பிறகு பல்வேறு பொருள்களை வீடு வீடாகச் சென்று விற்க ஆரம்பித்தார். வாங்க ஆசை இருந்தும் பணம் இல்லாமல் பலர் கையைப் பிசைவதைக் கண்டார். தவணை முறையின் தந்தையானார். அந்த 'ஐடியா' கடும் உழைப்புடன் இணைய, வாழ்க்கையில் உயர்ந்தார்.

* வி. நாகராஜன், பழனி.

? கவர்னர் அமுல்படுத்திய பதினைந்து கோடி வரிச் சலுகைகளை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றனவே?

! சலுகைகளை எதிர்க்கவில்லை. அவை தொழில் வளர்ச்சிக்கு உதவும் என்பதிலும் யாருக்கும் ஐயமில்லை. நாடாளுமன்றம் நடக்கும் போது, பட்ஜெட் சமர்ப்பித்துச் சில நாட்கள் கூட ஆகாத நிலையில் அவசரம் அவசரமாக ஒரு ஞாயிற்றுக் கிழமையில் அறிவித்ததைத்தான் அசம்பாவிதம் என்கின்றனர். தமிழகம் தேர்தலை எதிர்நோக்கி இருக்கும் போது தரப்பட்ட இந்தச் சலுகைகள் இ. காங்கிரஸின் இமேஜ் வளர்க்கத் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாக எண்ண இடமுண்டு.

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

கே. செல்வராஜ்.
சாலை எண் 14,
9, B.V. நகர்,
இராசிபுரம் 637 408.

செங்கல்பட்டு மாவட்ட ரீ — விசிட்

புதிய கலெக்டர் மனம் வைத்தால்தான் உண்டு!



• கே. எஸ். ஆனந்த்:

செங்கல்பட்டு மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து விட்டு, கடந்த 20.9.87 மற்றும் 27.9.87 தேதியிட்ட கல்கி இதழ்கள் இரண்டில் அந்த மாவட்டத்தின் குறைகள் பலவற்றைச் சுட்டிக் காட்டும் பேட்டிக் கட்டுரைகளும், கலெக்டரின் பேட்டியும் வெளிவந்தன. ஆறு மாதங்களுக்குப் பிறகு, முன்பு நம்மால் சுட்டிக் காட்டப்பட்ட குறைகள் ஏதேனும் களையப் பட்டிருக்கின்றனவா? இதோ நமது ரீ—விசிட் ரிப்போர்ட்!

உருப்படியாக நடந்த சில பணிகளைக் குறிப்பிட வேண்டுமென்றால் — நாம் சுட்டிக் காட்டிய பிறகு, பாடி டி.எம்.பி. நகரில் தாய்—சேய் நல விடுதி திறக்கப்பட்டு விட்டது; தழுதாளிக்குப்பம் என்ற சிற்றூரில் உள்ள ஆரம்பப் பள்ளியில் தற்போது சிமெண்ட் தரை போடப்பட்டுள்ளது என்ற இரண்டு விஷயங்களைத்தான் முதலில் சொல்ல வேண்டும்!

திருவொற்றியூர் ரேஷன் கடைகளில் எடைகளும், அளவுகளும் குறைந்துள்ளதைப் பற்றி முறையிட்ட திருவொற்றியூர் பொது நலக் கூட்டமைப்பின் கடிதத்தில், எடையளவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, தமது கடிதம் மூலம், சில ரேஷன் கடைகளில் திடீர்ச் சோதனையிட்டு, எடை குறைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார். மேலும் உரிமம் பெறாத தெரு நாய்களைக் கடந்த அக்டோபர் — நவம்பரில் ரூபாய் மூவாயிரம் செலவில் பிடித்து அழித்துள்ளதாகத் திருவொற்றியூர் நகர அலுவலர் தெரிவித்துள்ளதாகவும் எழுதியிருக்கிறார்.

வளசரவாக்கத்தில் சுமார் 75 பேர் 'நாராயணி அபார்ட்மெண்ட்'டில் ஃப்ளாட்டுகள் வாங்க, எழும்பூரிலுள்ள ஒரு கட்டட காண்ட்ராக்டரிடம் பணம் கொடுத்துவிட்டு, ஃப்ளாட்டுகளை முடித்து வாங்க பட்ட அவஸ்தைகள் ஓரளவு தீர்ந்து, அவை மேற்படி எழுபத்தைந்து பேருக்கும் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால் ஒவ்வொருவரும் தமது ஃப்ளாட்டுகளைக் குடியிருப்பதற்கு ஏற்றதாக உருவாக்க, கட்டட காண்ட்ராக்டரிடம் ஒப்புக் கொண்ட தொகைக்கு மேல், தமது சொந்தப் பணம் சுமார் பதினைந்தாயிரம் வரை செலவழித்ததாகவும் சொன்னார்கள். (இத்தனை மாதத்தில் அல்லது இத்தனை வருடத்தில் ஃப்ளாட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு, ஒப்படைக்கப்படும் என்ற ஷரத்து, காண்ட்ராக்டரின் ஒப்பந்தத்தில் காணப்படாதது, அவருக்குச் சாதகமாகவே இருந்திருக்கிறது. ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் போது இதை ஃப்ளாட் வாங்குவோர் கவனிப்பது நல்லது.) எப்படியோ, இரண்டு வருட மன உளைச்சலும், அலைச்சலும் ஓய்ந்து, ஃப்ளாட்டு உரிமையாளர்கள் இனியாவது நிம்மதியாக இருக்க நமது வாழ்த்துக்கள். முதலில் கடன் தொகை கொடுக்க மறுத்து, பிறகு விண்ணப்பதாரர்களுக்குக் கடன் தொகை அளித்த HDFC நிறுவனத்துக்கு நம் பாராட்டுக்கள். இப்போது இதே காண்ட்ராக்டர், பொன்னேரியில் ஃப்ளாட்டுகள் கட்டத் துவங்கியிருப்பதாகவும், இதை வாங்கும் பொது மக்கள் தாம் பட்ட கஷ்ட நஷ்டங்களை படக்கூடாது என்றும் வளசரவாக்கம் அன்பர்கள் நல்லெண்ணத்தோடு பிரார்த்



* தமுதாளிக்குப்பம் — ஊராட்சித் துவக்கப் பள்ளி: இப்போது பழுது பார்க்கப்பட்டுச் சிமெண்ட் தரை போடப்பட்டு விட்டது.

தனே செய்கிறார்கள்!

இனி —

தீர்க்கப்படாத பிரச்னைகள் பக்கம் திரும்புவோம்!

பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, வேங்கைவாசல் பஞ்சாயத்து, ஐந்தாவது வார்டு உறுப்பினர் கே. எஸ். ஆனந்தைச் சந்தித்த போது, வேங்கை வாசல் ஊராட்சிமன்றத் தலைவர் மீது கொடுத்த பதினாறு ஊழல் குற்றச்சாட்டுக் களின் மீது (ஏப்ரல் முதல் தேதி வரை), மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். அந்தக் குற்றச்சாட்டுக்கள் எதுவும் ஆதாரமற்றவை என்று ஊராட்சிமன்றத் தலைவர் ஏழுமலை நமக்கு ஒரே வரியில் எழுதிவிட்டாலும், அவர் சுமார் மூன்றரை லட்ச ரூபாய் வரையில் ஊழல் செய்திருப்பதற்கான விவரங்களை ஆனந்த் மறுபடி எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆனந்தும் அவரது நண்பர்களும் குற்றச்சாட்டுக்களைக் கொடுத்ததற்காகப் பஞ்சாயத்துத் தலைவரால் அவதிக்குள்ளானதையும் குறிப்பிட்டார். ஆட்சித் தலைவர் மட்டத்தில் உரிய விசாரணை நடைபெற்று நியாயம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

குரோம்பேட்டை நியூ காலனி குடியிருப்போர் நலச் சங்கத்தின் தலைவர் சந்தானம், நாம் மறு விஜயம் செய்யப் போகும் நாளை முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொண்டு, சுமார் பன்னிரண்டு குடியிருப்போர் நலச்சங்கங்களின் தலைவர்களையும் செயலாளர்களையும் ஒரே இடத்தில் குழுமச் செய்திருந்தார். நியூ காலனி, குறிஞ்சிநகர், புருஷோத்தமன் நகர், பாரதிபுரம், எம். ஜி. நகர், டாக் லேபர் போர்டு காலனி, பி. பி. ஆர். நகர், என். ஜி. ஓ. காலனி, நேரு நகர், நேதாஜி நகர், பத்மநாபநகர், பதினைந்தாவது வார்டு காலனி இவற்றிலிருந்து



* புதிய கலெக்டர் சமீர் வியாஸ்: ஆர்வத்தோடு இருக்கிறார்...

மேற்படி பிரதிநிதிகள் ஆர்வத்தோடு கலந்து கொண்டு, ஆவேசத்தோடு பேசிப் பல்லாவரம் நகராட்சியின் அக்கறையின்மையையும், அதனால் விளைந்து வரும் சுகாதாரச் சீர்கேட்டையும் விலாவாரியாக எடுத்துக் கூறினார்கள்.

நகராட்சியிடம் மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியிருந்தும், கழிவு நீரை எடுப்பதில்லை; ராட்சஸச் சாக்கடைகள் காலனிக்குள்ளே வாயைப் பிளந்து கொண்டு துர்நாற்றம் வீசும் நிலை; நகராட்சியின் இடுகாட்டில் வசதிக்குறைவு போதாது என்று வெட்டியானின் அதிகபட்ச வசூல்; இடுகாட்டை அடுத்தே பெட்ரோல் பங்க்; பாலாற்றுக் குடிநீர் வழங்காமை; தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு



* நாராயணி அபார்ட்மெண்ட்: ஒரு வழியாகப் பிரச்னை ஓய்ந்தது!

• குரோம்பேட்டை: கோயிலைச் சுற்றியும் வெள்ளம் தான்!



நீர்; குடியிருப்புப் பகுதியின் அருகேயே ஆட்டுச் சந்தை; குரோம்பேட்டை அரசு மருத்துவமனையின் அவலமான நிலைமை; ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிக் குறுகிப் போன ஜி. எஸ். டி. நெடுஞ்சாலை; தியேட்டர்களி லேயே கறுப்பில் விற்கும் டிக்கெட்டுகள் என்று சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிட் டாலும், குரோம்பேட்டைக் குறைபாடுகள் பற்றி ஒரு தனி இதழே வெளியிடும் அளவுக்கு விவரங்களை எடுத்துச் சொன்னார்கள் பிரதி நிதிகள். கருமாரி அம்மனின் கோயிலைச் சுற்றி, தண்ணீர் தேங்கியிருக்கும் ஒரு புகைப் படத்தைக் கொடுத்தார் ஓர் அன்பர். (கல் வெர்ட்டுக்காகக் காத்திருக்கும் கருமாரி என்று போடுங்கள் என்றார்!)

குரோம்பேட்டை ரயில் நிலைய அடிப் படைத் தேவைகள், பயணிகளின் நலன், ஸ்டேஷன் பார்டர் ரோடு செப்பனிடுதல் — இவையனைத்தையும் குரோம்பேட்டை ரயில் உபயோகிப்போர் மன்றத் தலைவர் கே. எஸ். ஏ. கபீர் சுட்டிக் காட்டினார். இவர் தமிழ்நாடு நுகர்வோர் சங்க செக்ரட்ரி ஜென ரலும்கூட. (இவர் அறவழியில் போராடு வதைப் பாராட்டாத நபர்களே பல்லாவரத் தில் இல்லை எனலாம்!) இவர்களது குறைகள் யாவும் ஆட்சித் தலைவரின் பார்வைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன என்பதை நாம் இங்கே சொல்லி விடுகிறோம்.

ஏற்கெனவே கலெக்டர் பாண்டியன் அவர்களிடமும், அவருடன் இருந்த பிற அதிகாரிகளிடமும் தெரிவிக்கப்பட்ட குறை கள் தவிர, மறு — விஜயத்தின் போது இன்னும் சிலர் பல இடர்களையும், இன்னல் களையும், குறைபாடுகளையும் நம் கவனத் துக்குக் கொண்டு வந்திருக்கின்றனர்:

•• பொன்விளைந்த களத்தூரில் ஏரிப் பிரச்னை, சாலைப் பிரச்னையோடு, சாகுபடியே இல்லாமல் வரி கட்டும் பிரச்னை.

•• திருவள்ளூருக்கும் பெருமந்தூருக்கும் இடையிலுள்ள இலுப்பூருக்குப் போக்கு வரத்துச் சாலை இன்மை; குடிநீர் வசதி; சுடு காட்டுப் பாதை இன்மை.

•• செய்யூர் வட்டத்தை அடுத்த இரணிய சித்தி கிராமம் மாரிமுத்தாலம்மன் கோயி லுக்குச் சொந்தமான நிலத்தைத் தனியார் ஒருவர், கோயிலுக்கோ, அரசுக்கோ எதுவும் செலுத்தாமல், தாமாகவே அனுபவித்து வரும் அவலம்.

•• ஒளிக்கை பஞ்சாயத்துக்குட்பட்ட சின்ன ஐயன்குளம் காலனியில் இன்னும் திறக்கப் படாத சத்துணவுக் கூடம்; குடிநீர் வசதி இன்மை; மோசமான சாலை.

•• கோவளத்தையும் கேளம்பாக்கத்தை யும் இணைக்கும் பாலம் பழுதடைந்து இரண்டு வருடங்களாகியும் இன்னும் செப்ப னிடப்படவில்லை. மருத்துவமனையோ, டாக் டரோ இல்லை. இத்தனைக்கும் கோவளம் சுற்றுலா வளர்ச்சிப் பகுதியாக அறிவிக்கப் பட்டிருக்கிறது!

•• முப்பது வருடங்களுக்கு மேலாகக் குடி நீர் கிடைக்காமல் தவிக்கும் வெண்கத்தூர் கண்டிகை கிராம மக்கள் (திருவள்ளூர் வட்டம்).

•• காஞ்சி நகர வீதிகளில் மண் குவிப்பு, சாக்கடை துர்நாற்றம், ஒதுக்குப்புறமான சிறு நீர்க் கழிவறை இல்லாமை.

•• செங்கை கூட்டுறவு வீடு கட்டும் சங்கம், அண்ணாநகரை ரூபாய் இரண்டு லட்சத்துடன் செங்கை நகராட்சிக்கு மாற்றி இரண்டு வரு டங்கள் ஆகின்றன. ரோடு போடுவதற்கும்,



"எங்க டாக்டர் செக் — அப் செய்யற துக்கு முன்னாடி அவருடைய கம்பவுண் டர் ஒரு தடவை செக் — அப் செய்துடு வாரு.

"எதுக்கு...?"

"பணம் இருக்கான்னு தெரிஞ்சுக்கத் தான்!"

— கடுவை கோபால்சாமி.

கழிவுநீர் வாய்க்கால் கட்டுவதற்குமே இந்தப் பணம். ஆனால் இதுவரை 15000 ரூபாய் கூட செலவிட்டிருக்குமா என்பது சந்தேகம்! உலக வங்கி உதவியுடன் இங்கே கட்டப்பட்ட ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் சீந்துவாரின்றி இருக்கிறது.

•• பரங்கிமலை ரயிலடியில் பேருந்துகள் போக்குவரத்துக்கு ஏற்ப, சுரங்கப் பாதை அமைக்காத நிலை; தமிழக அரசின் நெடுஞ்சாலைப் பிரிவு மாற்றுத் திட்டம் தீட்டி ஸ்கூட்டர், மாருதி கார், போகிற சிறிய சுரங்கப் பாதை அமைக்க யோசனை நடத்துவதாக உள்ள பரிதாப நிலை!

•• உத்தரமேரூரின் குறைகள் என்று பட்டியலிட்டு மருத்துவமனை, மாஜிஸ்திரேட் கோர்ட், துணைச் சிறை, நியனைப்பு நிலையம், பாரத ஸ்டேட் வங்கி, இவை எதுவுமே இல்லை — ஆனால் தாலுகா அந்தஸ்து மட்டும் பெற்றுவிட்டது என்று சுட்டிக்காட்டும் நண்பர்கள் நற்பணி மன்றக் கடிதம்.

•• குடிநீர் வசதி இல்லாத கிழக்குத் தாம்பரம் ஆனந்தபுரம் மக்கள்.

•• ஸ்ரீபெரும்புதூர் தாலுகா பின்னைப்பாக்கம் கிராமத்தின் பெரிய ஏரிக்குச் செய்ய வேண்டிய மராமத்து வேலைகள், கால்நடை மருத்துவமனையின் தேவை.

•• தணிகாசலம் நகர், பொன்னியம்மன் மேட்டிலிருந்து வந்த கோரிக்கைகள்: 'பாலாஜி நகரில் இருந்து தொடங்கும் எங்கள் நகரின் பிரதான சாலையைச் சீர் அமைக்க வேண்டும்; நகருக்குத் தெரு விளக்குகள் வேண்டும்.'

•• திருநின்றவூரின் இடுகாடு பொதுக்கழிப்பிடமாக மாறிவிட்ட அவலநிலை.

இப்போது புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் சமீர்வியாஸ் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். அப்போது மறைமலை நகர் மாநாட்டு வேலைகளிலும், பிரதமரின் விஜயம் காரணமாகப் பாதுகாப்புப் பணிகளிலும், தினசரி வேலைப் பளுவிலும் மூழ்கியிருந்த வியாஸ், பிரச்னைகளையும், கேள்விகளையும் தனியே எழுதி அனுப்பினால் கட்டாயமாக விவரங்களைச் சேகரித்துப் பதில் அளிப்பதாகக் கூறினார். பொது மக்கள் தொடர்பு அதிகாரிகளும் தகவல்களைச் சேகரிக்க உதவுவதாகக் கூறினர். கலெக்டர் இப்போதுதான் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டவர் என்பதால், நாமும் பல்வேறு பிரச்னைகளையும் சுருக்கமாகத் தொகுத்துக் கொடுத்ததோடு, முன்பு செங்கல்பட்டு மாவட்டப் பிரச்னைகள் பற்றி வெளியான இரண்டு கல்கி இதழ்களையும் அனுப்பியிருக்கிறோம். விரைவில் அவரிடமிருந்து பதில் கிடைக்குமென்றும் நம்புகிறோம்.

— சாருகேசி

தளபதி திடமதி:

ஓஹோ! அங்கேயும் ஜனாதிபதி ஆட்சியா?



''முந்தா நாள் நடந்து முடிந்த உப்பு சத்தியாகிரஹம் வெறும் மோசடி என்பதற்குச் சாட்சியம் இருக்கிறது! அது என்ன என்று கேட்பீர்களானால், — இது வெறும் கண்துடைப்பு நாடகம் இல்லையென்றால், இதில் கலந்து கொண்ட நூறு பேருக்கும் அரசு தியாகிகள் பென்ஷன் தந்து கௌரவித்திருக்க வேண்டாமா?''

— வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை — 7.

திடமதி: எங்கள் கோரிக்கையை ஐ. நா. மந்திரி சபை வரை கொண்டு செல்வோம்...!

நிருபர்: ஐ. நா. மந்திரி சபையில்லே; ஐ. நா. சபைதான்.

திடமதி: ஒகோ! அங்கேயும் ஜனாதிபதி ஆட்சி நடக்குதா?

— எஸ். என். ராஜராஜன், கோணக்கரை





தலைவர்: என்னய்யா, வாசலிலே யாரோ கூச்சல் போட்டுக்கிட்டிருக்காங்க...?


திடமதி: ஒண்ணுமில்லிங்க; நம்ம மாணவர் இயக்கத் தலைவரோட அப்பா வந்து, 'ரொம்பச் சின்ன வயசிலேயே என் புள்ளைய அரசியலிலே இழுத்துட்டீங்க; இப்ப அவனுக்கு எழுதப் படிக்கக் கூடத் தெரியலே'ன்னாரு. 'பதறாதீங்க, முதியோர் கல்வி திட்டம் எதுக்கு இருக்கு? அதிலே சேர்த்துரலாம்'னு சமாதானம் பண்ணி அனுப்பிச்சுட்டேன்!

— ஆர். சம்பத் குமார், பெங்களூர்.

''லாரிகள் மூலம் கூட்டங்களுக்கு ஆட்களைக் கொண்டு வருவதற்குத் தடை விதிக்க வேண்டுமாம்; சில நாளேடுகள் விஷமத்தனமாக எழுதுகின்றன! லாரிகளில் தொண்டர்கள் வரத் தடை விதித்தால் பஸ்ஸின் கூரை மீது அமர்ந்து வர எங்களுக்குத் தெரியாதா? அதற்கும் தடை விதித்தால் ரயில் கூரை மீது ஏறி வர மாட்டோமா? அதையும்தான் தடை செய்து பாருங்களேன்! போயிங் விமானத்தின் இறக்கைகள் மீது கூட உட்கார்ந்து வருவோம்!''

— க. ரவிந்திரன், ஈரோடு.

தளபதி திடமதி போட்டியில் அதிக பட்சப் பரிசான ரூபாய் நானூறை வளர்மதி ஆசைத்தம்பி பெறுகிறார். அவருக்கு நமது வாழ்த்துக்கள். அடுத்து க. ரவிந்திரன், எஸ். என். ராஜராஜன் ஆகிய இருவரும் இரண்டு திடமதி துணுக்குகள் பிரசுரமானதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய பரிசுத் தொகையும் இரட்டிப்பாகிறது: தலா ரூபாய் ஐம்பது பரிசு பெறுகிறார்கள்.



இருள் வரும் நேரம்

6

டாக்டர் ராம்பிரகாஷ் அவள் முணு முணுத்த அந்த விநோத வார்த்தையை ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டார். ஏஸிடி! பல் தேய்த்துச் சமையலறைக்குப் போய்க் காப்பி போட்டார்.

''அய்யோ, நீங்க காப்பி போட்டுத்தான் ஆகணுமா?''

''ஏன் அம்ரு? உதவி செய்யக் கூடாதா?''

''செய்யக் கூடாதுன்னு இல்லே. காப்பி போடறேன் பேர்வழின்னு பாலேப் பொங்க வைப்பீங்க. ஒண்ணு நீர்க்கப் போடுவீங்க. இல்லே ஒரு மணிக்கு ஒரு சொட்டுங்கருப் பல பொடியைப் போட்டுத் திணிப்பீங்க. காப்பி போடறதிலேயும் ஒரு ஆர்ட் இருக்கு. அதுக்குத்தான் நான் இருக்கேனே. நீங்க உங்க வேலேயைக் கவனிங்க, போதும்!''

''என் வேலே என்ன?''

''சம்பாதிக்கிறது. தினம் ராத்திரி தொந்தரவு பண்றது!''

காப்பி இன்று சரியாக வந்திருந்தது. தூங்கிக் கொண்டிருந்த அம்ருவை எழுப்ப லாமென்று யோசித்த போது வாசல் அழைப்பு மணி ஒலித்தது. கதவைத் திறந்து பார்த்ததில், வர்ஷாவும், பாலாவும் நின்று கொண்டிருந்தார்கள்.

''குட்மார்னிங்'' என்றாள் வர்ஷா.

காவி வண்ணத்தில் சல்வார் கமீஸ் அணிந்து. அதன்மேல் கிளிப் பச்சையில் போர்த்தியிருந்தாள். இந்த வேளேயிலும், இவள் ஆடையின் நிறத்தையும் துல்லியத்தை யும் கவனிக்கிறோமே என்று தமக்குள் குற்ற உணர்வுடன் யோசித்து ''வா, வர்ஷா'' என்றார். ''உக்காரு!''

பாலா நேராக அவரிடம் வந்து, ''என் அனுதாபத்தைத் தெரிவிக்க வார்த்தையே இல்லே. அவங்க எப்படி இருக்காங்க?'' — என்றான்.

''தூங்கறா.''

''ஐ ஸப்போஸ் ஷி இஸ் நாட் ஹர்ட் மச்?''

''ஷி இஸ்! உடம்பில, மனத்தில ரெண்டி லேயும் பலத்த காயங்கள்!''

''ஸாரி'' என்றாள் வர்ஷா. அவள் கண் களில் கண்ணீர் வரம்பிட்டது.

''அவங்களேக் கண்டுபிடிச்சு, அப்படியே சொட்டுச் சொட்டா ரத்தம் வர்ற மாதிரி அங்கம் அங்கமா வெட்டிப் போடணும் முதல்ல!'' என்றான்.

''உக்காருங்க.''

''எப்படி ஆச்சு ப்ரொபஸர்?''

''வர்ஷா அதைப் பத்தி விவரமாப் பேசற மனநிலேயில இல்லே நான். உங்களுடைய விஸிட்டே இப்ப எனக்கு ஒரு மாதிரி உறுத் தல்தான். ஸாரி, நான் தனியா இருக்க விரும் பறேன்.''

வர்ஷா எழுந்திருக்கவில்லே. பாலாதான் எழுந்து ''வா போகலாம். அவர் சொல்வது உண்மைதான்!''

வர்ஷா எழுந்து அவரருகில் வந்து அவரை நேராகப் பார்த்து.

''இந்தச் சமயத்தில் உங்களுக்கு ஆதரவா ஏதும் செய்யத் தயாரா இருக்கிறேன் ஸார்!''

''ஆறுதல் எனக்குத் தேவையில்லே வர்ஷா! காயம் எனக்கில்லே! அவளுக்கு'' என்று அறையைக் காட்டினர்.

''போய்ப் பார்க்கலாமா?''

''வேண்டாம் ப்ளீஸ். அவளேக் கொஞ்ச நாள் டிஸ்டர்ப்ன்ஸ் இல்லாமப் பார்த்துக்க விரும்பறேன்.''

''உங்களுக்கு?''

சுஜாதா

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்.''

''யூனிவர்சிடியில எச்.ஓ.டி. கிட்ட ஏதாவது?''

''ஒண்ணும் வேண்டாம். எல்லாம் கோபி பார்த்துப்பார். வர்ஷா, ரொம்ப தாங்க்ஸ். உன்னைச் சரியாக் கவனிச்சுப் பேசக் கூடிய நிலையில இல்லை நான்!''

அவர்கள் கிளம்பும்போது, ''வர்ஷா! இன்னொரு விஷயம். இந்தச் செய்தியை அதிகம் யாருக்கும் சொல்ல வேண்டாம். எந்த விதமான வதந்தியும் வேண்டாம். யாராவது கேட்டால் எனக்கு எதுவுமே தெரியாதுன்னு சொல்லிடு. என்ன பாலா? உனக்கும்தான்!'' என்று எச்சரித்தார்.

''சரி ப்ரொபஸர்'' என்றான் பாலா.

பாலாவின் மோட்டார் சைக்கிளின் பின்னால் ஏறிக் கொண்டு செல்லும் போது, வர்ஷா ஒரு முறை திரும்பி டாக்டர் ராம் பிரகாஷின் ஜன்னலைப் பார்த்த போது, அவரும் அவளைப் பார்த்த பார்வையில் அனுதாபங்களை மீறிய ஒரு நேசம் இருந்தது.

காப்பி ஆறிவிட்டது. அதன் ஆடையை நீக்கிவிட்டுக் குடித்தார். அறைக்குள் எட்டிப் பார்த்த போது, அம்ருதா ட்ராங்க்விலைஸரின் முழு ஆதிக்கத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். சற்று நேரம் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். டெலிபோன் அடிக்க அதை ஓடிப் போய் எடுத்தார். ''டாக்டர் ராம்பிரகாஷ்? பத்மினி பேசறேன்.''

''யாரு?''

''பத்மினி ராஜ்.''

''ஓ, டாக்டர் பத்மினி! குட்மார்னிங்!''

''என்ன விஷயம்?''

''ராத்திரி அம்ருவைச் சில பேர் பலாத்காரம் பண்ணிட்டாங்க கப்பன் பார்க்கில!''

''மைகாட்! எப்படி ஆச்சு?''

''டாக்டர், அந்த விவரமெல்லாம் இப்ப முக்கியமாப் படலை எனக்கு. விதி மேல நம்பிக்கை ஏற்பட்டுடும் போல இருக்கு டாக்



மனைவியையே அடகு வைக்கும் பசி!

ஒரிஸ்ஸா மாநிலத்தில், 'மன்டோபட்டா' என்ற இனத்தினர், பசியைப் போக்கிக் கொள்ளத் தங்கள் மனைவிமார்களையே அடகு வைக்கின்றனர்! எலிவளைகளைக் குடைந்து, அவை சேமித்து வைத்திருக்கும் உணவுப் பொருட்களைப் பறித்து உண்ணுமளவுக்கு வறுமை இவர்களை வாட்டுகிறது! இச்சம்பவங்களைக் குறிப்பிட்டது, ஒரிஸ்ஸா சட்டசபையில் ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ.தான்!

ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்; தகவல்: ஆர். லதா.

டர். எப்ப வர்றீங்க?''

''மே ஐ டாக் டு ஹர்?''

''ஷி இஸ் ஸ்லீப்பிங்.''

''அப்ப ஒரு பத்து மணிக்கு ரவுண்ட்ஸ் முடிச்சுட்டு வர்றேன். அவங்களை ஏதும் டிஸ்டர்ப் பண்ணாம இருங்க.''

''இல்லை'' என்றார். சற்று யோசித்து ''பத்மினி, இந்த விஷயத்தைக் கொஞ்சம் கான்பிடென்ஷியலா வெச்சுக்கங்க. பப்ளிஸிட்டி வேண்டாம்.''

''சொல்ல வேண்டாம் ஸார். பத்து மணிக்குப் பார்க்கலாம், என்ன?''

படுக்கையறையில் ஏதோ விழுந்த சப்தம் கேட்க, ராம்பிரகாஷ் அவசரமாக அறைக்குச் சென்றார். அம்ரு படுக்கையில் உட்கார்ந்திருந்தாள். ''என்ன அம்ரு?'' என்றார்.

''தண்ணி கொட்டிப் போச்சு.'' என்றாள்.

''என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா?'' அவளருகில் உட்கார்ந்து கொண்டு உதட்டில் காப்பி வைத்துப் பருக வைத்தார்.

''தண்ணி இல்லை, இது காப்பி!'' என்றாள்.

''ஆமாம் அம்ரு.

''நீங்க போட்டீங்களா?''

''ஆமாம்.''

கொஞ்ச நேரம் கழித்து ''நல்லாயிருக்கு காப்பி'' என்றாள்.

மறுபடி கண்கள் லேசாகச் சுழற்ற ஆரம்பிக்க, ''உங்ககிட்டச் சொல்லிடணும்'' — என்று இழுத்தாள்.

''என்ன அம்ருதா?''

''பஸ் வேண்டாம்! பஸ் கூடாது!''

''பஸ் வேண்டாம். சரி!''

''நான் உங்க கூட எந்தக் கல்யாணத்துக்கும் வரலை இனிமே!''

''சரி.''

''என்னை டிவோர்ஸ் பண்ணிடுவீங்களா?''

''சே, பைத்தியம். அந்த மாதிரியெல்லாம் பேசாதே.''

''பேசலை, ஒண்ணும் பேசலை. என்னைத் தள்ளி வெச்சுடாதீங்க!''

கேட்டுப் பார்க்கலாமா என்று தோன்றியது. ''அம்ரு! ஏஸிடின்னா என்ன?''

''ஏன், எதுக்கு?''

''தூங்கறப்ப ஏஸிடின்னு சொல்லிக்கிட்டு இருந்தியே!''

''தெரியாது. தெரிஞ்சால் சொல்லிடறேன். நிச்சயம் சொல்லிடறேன். என் மேல கோவமில்லையே?''

படுத்துக் கொள்ளும்போது, ''உடம்பு பூரா வலிக்கிறது. முழிஞ்சாக் காப்பி போட்டிருப்பேன், இல்லை?'' என்றாள். அப்படியே பேசிக் கொண்டே தூங்கிப் போய்விட்டாள்.

யுனிவர்ஸிடிக்குப் போக விருப்பமில்லை. குளிக்கத் தோன்றவில்லை. பசித்ததை இன்னொரு காப்பி சாப்பிட்டு அடக்கிக் கொண்டார். எழுதி வரும் புத்தகத்தில் ஓரிரண்டு பக்கங்கள் தொடர முயற்சி செய்தார். பேனா நகரவில்லை. பகல் பதினொரு மணிக்குப் போலீஸ் ஜீப் வந்து, ஒரு புதிய அதிகாரி இறங்கி வந்தார்.

''மார்னிங் டாக்டர் ராம்பிரகாஷ்! என் பேரு தர்மராஜன்....

''டிஸிபி வந்தாரா?''

''இல்லையே. காலையிலேயே போயிட்டாரே?''

''என்னைத்தான் உங்க கூட வரச் சொன்னார். அதுக்குள்ள அவரே மனசு மாறிட்டார். உங்க ஒய்ஃப்தானே?''

''ஆமாம்.

''வருத்தப்படறேன். ஒரு வாரத்துக்குள்ள குற்றவாளியை உங்க முன்னால கொண்டு நிறுத்திடறேன். இப்பவே கப்பன் ஏரியாவில அக்கம்பக்கத்தில, ரிச்மண்ட் சர்க்கிள்லேருந்து துவங்கிச் சிவாஜி தியேட்டர் பின் பக்கம், இந்த ஏரியாவில எல்லாம் ஜோனிரோடு சந்து பொந்துகளிலெல்லாம் விசாரிக்கத் துவங்கி விட்டோம். அகப்பட்டுக்குவாங்க. உங்க மனைவி ஏதாவது சொன்னாங்களா?''

''இல்லை. அவளை ஒரு வாரத்துக்கு ஏதும் தொந்தரவு செய்ய வேண்டாம்னு தோணுது.

தர்மராஜன் சற்று இரட்டை நாடியாகப் பெரிய மீசையை நீவி விட்டுக் கொண்டு, கழுத்தே தெரியாமல் சீருடைக்குள் தன்னைத்



ராணுவப் போட்டி

இந்தியா வருடம் தோறும் ராணுவத்திற்காகச் சுமார் 9,000 கோடி ரூபாயைச் செலவிடுகிறது. பாகிஸ்தான் வருடம் தோறும் ராணுவத்திற்காகச் செலவிடும் தொகை சுமார் 3,000 கோடி ரூபாய்.

இந்திய ராணுவத்தில் சுமார் பதினைந்து லட்சம் வீரர்கள் இருக்கிறார்கள். பாகிஸ்தான் ராணுவத்தில் 6,44,000 வீரர்கள் இருக்கிறார்கள்.

இந்தியா வருடம்தோறும் வல்லரசு நாடுகளிலிருந்து அதாவது வெளிநாட்டிலிருந்து சுமார் 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள ராணுவத் தளவாடங்களை இறக்குமதி செய்கிறது. பாகிஸ்தான் அந்நிய நாட்டிலிருந்து சுமார் 480 கோடி ரூபாய் மதிப்புள்ள ராணுவத் தளவாடங்களை இறக்குமதி செய்கிறது.

இந்தியா வருடம்தோறும் சுமார் ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள ராணுவத் தளவாடங்களைச் சின்னச் சின்ன நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. பாகிஸ்தானோ வருடந்தோறும் அந்நிய நாடுகளுக்குச் சுமார் முப்பது கோடி ரூபாய் மதிப்புள்ள ராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி செய்கிறது!

தகவல்: மூர்த்தி கிருஷ்ணன்.

இணைத்துக் கொண்டவர் போலத் தோன்றினார். கையில் கறுப்பு மணிக்கயிறும், இடுப்பு வளையமும் அணிந்திருந்தார். குச்சிக்குப் பாலீஷ் போட்டது போலப் பளபளத்தது. ஓர் அறை அறைந்தால் எதிராளி கதிகலங்கிப் போய்விடுவான் போல ஆகிருதி. கலபமாக யாரையும் அடித்துவிடுவார் போல இருந்தார். "டிஎஸ்பி போன் பண்ணினால், தர்மராஜன் வந்திருந்தார்னு சொல்லுங்க. ரொம்பச் சத்தாய்க்கிறார். என் ஜூரிஸ்டிக்ஷன் ஸார் அந்த ஏரியா. இப்பத்தான் பட்ரோலுக்குன்னு ஒரு ஜீப் வாங்கி ரேடியோவெல்லாம் பொருத்திப் பெருமையாப் பேசிக்கிட்டிருந்தேன். முதல் கேஸே மானத்தை வாங்கிடுச்சு. குளே மகனுக! பாருங்க ஒரு அடி. புடனியில ஒரு அடி. எல்லாத்தையும் கக்க வெச்சிடலாம். தமிழ்க்காரப் பையங்க! தமிழுங்கதான் மானத்தை வாங்கறாங்க, ஸார், இந்த மாதிரி ஆளுங்க!"

"இதுக்கெல்லாம் தமிழ், கன்னடம் ஏதும் கிடையாது தர்மராஜன்."

"வாஸ்தவம்தான். எ ரேப் இஸ் எ ரேப் எல்லா பாஷையிலும்!"

தர்மராஜன் போனதும் டாக்டர் ராம்பிரகாஷ் அம்ருவுக்குப் பசிக்கும் என்று டிபன் காரியரில் எடுப்புச் சாப்பாடு கொண்டு வரலாம் என்று நினைத்தார். பக்கத்து வீட்டு அன்னம்மாவின் மகளைக் கூப்பிட்டுத் "தேன்மொழி, ஆண்ட்டி தூங்கிக்கிட்டு இருக்காங்க, நான் சாப்பாடு எடுத்து வர்றேன்..."

இதற்குள் தேன்மொழியின் தாய் ஜன்னலுக்குப் பின்னாலிருந்து, 'இங்கே வா, தேன்மொழி'' என்று அழைத்து, அவர்கள் வீட்டிலிருந்து சாப்பாடு கொடுப்பதாகச் சொன்னாள். ராம்பிரகாஷுக்குத் தயக்கமாக இருந்தது. அவருக்குத் தேவை அனுதாபமில்லை, தனிமை.

இப்போதே இந்தக் கணமே அம்ரு எழுந்திரு என்று அவளை உசுப்பி, அடுத்த ப்ளேனுக்கு எங்கேயாவது டிக்கெட் வாங்கிக் கொண்டு மறைந்து, கரைந்து போகலாம் என்று தோன்றியது. இன்னும் எத்தனை பார்வைகள்? எத்தனை கேள்விகள்? எத்தனை முதுகுக்குப் பின்னால் குசுகுசுப்புகள், "போறார் பாரு. அவர்தான் டாக்டர் ராம்பிரகாஷ். இவங்க சம்சாரத்தைத்தான் கப்பன் பார்க்கில வெச்சு..."

காமத் ஓட்டலின் வாசலில், 'சுடச்சுட 'மிட்டே' பத்திரிகை விற்றுக் கொண்டிருந்தார்கள்.

அதில் கொட்டை எழுத்தில்......

YOUNG WIFE GANG RAPED

(தொடரும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



கொஞ்சமே பிஜ், கொஞ்சுமே பளபளப்பு
மிஞ்சுமே பிஜ், மிச்சமே பணம்.
ஸூப்பர் பிஜ்—
பாத்திரங்களுக்கு அளிக்கிறது பளபளப்பு...ஒளி விடும் நட்சத்திரம் போல! பாத்திரங்களுக்கு மட்டுமல்ல...தரை, வாஷ்-பேஸின், டைல்ஸ், கதவு மற்றும் ஜன்னல்களின் கண்ணாடிகள் இவை அனைத்திற்கும் பளபளப்பு அளிக்கிறது. பிஜ்—சிறிது உபயோகித்தாலே சிறப்பான பளபளப்பு. விலையும் குறைவு—சிக்கனமோ சிக்கனம்.
BIZ
SUPER
BIZ
multipurpose
CLEANING
POWDER
SUPER
BIZ
multipurpose
CLEANING
POWDER
கோத்ரெஜ்
அளிக்கும்
ஸூப்பர்
பிஜ்
துலக்கும் பவுடர்
வேலை...விலையை விட அதிகம்

உங்களுக்குத் தெரியுமா?

கோகுல் பவுடர் தூய சந்தனமும், ஸ்டார்ச் கலவையும்
இணைந்துள்ளதால் வியர்க்குருவை அகற்றுகிறது.
கோகுல் பவுடர் கோடையில் சருமத்தை மென்மையாக
பாதுகாக்கிறது.

நாள் முழுவதும் கமழும் நறுமணக்கலவை தனித் தன்மை
வாய்ந்தது. ஏனெனில் மிக உன்னதமான வாசனை
திரவியங்கள் கொண்டு தயாரிக்கப்படுவது.

கோகுல் பவுடர் இனிமை !
தென்றல் போல் குளுமை !

கோகுல் - தூய சந்தனத்தில் தயாரான ஒரே உன்னதப் பவுடர்.



